இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 247 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 15 திங்கட்கிழமை 31.07.2017

முச்சந்தி முரளி



பொலிஸாருக்கே காவல் போட வேண்டும் போல கிடக்கு....

# கொக்குவிலில் நேற்று 2 பொலிஸார் மீது துரத்தித் துரத்தி வாள்வெட்டு

நீதிமன்றக் கட்டளையை வழங்கச் சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த கும்பலால் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மோட்டார் சைக்கிளில் சென்ற கோப்பாய் பொலிஸார் இருவர் மீது 10 மோட்டார் சைக்கிள்களில் வந்த 30 பேர் கொண்ட கும்பல் கலைத்து கலைத்து வாளாலும், கைக்கோடரியாலும் சரமாரியாக வெட்டிக் கொத்தியது. அவர்களைக் கடுங் காயங்களுக்கு உள்ளாக்கியது. கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் நண்பகலில் பட்டப் பகலில் நடந்த இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதி >> 25



### தனு ரொக் மீதும் வாள்வெட்டு

யாழ். ஜூலை 31

மானிப்பாயைச் சேர்ந்த இளைஞன் மீது, மோட்டார் சைக்கிள்களில் >> 25

## தெற்கில் குழப்பத்தை ஏற்படுத்தவே யாழில் வன்முறைகள் கட்டவிழ்ப்பு

கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

தென்பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தவே யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. வன்முறை >> 25

உதவி வேண்டுமா ?

## வலிந்து கேட்ட மகிந்தவுக்கு நிதியமைச்சர் மங்கள பதிலடி

கொழும்பு, ஜூலை 31

நாட்டை ஆட்சி செய்வதற்கு உங்களது உதவி அவசியமில்லை என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர முன்னாள் அரச தலை >> 25

## ராஜீவ் கொல்லப்பட்டிராவிடின் இனப் பிரச்சினை தீர்ந்திருக்கும்

கூறுகின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 31

இந்தியாவின் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டிருக்காவிட்டால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டிருக்கும் என்று தெரிவித்துள்ள இரா.சம்பந்தன், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பொறுப்பு தனக்கு உள்ளது என்ற பலமான உணர்வு இந்தியாவுக்கு உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். >> 25

## அரசியல் விழிப்புணர்வை உடன் ஏற்படுத்துவது அவசியம்

வடக்கு முதலமைச்சர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 31

எமது மக்களிடையே அரசியல் அறிவைப் பரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் >> 23

## அதிரடிப் படை சிறப்புப் பிரிவு யாழ்ப்பாணத்துக்கு விரைவு

யாழ்ப்பாணம், ஜூலை 31

பொலிஸார் மீதான தாக்குதல் வாள் வெட்டுச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ள நிலையில், அதிரடிப் படையின் அதி சிறப்புப் பிரிவினர் யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாதம் 21ஆம் திகதி மண் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோர் கடலோரக் காவற்படையினர் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். மறுநாள் 22ஆம் திகதி நல்லூரில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றி >> 25

## 3 மட்டங்களில் அதிகாரப் பகிர்வு

அதுதான் இப்போது தீர்மானம்;
செனட் சபை குறித்தும் ஆராய்வு
புதிய அரசமைப்புப் பற்றி சம்பந்தன் விளக்கம்



>> 24

ஜூலைக் கலவரம்:

### அரசின் கருத்துக்கு விக்கி விசனம்

யாழ்ப்பாணம் ஜூலை 31

"இலங்கையில் இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தின் போது 7 தமிழர்கள் மட்டுமே உயிரிழந்தார் என கொழும்பு அரசு கூறுமானால் சாதாரண மக்களே சிரிப்பார்கள்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜூலைக் கலவரத்தில் 7 தமிழர்கள் மட்டுமே உயிரிழந்தார் என்று அமைச்சர் சாகல ரட்ணாயக்க நாடாளுமன்றில் >> 25

அம்பாந்தோட்டை விவகாரம்:

## மகிந்த ஆட்சிக்கு வந்தவுடன் உடன்பாடு கிழித்தெறியப்படும்

சகோதரர் பசில் சூளுரை

கொழும்பு, ஜூலை 31

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததும், அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கிய உடன்பாடு கிழித்தெறியப்படும் என்று முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

உடுகம்பொலவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், "மகிந்த ராஜபக்ச அரசுத் தலைமையைப் பொறுப்பேற்றதும், அம்பாந்தோட்டை துறைமுகம் மீண்டும் >> 06

## தப்புமா ரவியின் அமைச்சுப் பதவி?

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டு அரசில் உள்ளோரும் ஆதரவு

கொழும்பு, ஜூலை 31

அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த அணி கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் கூட்டு அரசிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

மத்திய வங்கியின் பிணைமுறி விநியோக மோசடி தொடர்பில் விசாரணை நடத்திவரும் அரச தலைவர் ஆணைக்குவின் முன்னிலையில் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க >> 06

### மாகாண சபை அதிகாரத்தை மாற்ற புதிய அரசமைப்பில் சிறப்பு ஒழுங்கு

கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 31

"மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங் >> 25

## வறட்சி பாதித்த மக்களுக்கு உலர் உணவு உதவி வழங்க மைத்திரிபால அவசர பணிப்பு

கொழும்பு, ஜூலை 31

பல மாவட்டங்களில் நிலவும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார் என >> 06



நல்லூர் கந்தன்
அழகைக் காண
கண் ஆயிரம் வேண்டுமே

நல்லூர் கந்தன்
உற்சவக் காட்சிகள்
தினமும்
newuthayan.com இல்



# நாட்டின் அபிவிருத்திக்கு மலையகப் பெண்கள் பெரும் பங்களிப்பு

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெருமிதம்

ஹற்றன், ஜூலை 31
பெருந்தோட்ட பகுதிகளில் 58 வீதமான பெண்கள் உழைப்பாளிகளாக உள்ளனர். அவர்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்றனர்.

இவ்வாறு நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னான்டோ புள்ளே தெரிவித்தார். சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய தாய்ப்பாலூட்டும் வாரத்தின் ஆரம்பநிகழ்வுஹற்றன்பிரின்ஸ்மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

பெருந்தோட்ட துறையில் பெண்கள் வேலைசெய்வதால்குழந்தைகளுக்கான பாலூட்டல் தவிர்க்கப்படுகிறது. தாய்மாருக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்டுவது அத்தியவசியமானது.

குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்டுவதனூடாக சிறந்த ஆரோக்கியமான அறிவான, திடமானமனிதனை இந்தசமூகத்துக்கு வழங்க முடியும்.

குழந்தைகளுக்குமுறையாகதாய்ப்பால் வழங்காவிடின்குழந்தைகளுக்குநோய் எதிர்ப்புசக்திகுறைவடைந்துநோய்ஏற்படுகின்றது. குழந்தைகளுக்குகட்டாயமாக 6 மாத காலத்திற்கு தாய்பால் வழங்க வேண்டும். கர்ப்பிணி தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் போசாக்குவேண்டுமென்பதால்அரசால் மாதாந்தம்2ஆயிரம்ரூபாபெருமதியான போசாக்குணவுவழங்கப்பட்டுவருகிறது. என்றார்.

(ற-ஜ)

# தொடர் போராட்டங்களால் மக்களுக்கே பெரும் பாதிப்பு

## அரச தலைவருடன் பேசிய பின்பே முடிவு; பெற்றோலிய தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 31
தொடர்போராட்டங்களைநடத்துவதற்கு பெற்றோலிய தொழிற்சங்கங்கள் தயாராக இல்லலை. இதனால் அதிகம்பாதிக்கப்படுவது மக்கள் மட்டுமே. அரசதலைவருடனான கலந்துரையாடலின் பின்னரேதொழிற்சங்கங்களின்அடுத்தகட்ட நடவடிக்கைகளை எம்மால் அறிவிக்க முடியும் என்று பெற்றோலிய வளத்துறை தொழிற்சங்கங்களின் ஒன்றிய ஏற்பாட்டாளர் டீ.ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

அரச தலைவருடன் இடம்பெறவுள்ள சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும்செவ்வாய்க்கிழமை(நாளை) அரசதலைவர்எம்முடன்கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்திருந்தார். ஆனால் நேற்று (நேற்றுமுன்தினம்)ஹம்பாந்தோட்டை துறைமுகம்தொடர்பானஉடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிலையில்அரசதலைவர்எம்மைச்சந்திப்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது அரச தலைவர் எம்மை தவறாக வழிநடத்தமுயல்கிறார்என்றுதோன்றுகிறது. இந்த சந்திப்பை அடுத்து எமது அடுத்த கட்டத் தீர்மானங்கள் எடுக்கப்படும். தொடர்போராட்டங்களைநடத்துவதால் பாதிக்கப்படுவதுமக்கள்மட்டுமே. கடந்த காலங்களில் எமது தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தின. தொடர் போராட்டங்களைமுன்னெடுக்களமக்கு விருப்பம் கிடையாது. அரச தலைவர் எமக்குச் சாதகமாக பதிலை கூறுவார் என்று எதிர்பார்க்கின்றோம். என்றார்.

(ற-ஜ)



# கேப்பாபிலவு தொடர்பில் நல்ல செய்தி விரைவில்

## இராணுவத் தளபதி கூறினார் என வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்ஜூலை 31
கேப்பாபிலவு காணிகளை விடுவிக்கஇராணுவத்துக்கு பணம்வழங்கப்படும்என்று கூறப்பட்டிருப்பதால் விரைவில் நல்ல செய்தி அனைவருக்கும் கிடைக்கும் என்று இராணுவத்தளபதிதெரிவித்தார்.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இலங்கை இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடந்தது. முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

மகேஷ்சேனநாயக்க எனது பழைய நண்பர். அவர் யாழ்ப்பணத்தில் கட்டளைத் தளபதியாககடமையாற்றிய போது பல தடவைகள் நாம் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். தற்போது இலங்கையின்இராணுவத்தளபதியாக என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம். தான்இராணுவத்தளபதியாகபதவிஉயர்வுபெற்று சென்ற போது இங்குள்ளவர்களுக்கு கூறியது போலமயிலிட்டி துறைமுகம் இராணுவத்தினரால் விடுவிக்கப் பட்டுள்ளதுஎன்றுஅவர்எனக்கு சுட்டிக்காட்டினார்.

அதைப்போன்று பல விடயங்கள் படிப்படியாக இடம் பெறும்என்றும் கூறினார்.

இராணுவத்தினர் வசம் உள்ள தொலகட்டி பண்ணை இன்னும் விடுவிக்கப்பட வில்லை.

அந்தப் பகுதியின் 2 கிலோ மீற்றர் தூரம் வரையான சாலைப் பகுதி தற்போதும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. 5 கிலோமீற்றர் தூரம்வரைசுற்றிபயணிக்க வேண்டியுள்ளது என்று அந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டினேன்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதிதெரிவித்தார் என்றார்.

(ற-8)



# சைட்டம் கல்லூரிக்கு எதிர்ப்பு: நுவரெலியாவில் கவனவீர்ப்பு



ஹற்றன், ஜூலை 31
சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நுவரெலியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள்ஊர்வலமாக நுவரெலியாமாவட்டமருத்துவமனை வளாக பகுதியிலிருந்துஹாவாஎலியநகர் ஊடாக நுவரெலியா நகரத்தை நோக்கிச்சென்றனர். அதனைத் தொடர்ந்து நுவரெலியா தபால் நிலையத்துக்கு முன்பாக பதாதைகளை ஏந்தி கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். கை ஒலி பெருக்கி ஊடாக சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வாசகங்களைத் தெரிவித்தனர். "சைட்டத்தை அரசு மூட வேண்டும் அல்லது அரசுடமையாக்க வேண்டும், கல்வியைதனியார்மயப்படுத்துவதை நிறுத்த வேண்டும்" உள்ளிட்டகோரிக்கைகளையும் அவர்கள் முன் வைத்தனர்.

(ற-ஜ)

# தமிழரசுக் கட்சி கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை கிளைக் கூட்டம் நேற்று தமிழரசுக் கட்சி பருத்தித்துறைக் கட்சி அலுவலகத்தில்தொகுதிகிளைத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

"15 வருடத்துக்கு முன்னர் நம்மிடத்திலிருந்த ஒற்றுமை தற்போது இல்லை. கட்சிக்காக பாடுபடுபவர்களுக்கு உதவிகள் கிடைப்பதில்லை. எமது கட்சி அற்ப சந்தோசத்துக்காக கிடைக்கும் போகும் உரிமைகளைமட்டும்கருத்தில் கொள்ளாது தமிழர்களின் உரிமையை வெல்லுவது எப்படி என்ற இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது" என்று அதில் கருத்துத் தெரிவித்த பருத்தித்துறை தொகுதிச் கிளைச் செயலாளர் பி.ஜி. தங்கவேலு குறிப்பிட்டார்.

கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான வே. சிவயோகன், ச. சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-23)



# கேப்பாபிலவு போராட்டம் தீர்வின்றி தொடர்கின்றது

முல்லைத்தீவு, ஜூலை 31
கேப்பாபுலவு மக்களின் நில மீட்பு போராட்டம் தீர்வுகள் எவையும் முன்வைக்கப்படாத நிலையில் நேற்றும் தொடர்ந்தது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் கேப்பாபுலவு இராணுவ தலைமையகத்துக்குமுன்பாகமுன்னெக்கப்படுகின்றது. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தியே இந்தக் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு சொந்த நிலங்கிளிலிருந்து வெளியேறியநிலையில்பொதுமக்களுக்குசொந்தமான காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தினர். அவர்கள் மாதிரிக்கிராமங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

(ற)

# கணவன், மனைவி விபத்தில் உயிரிழப்பு

## ஆலயத்துக்குச் சென்று திரும்பும் போது துயரம்

கொழும்பு, ஜூலை 31

ஆலய வழிபாட்டுக்குச் சென்று வீடு திரும்பிய கணவன், மனைவி விபத்தில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்த விபத்து குருணாகல் நீர்கொழும்பு பிரதான வீதியின் கொஸ் கஸ் சந்தியில் நேற்று நடந்தது.

வானும், மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த கணவன், மனைவி தம்பதெனிய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் ஆலயம் ஒன்றில் நடைபெற்ற பூசைவழிபாடுகளில் பங்கேற்று தம்பதியினர் மோட்டார் சைக்கிளில் பன்னல நோக்கி வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இதன் போது கிரியுல்லவிலிருந்து பன்னல நோக்கிப் பயணித்த வான் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ஐ)

# கல்வியில் பின்னடைவே சீரழிவுக்குக் காரணம்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 31

நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் தொடர்பில்லாத காலகட்டத்தில் சீராக இருந்த வடக்கு மாகாணத்தில் இன்று போதைப்பொருள், கலாச்சார சீரழிவு, சமூக விரோதச் செயல்கள் மலிவடைந்துள்ளன. அதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளம் தலைமுறையினருக்கான வசதி வாய்ப்புக்கள் அதிகரித்து அவர்களிடையே கல்வி அறிவு பின்னடைந்து செல்கின்றமையே பிரதான காரணம்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நாவந்துறை கிளை நூலகத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;

கல்வியில் சிறந்து விளங்கிய ஒரு பண்பட்ட எமது சமூகம் இன்று கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் நிற்கின்றது. சமூகப்பழக்கவழக்கங்கள் குன்றியவர்களாக போதைப் பொருள், கலாசார சீரழிவு ஆகியவை மலிந்த ஒரு இனமாக நாங்கள் மாறியிருப்பது வேதனைமிக்கது.

கட்டுப்பாடுகள் மிகுந்த காலத்திலும், வடபகுதியானது அடிப்படை வசதிகள், மின்சாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு ஆகிய வசதிகள் அற்ற நிலையிலும் கல்வியில் மிகவும் சிறந்த நிலையில் இருந்தது. வடமாகாணத்துக்கு வெளியே உள்ள ஏனைய மாகாணங்களுடன் வர்த்தகத் தொடர்புகள் அற்ற நிலையிலும் எமது மக்களிடம் பணப் புழக்கம் அந்தக் காலகட்டத்தில் சீராக இருந்தது. ஆனால் இன்று கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வர்த்தகம் கொடி கட்டிப் பறக்கின்றது. தொடர் மின்சாரம் கிடைக்கின்றது. போக்குவரத்து ஒழுங்குகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. தொலைத்தொடர்பு வசதிகள் உள்ளங்கை வரை வந்து விட்டது. மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள், நிறுத்தி வைக்கக்கூட போதிய இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அனைத்துத்தர மக்களிடமும் இன்று கடன் தொல்லை நிறைந்து காணப்படுகின்றது.

நிதிநிறுவனங்கள் எமது வர்த்தகர்கள் மற்றும் மக்களிடமிருந்து பணத்தை வெளியே எடுத்துச் செல்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் எங்கள் பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். இவற்றையும் மீறி ஒருசில பிள்ளைகள் கல்வியில் ஆர்வமாக இருக்கின்றார்கள் என்றால் அவர்களையும் குழப்புவதற்கு விதம் விதமான அலைபேசிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வீதியில் செல்கின்ற பிள்ளைகள் சித்தசுவாதீனம் அற்றவர்களோ என சந்தேகிக்கப்படக் கூடிய வகையில் அவர்கள் தனியே சிரிப்பது போலவும், தம்முடன் தாமே கதைத்துக் கொண்டு செல்வது போலவும், எமக்குத் தோற்றமளிக்கின்றார்கள். உற்றுப் பார்த்தால் காதுக்குள் சிறிய ரக தொலைபேசி. அதுவும் போதாதென்று செல்பி எடுக்கச் சென்று அருமந்த உயிர்கள் பல தொடருந்துத் தண்டவாளங்களிலும், கடற்கரையிலும் ஆற்றிலும் தொலைக்கப்படுகின்றன. கலாசார சீரழிவுகள், தீயபழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தக்க வகையில் இந்தச் சாதனங்கள் மாறிவிட்டன. எமது இளைய தலைமுறையைச் சரியான பாதையில் பயணிப்பதற்கான அனைத்து உதவி ஒத்தாசைகளையும் வழங்க வேண்டிய பொறுப்பு எம்மத்தியில் காணப்படுகின்றது.

-என்றார். (ற-ஐ)



# யாழ். அங்காடிக் கடைகள் கையளிப்பு நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்ட அங்காடி கடைத் தொகுதி நேற்று வர்த்தகர்களிடம் கைளிக்கப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கடைத்தொகுதியைக் கையளித்தார்.

"யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான பழைய மின்சார நிலையம் அமைந்திருந்த இந்தப் பகுதியில் சுமார் 12.75 மில்லியன் ரூபா செலவில் 76 கடைத்தொகுதிகளைக்கொண்ட ஒரு பிரமாண்டமான கடைத் தொகுதி மாநகரசபையால் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரப் பகுதியில் வர்த்தகக் கட்டடங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தாலும், முனீஸ்வரன் வீதியில் அகலிப்புப் பணிகளுக்காகவும் அங்காடிக் கடைகள் இடமாற்றப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முனீஸ்வரன் வீதி கோட்டைப்பகுதிக்கும் பேருந்து நிலையப் பகுதிக்கும் இடையேயான பாதசாரிகள் நடந்து செல்கின்ற ஒரு முக்கிய வீதியாக அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாநகரசபை இவ்வாறு பெருந்தொகை நிதியை நகர அபிவிருத்திக்கும், நகரை அழகிய, சுத்தமான ஒரு நகரமாக மிளிரச் செய்வதற்கும் செலவிட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான அபிவிருத்திகளுக்கு நாமும் எமது பங்களிப்புகளைச் சரியாக மேற்கொள்ளல் வேண்டும்.



வர்த்தகர்களின் கடை வாசல்களில் பொலித்தீன், கடதாசிகள், பெட்டிகள் இன்னும் பிற குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதன் மூலம் நகரமே குப்பையாகக் காட்சியளிக்கின்றது. வர்த்தகர்கள் எமது கடை, எமது சுற்றாடல், எமது சமூகம் என்று எமது மனோநிலையை விரிவுபடுத்த முன்வர வேண்டும்." என்று நிகழ்வில் கருத்துத் தெரிவித்த வடக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்கள் கலந்துகொண்டனர். (ஐ-8)

# ஒருங்கிணைப்புகுழுத்தீர்மானத்தை மீறிக் காணிக்குப் பாதுகாப்பு மதில்

கிளிநொச்சி, ஜூலை 31

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தின் ஏ 9 வீதியோரம் உள்ள காணியை வைத்தியசாலைக்கே வழங்க வேண்டும் என ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதும், அந்தக்காணியின் உரிமையாளர் என்று கூறப்படுபவர் காணிக்கு சுற்றுமதில் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை தற்போது அமைந்துள்ள பகுதிக்குள் உள்ள ஒரு ஏக்கர் காணியின் உரிமையாளர் ஒருவர் காணியில் சுவீகரிப்புக்கு முன்னர் கல்வீடு அமைத்திருந்தார். அந்த வீடு தற்போதுவரை தாதியர் விடுதியாக இயங்குகின்றது.

வீட்டின் உரிமையாளர் தற்போது ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து திரும்பி வீட்டுடன் கூடிய ஒரு ஏக்கரில் முக்கால் ஏக்கர் காணியை வைத்தியசாலைக்காக சுவீகரித்து மிகுதி கால் ஏக்கரைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பித்திருந்தார். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியும் அந்தக் காணியை உரிமையாளரிடம் வழங்கலாம் என்று பரிந்துரைத்திருந்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில இது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அந்தக் காணியை தனியாருக்குவழங்கமுடியாது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் கடந்த 13ஆம் திகதியகடிதம் மூலம் காணி உரிமைகோரியவருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் காணிக்குச் சுற்றுமதில் அமைக்கும் பணிகளை நேற்று முதல் காணிக்கு உரிமைகோரியவர் ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## தாய்ப்பால் ஊட்டுவதன் அவசியம் உணர்த்த விழிப்புணர்வு ஊர்வலம்

ஹற்றன், ஜூலை 31
குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஹற்றனில் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.
இந்த ஊர்வலம் ஹற்றன் மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி நகரின் பிரதான வீதியூடாக மல்லியப்பு சந்தி வரை இடம்பெற்றது.
ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் "தாய்ப்பால் ஊட்டுவதே எனக்குப் பெருமை, தாய்ப்பாலை விட வேறு மருந்தில்லை, தாய்ப்பால் குழந்தைக்கு ஆரோக்கியம் தரும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.
ஊர்வலத்தைத் தொடர்ந்து பிரின்ஸ் மண்டபத்தில் கருத்தமர்வு இடம்பெற்றது. அங்கு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. தேசிய தாய்ப்பால் ஊட்டும் வாரத்தின் ஊடாக தாய்ப்பால் ஊட்டலில் உள்ள முக்கியத்துவத்தை மலையக மக்களும் உணர்ந்து விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதற்காகவே நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
நிகழ்வில் மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் அமைச்சர் பழனி திகாம்பரம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பர்னான்டோ பிள்ளை, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் மத்திய மாகாணசபை உறுப்பினர்கள், தோட்டப்பகுதி சகல சுகாதார மருத்துவ அதிகாரிகள், தோட்ட மருத்துவ உதவியாளர்கள், மருத்துவத் தாதியர்கள், பெருந்தோட்டப் பெண்கள் என பலர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வை சுகாதார போசணை மற்றும் சுதேச அமைச்சு ஏற்பாடு செய்தது. தேசிய தாய்ப்பால் ஊட்டும் வாரம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. (ற-ஜ)



*1983 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆடிப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் முற்றவெளியில் உலகத்தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்று மாலை நடைபெற்றது. தமிழ் இளையோர் அமைப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது. (8)*

## வலித்தூண்டல் அன்னம்மாள் ஆலயத் திருவிழாத் திருப்பலி



யாழ்ப்பாணம், ஜூலை 31
இளவாலை - வலித்தூண்டல் புனித அன்னம்மாளின் வருடாந்தத்திருவிழாத்திருப்பலி நேற்றுக் காலை நடைபெற்றது. அருட்தந்தை பெனட்அடிகளார்தலைமையில் பங்குத்தந்தை அருட்தந்தை பிராயன் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.
அதில்வலித்தூண்டல்பங்கு மக்களும், மாரிசன்கூடல், சேந்தான்குளம், இளவாலை உள்ளிட்ட அயல் கிராம மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் இருந்தும் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.
போரால்சேதமடைந்திருந்த இந்த ஆலயம் தற்போது திருத்தியமமைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ளபழமைவாய்ந்தஆலயங்களில் வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயமும் ஒன்று. இந்த ஆலயம் சுமார் 150 ஆண்டுகளுக்கும் அதிகமான பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டது. ஒவ்வொருவருடமும் ஜூலை மாதத்தின் இறுதிஞாயிறுதினத்தில்திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவது வழமை. (ஐ-ம)

# தோற்றவர்கள் மீண்டும் சவால்விட பன்னாட்டுச் சமூகம் அனுமதிக்காது

### அதனடிப்படையிலேயே எங்கள் விடயத்திலும் அது எமக்கு உதவுகிறது என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 31
"தோற்கடிக்கப்பட்டவர்களை அடிமைகளாக வைத்திருக்கக் கூடாது. அப்படி நடத்தினால்உலகுக்குசவால்விடும் வகையில் மீண்டுமொரு முறை அவர்கள் செயற்படுவார்கள். எனவே தோற்வர்களை பொறுப்போடு நடத்த வேண்டும் என்ற எண்ணம் உலகநாடுகளிடம்ஏற்பட்டது. அதனடிப்படையிலேயே, எங்கள் விடயத்திலும் பன்னாட்டுச் சமூகம் எங்களுக்கு உதவுகின்றது"
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்பருத்தித்துறைக்கிளைக் குழு உறுப்பினர்களைச் சந்தித்துக்கலந்துரையாடுகின்ற போது அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும்தெரிவித்ததாவது:
முதலாம் உலகப் போரில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டிருந்தது. அடிமையாகத்தோற்கடிக்கப்பட்டதாக ஜேர்மனியை உலக நாடுகள் நோக்கின. இதனாலேயே ஜேர்மனியில் கிளர்ச்சி எழுந்தது.
தோற்கடிக்கப்பட்டவர்களை மற்றவர்களுடைய அடிமைகளாகவைத்திருக்கக்கூடாது. அவர்கள் இன்னொருமுறை உலகத்துக்குச் சவால் விடுகின்ற வகையில் செயற்படக் கூடாது. அவர்களையும்நாங்கள் பொறுப்போடு நடத்த வேண்டும் என்கின்ற சிந்தனைகள் உலக நாடுகளிடத்தில் எழுந்தன. இவ்வாறு உலக நாடுகளின் சிந்தனைகள் மாறியதன் பிரதிபலிப்புத்தான் இன்று எங்களுக்குத் தெரிகின்றது.
போரிலே தோற்ற இரண்டு நாடுகளையும் எடுத்துப் பாருங்கள். ஜப்பான்மீதுதான் முதன்முதலில்அணுகுண்டு போடப்பட்டது. இன்றைக்கு ஜப்பான் எங்கிருக்கின்றது? அதன் அபிவிருத்தி எங்கிருக்கின்றது? அங்கு அரசியல் உறுதித் தன்மை எப்படியாக இருக்கின்றது? ஜேர்மனியை எடுத்துப் பாருங்கள். இரண்டாகக் கூறு போட்டார்கள். ஐரோப்பாவிலே அது இன்று பலமான பொருளாதாரநாடாகியிருக்கின்றது.
இந்த அனுபவம்தான் உலக நியதியையேமாற்றிஅமைத்தது. ஓர் போரிலே தோற்பவர்களை அடிமைகளாக உபயோகிக்கமுடியாது. அவர்கள் போருக்குச் செல்வதற்குக் காரணமாக இருந்த காரணிகளைக் கண்டறிய வேண்டும். அவை சரியான விதத்திலே தீர்த்து வைக்க வேண்டும்.
2009ஆம்ஆண்டுக்குப்பின்னர் இதனடிப்படையில்தான் பன்னாட்டுச் சமூகம் எங்கள் விடயத்தைஅணுகியது. எங்களிடத்திலேவந்துஎங்களின் பிரச்சினைஎன்ன? உங்களுடைய இளையோர் ஆயுதம் ஏந்தக் காரணம் என்ன? இதற்குஒருகாரணம்இருக்க வேண்டுமல்லவா? காரணம் இல்லாமல் ஒருவர் தன்னுயிரை மாய்க்க மாட்டார். அதற்கானகாரணம்என்ன? இனியும் இப்படி நடக்கக் கூடாது. நாங்கள் உங்கள் பிரச்சினையைத் தீர்க்கின்றோம். பன்னாட்டுச் சமூகம் எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்ததற்கு இதுதான் காரணம் என்றார். (வ-5)

# பயங்கரவாதச்சட்டத்தில்சிறைகளில் தடுப்பிலுள்ளோரின் விவரம் வெளியீடு

கொழும்பு, ஜூலை 31
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோரின் விவரங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.
பயங்கரவாதத்தடைச்சட்டம் அல்லது அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாத தடுத்து வைக்கப்பட்டுள்ள 84 பேரின் விவரங்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.
லயன் எயார் வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியமை, எம்.ஐ.24ரகஉலங்குவானூர்தியைச் சுட்டு வீழ்த்தியமை, பயணிகள் பேருந்துகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியமை, பொது இடங்களில்தாக்குதல்கள்நடத்தியமை; அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.
அனுராதபுரம், பொலனறுவை, மஹர, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளில் சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 70 சந்தேகநபர்கள் மீது எந்தவித வழக்கும் தொடரப்படாது பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் அயலுறவு அமைச்சர் கதிர்காமர் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்சகாதேவன்மற்றும்ஆரோக்கியநாதன்ஆகியோர்கொழும்புமகசின்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் பாதுகாப்புச் செயலரைக் கொலை செய்யமுயற்சித்த குற்றச்சாட்டில் பொன்னுச்சாமி கார்திகேசு, சிவலிங்கம் அருண், பத்மநாதன் ஐயர் சிறி, சந்திரபோஸ் செல்வச்சந்திரன்மற்றும்ஸ்கந்தராஜாஆகியோர்கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் அரச தலைவர் மற்றும் பிரமுகர்களை இலக்குவைத்துதற்கொலைக்குண்டுத் தாக்குதல் நடத்த உதவிய குற்றச்சாட்டில் ரஞ்சித்சந்திரசிறிபெரேராமற்றும்கந்தவன்கோகுலநாதன்ஆகியோர்கொழும்புமகசின்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோரை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்நடத்த உதவியகுற்றச்சாட்டில்ஜெயராம் இராமநாதன் அல்லது ரமேஸ் என்பவர் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோப்பிள்ள மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் மீதான தற்கொலைக்குண்டுத்தாக்குதலுடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் தம்பிஐயா பிரகாஸ், சண்முகலிங்கம் சூரியகுமார் ஆகியோர் கொழும்புமகசின்சிறைச்சாலையிலும்லக்ஸ்மன் குரே கொழும்பு விளக்கமறியல் சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
அநுராதபுரம்தற்கொலைக் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அப்துல் ஹமீட் உமர்கொழும்புமகசின்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோரை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்நடத்த உதவியகுற்றச்சாட்டில்சண்முகநாதன் தேவகன், பாக்கியநாதன் ஜீரியன், பெனடிக் தேவதாஸ் நிர்மல் மற்றும் சிவராசாசுதன் ஆகியோர்நீர்கொழும்பு சிறைச்சாலையிலும் இராமையா சிவராமலியஸ் தம்பி கொழும்புவிளக்கமறியல்சாலையிலும்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் பிரதி அமைச்சர் தஸநாயக்கவை படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் மெல்கம் திரோன் அல்லது பிரசன்னா நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
கடுபெத்தவில் பயணிகள் பேருந்து மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்என். குகதாஸன்மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
பிலியந்தலவில்பயணிகள்பேருந்துமீதுநடத்தப்பட்டகிளைமோர்க்குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையகுற்றச்சாட்டில்சச்சிதானந்தன் ஆனந்தசுதாகரன் ஆகியோர் மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
அநுராதபுரம்வான்படைமுகாம்மீதானதாக்குதலுடன் தொடர்புடைய குற்றச் 25

## சட்டவிரோத மீன்பிடி: மீனவர்கள் 12 பேர் கைது

மன்னார், ஜூலை 31
மன்னார் விடத்தல் தீவுக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்டமுறையில்மீன்பிடியில் ஈடுபட்ட உள்ளூர் மீனவர்கள் 12 பேர் நேற்று முன்தினம்இரவுகைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினர்தெரிவித்தனர். மீனவர்களிடமிருந்துதடைசெய்யப்பட்டவலைகள், படகு, மோட்டார்க் கருவிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டமீனவர்கள் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ)



## 60 கிலோ மாவா கைப்பற்றப்பட்டது

ஹற்றன், ஜூலை 31
தலவாக்கலையில் வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டி 24

## 30 கிலோ கஞ்சா மீட்பு

கொழும்பு, ஜூலை 31
மொனராகலை மாவட்டம் சியம்பலாண்டுவ பகுதியில் 30 கிலோ 500 கிராம் கஞ்சா போதைப் பொருள் நேற்று மீட்கப்பட்டது. சியம்பலாண்டுவ, மொனராகலை பொலிஸ் சிறப்புப் படையணி இணைந்து 24

## குருதிக் கொடை

இலங்கை வங்கியின் கிளிநொச்சிக்கிளையில்நாளை குருதித்தானம்இடம்பெறும். முற்பகல்9மணிக்குநிகழ்வு ஆரம்பமாகும். வங்கியின் 78ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு கிளிநொச்சிக் கிளையினர் இதனை முன்னெடுக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டது. (4)

## கதிர்காம யாத்திரிகள் 15 பேர் காயம்

கதிர்காமம் ஆலயத்துக்குச் சென்ற யாத்திரிகர்களின் ஜீப் வண்டி தடம்புரண்டது. அதில் 15 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் கதிர்காம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை மருத்துவமனைக்குமாற்றப்பட்டுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது. (ற-ஜ)

சங்கானைப் பிரதேசத்திலிருந்து வெளிவரும்

## பனுவல் 3க்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வலி.மேற்கு பிரதேசத்தில் வெளியிடப்படும் "பனுவல் 03" எனும் மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. பிரதேசத்தின் கல்விப்புலம் சார்ந்தோர்கள், பிரதேச எழுத்தாளர்கள் இலக்கியவாதிகள் மற்றும் துறைசார் ஆர்வலர்களிடமிருந்து மானிடவியல், தொல்லியல், பிரதேச தொன்மங்கள், நாட்டுப்புறவியல், வழக்காறுகள், வரலாறு, சமூகவியல், கலை, இலக்கியம், ஆன்மிகம், ஆவணப்படுத்தல், பண்பாடு பழக்கவழக்கங்கள், பிரதேசத்தின் அபிவிருத்தி சுற்றுலாமையங்கள் மற்றும் பொது விடயங்கள் சார்ந்த துறைசார் தரமான ஆக்கங்கள் கட்டுரை, விமர்சனம், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் பத்தி எழுத்துக்களாக எதிர்பார்க்கப்படுகின்றன.


எனவே துறைசார் ஆர்வலர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் வலி. மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை பிரதேச செயலகம் சங்கானை, எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வலி. மேற்கு பிரதேச செயலர் ச.பிறேமினி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இந்த ஆண்டு இடம்பெறவுள்ள பிரதேச கலாசார விழாவில் "கலாவாரிதி" விருது வழங்குவதற்கு தகுதியானவர்கள் பற்றிய பரிந்துரைப் பிரேரணை களையும் மேற்குறித்த திகதிக்குள் சமர்ப்பிக்க விரும்பு பவர்கள் சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச செயலகமும் வலி.மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து 2015ஆம் ஆண்டுமுதல் "பனுவல்" பிரதேச மலரை வெளியிட்டுவருவது வழமையாகும். (21)

# தொழிற்பேட்டைச் சாலை சீரமைக்கப்படவேண்டும்

## அச்சுவேலி மக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 31

அச்சுவேலி தொழிற்பேட்டைக்கு செல்லும்சாலையைச் சீரமைத்து தருங்கள் என அச்சுவேலி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தொழிற்பேட்டைக்குச் செல்லும் இரண்டு சாலைகளுமே படுமோசமான நிலையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தாவது:

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அச்சுவேலி தொழிற்பேட்டை ஆரம்பமாகி தற்பொழுது பல புதிய தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுகின்றன. தொழிற்பேட்டை அபிவிருத்தி கண்டுகொண்டு செல்கின்றது. ஆனால் இந்த தொழிற்பேட்டைக்குச் செல்வதற்கான சாலைகள் இதுவரை சீரமைக்கப்படாத நிலையில் உள்ளன.

தொழிற்பேட்டைக்குச் செல்வதற்கு இரண்டுசாலைகள்தான்இருக்கின்றன. ஒன்று தென்மூலை என்னும் இடத்தில் இருந்து செல்வது, மற்றையது இராச சாலையூடாக செல்வது. ஆனால் இந்த இரண்டு சாலைகளும் தற்சமயம் எந்த வாகனும் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றன. பாதசாரிகள் நடந்து கூட செல்ல முடியாத நிலையில் காணப்படுகின்றன. அமைச்சர்கள் மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என பலருக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளோம்-என்று அந்த மக்கள் கவலைபட தெரிவித்தனர். இதேஇடத்தில்அரசின் கோழிப்பண்ணையும்இயங்குகின்றது. ஒருமுறை இந்தச் சாலையால் வந்து பாருங்கள் உண்மைநிலை தெரியவரும். இந்தசாலையை உரியவர்கள் சீரமைத்து தாருங்கள். என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21,12)



வட மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் தமது குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு தொகுதி கதிரைகளை ஞானவைரவர் சனசமூக நிலையத்திற்கு வழங்கினார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தலைமை காரியாலயத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் எஸ். வினோராஜ் கலந்து சிறப்பித்தார். (21,108)

# வழிப்பறிக்கொள்ளை தாவடியில் அதிகரிப்பு

## விரைவான நடவடிக்கை அவசியம் எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம்,கோண்டாவில்மேற்கு, தாவடிப் பகுதிகளில் அண்மைக் காலமாகவழிப்பறிக்கொள்ளைச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பாதிக்கப்பட்டவர்களும், ஊர்மக்களும் கவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பில்அவர்கள்மேலும்தெரிவித்ததாவது:

இந்த மாத முற்பகுதியில் கோண்டாவில்மேற்கில்அமைந்துள்ளநயினைநாகபூசணிஅம்மன்சாலையால்இந்த ஆலயத்துக்கு வந்த பூசகரைத் தள்ளி விழுத்திய கொள்ளையர்கள் அவரது கையில்அணிந்திருந்தஅரைப்பவுன் மோதிரத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் மாலை மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளையில் நடைபெற்றுள்ளது. மோட்டார்சைக்கில்வந்த3இளைஞர்களே இவ்வாறு மோதிரத்தைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றார்கள் என தெரிவிக்கப்பட்டது. இந்த மாத இரண்டாம்வாரத்தில்கோண்டாவில்மேற்கில் அமைந்துள்ளதபால்கந்தோர்ச்சாலையால் வந்த முதியவரைத் தள்ளி விழுத்தி , அவரது பணப்பையைப் பறித்துக் கொண்டு கொள்ளையர்கள் மோட்டார்சைக்கிளில்தப்பிச்சென்றுள்ளனர்.

கடந்த ஆடிப் பிறப்பு நாளான 17ஆம் திகதி திங்கட்கிழமை தாவடி இந்துக் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாகஉள்ளகடைஉரிமையாளர்இரவு கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிய வேளை, முச்சக்கர வண்டியில் வந்த இளைஞர்கள் சிலர் அவரைத் தள்ளி விழுத்தி அவரிடம் இருந்த 12 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு இந்த மாதம் 3 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வழிப்பறிக் காள்ளைச் சம்பவங்களுக்கும் ஒரே குழுவினரே காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது - என்றனர்.

அத்தோடு மேலும் சம்பவங்கள் இடம்பெறாதிருக்க விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (28)

## போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 31

வருடந்தோறும்மாகாணமட்டத்தில் நடத்தப்பட்டு வரும் பண்ணிசை.கதாப்பிரசங்கம்.புராண படலம், கோலம்முதலானபோட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து கோரியுள்ளது.

போட்டிகள் செப்ரெமட்பர் மாத நடுப்பகுதியில் நடத்தவிருப்பதால், அதற்கு முன்னர் வலய மட்டத்தில்மேற்படிபோட்டிகளை நடத்தி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விபரங்களை அறிவிக்குமாறு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார். மாகாணமட்டப்போட்டிகள் நடைபெறும்இடம்,திகதிஎன்பன பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21,28)

## ஒருங்ணைப்புக் குழுக்கூட்டம்நாளை

வடமராச்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்நாளை 9மணிக்கு நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டம் இராஜாங்க அமைச்சர் விஜயகல மகேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமுந்திரன், அங்கஜன் இராமநாதன், ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறும். கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். எனஅறிக்கப்பட்டது. (21,173,12)



குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழா நன்றித்திருப்பலிமானிப்பாய்புனிதஅந்தோனியார்ஆலயத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் யோசவ்தாஸ்ஜெபரட்ணம்மற்றும்மன்னார்மறைமாவட்டகுருமுதல்வர்விக்டர்சூசைஇவர்களுடன் விழா நாயகர்களும் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். கடந்த 25ஆண்டுகள் இறைவன் தமக்கு கொடுத்த இந்த வாழ்விற்காக தமதுநன்றிதிருப்பலியை அவர்கள்ஒப்புகொடுத்தனர். (21,103)

## கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்


யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் மனிதவள முகாமைத்துவம் குறுகியகால கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

'இந்த கற்கை நெறியில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். கற்கைநெறி மூன்று மாதக்காலப்பகுதியைக் கொண்டது. கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும்கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப்பிராந்திய நிலையத்தில் நடைபெறும். விண்ணப்படிவங்களைபிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்பாகஅனுப்பிவைக்கவேண்டும்'என பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (21,12)



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (21,9)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 82 வருடங்கள் பழைமை வாய்ந்த முதன்மை மண்டபம் கொழும்பு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்டு வருகிறது. இந்த மண்டபம் 1935ஆம் அண்டில் அமைக்கப்பட்டு 1977ஆம் ஆண்டு முதன் முறை சீரமைக்கப்பட்டது. எனினும் காலப்போக்கில் கல்லூரியின் நிகழ்வுகளை இந்த மண்டபத்தில் நடத்த பாடசாலை நிர்வாகம் பெரும் இடநெருக்கடிகளுக்கு உள்ளானது. கொழும்பு கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அண்மையில் கல்லூரிக்கு வருகைதந்திருந்தார். மண்டபத்தில் இடநெருக்கடிக்கு மத்தியில் மாணவர்கள் தவிப்பதைக் கண்டு நிதி ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்தார். நிதி ஒதுக்கப்பட்டது. இதனையடுத்து மண்டபம் தற்போது சீரமைக்கப்படுகிறது. (21,9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 60 | 60 |
| கத்தரி | 120 | 80 | 120 | 120 | 120 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 60 | 120 | 80 | 120 |
| பாகல் | 180 | 140 | 160 | 120 | 160 |
| க.கிழங்கு | 140 | 120 | 120 | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 110 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 170 | 160 | 120 |
| பூசணி | 100 | 70 | 100 | 100 | 100 |
| தக்காளி | 160 | 160 | 160 | 140 | 120 |
| வாழைக்காய் | 90 | 80 | 80 | 80 | 60 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 200 | 280 | 200 | 250 | 200 |
| புடோல் | 100 | 70 | 80 | 100 | 80 |
| கோவா | 140 | 120 | 150 | 120 | 120 |
| வெண்டி | 100 | 70 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 120 | 120 | 170 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 58 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 110 | 100 | 110 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 220 | 180 | 220 |
| கரட் | 200 | 200 | 200 | 140 | 220 |
| முருங்கைக்காய் | 200 | 80 | 200 | 100 | 200 |

# மருத்துவமனைக்குச் செல்ல மறுத்த மூதாட்டி சில மணி நேரங்களிலேயே உயிரிழந்தார்

## அதீத கடவுள் பக்தியே காரணம் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 31

நோய் ஏற்பட்டபோதும் கடவுள் காப்பாற்றுவார் என்று கூறி நோய்க்குச் சிகிச்சை பெற மறுத்த மூதாட்டி நோய் முற்றியநிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொடிகாமம் அத்தியடிப் பகுதியில் இடம்பெற்றது. மாணிக்க வாசகர் புவனேஸ்வரி வயது 60 என்பவரே உயிரிழந்தார்.

திருமணம்செய்யாமல் சகோதரியின் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த புவனேஸ்வரி அதீத கடவுள் பக்தி கொண்டவர். நோய் வந்தால் கடவுள் பக்தி காரணமாக( ஆண்டவர் காப்பாற்றுவார் எனக் கூறி ) மருந்து உட்கொள்ள மறுத்துவந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை நோயினால் அவர் வாந்தி எடுத்து மயங்கி வீழ்ந்தார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு உறவினர்கள் முச்சக்கர வண்டியில் ஏற்றினர், திடீரென கண்விழித்த அவர் அதிலிருந்து இறங்கி மருத்துவமனைக்குச் செல்லமறுத்து வீட்டுக்குள் சென்றார். இரவு 7 மணியளவில் மீண்டும் வாந்தியெடுத்த மூதாட்டி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. எனினும் மறுநாள் பி.ப.2 மணிக்குப் பின்னரே பொலிஸார் சடலத்தை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

மூதாட்டியின் சாவு தொடர்பாகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அறிக்கைதாக்கல்செய்தனர். பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.சி.இளங்கீரன்மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி, சாவகச்சேரி மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின் போது மூதாட்டிக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதெனவும் உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியுமென மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். (21,9)

# கந்தபுராண எழுச்சிவிழா இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தையொட்டிகந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சிவிழா இடம்பெறவுள்ளது "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" எனும் தொனிப்பொருளில் 4ஆம் நாள் வைபவமான இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.காந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசசெயலாளர் க.கனகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

# சிவில் அமைப்புகளின் அறிக்கை: வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஜூலை 31

ஐக்கிய நாடுகள் சபைக்கு பூகோள கால மீளாய்வு தொடர்பாக இலங்கை சிவில் அமைப்புக்கள் இணைந்து அனுப்பியுள்ள அறிக்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மற்றும் அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.



வவுனியா அருந்ததி மண்டபத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள 7 மாவட்டங்களின் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

4வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் உலகநாடுகள் தொடர்பான மனித உரிமை வளர்ச்சி மீளாய்வுக்காக இலங்கை அரசால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்குச் சமாந்தரமான மற்றும் உண்மையானதுமான ஒரு சிறந்த அறிக்கையை இலங்கை சிவில் அமைப்புக்கள் இணைந்து அனுப்பியுள்ளன. அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக நேற்றுக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக்கலந்துரையாடலை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மொன்லார் உட்பட பல சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை சட்டத்தரணிகள் மற்றும் பல் துறை சார்ந்தவர்கள் இணைந்து ஏற்பாடு செய்தனர். (ற-ஜ)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 600 | 400 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 700 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 200 | 400 | 600 |
| விளை. | 600 | 500 | 500 | 600 |
| முரல் | 400 | 500 | 400 | 600 |
| கும்பிளா | 400 | 400 | 500 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஓரா | 350 | 400 | 450 | 400 |
| திரளி | 300 | 200 | 400 | 300 |
| நகரை | 550 | 150 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 300 | 250 | 400 | 300 |
| மதனம் | 200 | 200 | 300 | – |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 500 | – |
| வாழை | 150 | – | 400 | 400 |

## மகிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மயப்படுத்தப்படும்.

வடக்கு கிழக்கு இணைப்பு நீக்கம் செய்யப்பட்டது போலவே, அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாகச் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடும் நீக்கப்படும். அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்பட்ட ஜூலை 29ஆம் நாள் ஒரு தேசிய துக்க நாளாகும்" என்று தெரிவித்தார். (வ-5)

## தப்புமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைமறுதினம் 2ஆம் திகதி வாக்குமூலமளிக்கவுள்ளார்.

அதன்போது அவர் வெளியிடும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டே அடுத்த கட்ட நகர்வு அரசியல் களத்தில் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டு அரசுக்குப் பெரும் நெருக்கடியை களங்கத்தை ஏற்படுத்திய விடயமாகப் பிணை முறி விவகாரம் பார்க்கப்படுகின்றது. எனவே, இந்த மோசடியுடன் அமைச்சர் ரவி தொடர்புபட்டிருந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆலோசனை நடத்திவருகின்றனர்.

பிணை முறி மோசடி இடம்பெற்ற காலப்பகுதியில் நிதி அமைச்சராக தற்போதைய அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவே பதவி வகித்தார். அலோசியஸின் நிறுவனத்தால் இவருக்கு சொகுசு வீடொன்று வழங்கப்பட்டுள்ளது என ஆணைக்குழு விசாரணைகளில் அண்மையில் தெரியவந்தது. (வ)

## வறட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்த உலர் உணவுத் தொகுதியை அந்த மக்களுக்கு உடனடியாக வழங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியான காலநிலை நிலவும் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான குடி தண்ணீர்த் தேவை உள்ளிட்ட ஏனைய நீர்த் தேவைகளை நிறைவேற்றவும் அதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாக வழங்குமாறும் அரச தலைவர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்' என்று அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (வ-5)

# நாள்பட்ட சிறுநீரக நோய்த் தாக்கத்தால் வவுனியாவில் அதிகளவானோர் பாதிப்பு

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தகவல்



வவுனியா, ஜூலை 31
வவுனியா மாவட்டத்தில் நாள்பட்ட சிறுநீரக நோயின் தாக்கம் வயது வித்தியாசமின்றிபலருக்கும்ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் கிராம அலுவர் பிரிவிலுள்ள சுந்தரபுரம்(பழையகுடிமனை) அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடிகட்டும் குடிதண்ணீர் இயந்திரத்தொகுதியின் திறப்புவிழாநிகழ்வில் முதன்மை விருந்தினராக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்விகற்ற சமூகமே நாட்டின் எதிர்காலத்தைநல்வழிப்படுத்தமுடியும். இதற்கு ஆரோக்கியமான மாணவ சமூகத்தை நாம் உருவாக்குதல் வேண்டும்.

அவ்வாறானவர்களாலேயேஇந்தச் சமூகத்தைஎதிர்காலத்தில்நல்வழிப்படுத்த முடியும். அதற்கு மாணவர்களின் உள, உடல் நலம் சுத்தமானதாகவும், சுகாதாரமானதாகவும் பேணப்படுதல் வேண்டும். அப்படியானவர்ளேஎதிர்காலத்தில்நாட்டுக்கும், வீட்டுக்கும் சிறந்தவர்களாக இருக்கமுடியும். சிறுபரா யத்திலிருந்து நல்ல பழக்கவழக்கங்களை மாணவர்கள்பழகிக்கொள்ளவேண்டும்.

அத்துடன்சுத்தமானகுடிதண்ணீர், ஊட்டச்சத்தான உணவு இவை இரண்டும் மாண வர்களுக்கு முக்கியம். வவுனியா மாவட்டத்தில் நாள்பட்ட சிறுநீரக நோயின் தாக்கம்வயதுவித்தியாசமின்றிபலருக்கும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு பலகாரணங்கள் இருந்தாலும் சுத்தமான குடிதண்ணீரைப் பருகாமையும் ஒருகாரணமாகக் கருதமுடிகிறது.

இதனால்எனக்குவருடாந்தம்ஒதுக்கப்படுகின்ற நிதியில் குறிப்பிட்ட தொகையை குடிதண்ணீர் வடிகட்டும் இயந்திரத்தொகுதிகளை பாடசாலைகளில் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து வருகின்றேன்.

இதுவரை 18 பாடசாலைகளுக்கு இவ்வாறான இயந்திரத் தொகுதிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்த வருடமும் 8 பாடசாலைகளுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் பாடசாலையாக இன்று இந்த இயந்திரத்தொகுதியைதிறந்துவைப்பதில்மகிழ்ச்சியடைகின்றேன்-என்றார்.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்புவிருந்தினர்களாகவவுனியா வடக்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஓமந்தைகோட்டக்கல்விப்பணிப்பாளர், பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ்பொறுப்பதிகாரி, பெற்றோர், அசிரியர்கள், மாணவர்களெனப் பலரும் கலந்து கொண்டனர். (21)

# இரண்டாம் தவணைப் பரீட்சை அட்டவணையால் அசௌகரியம்

## ஆசிரியர்கள் கவலை

கரணவாய் ஜீலை 31
வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் திட்டமிடப்படாத பரீட்சை அட்டவணையால் ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் தற்போது இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. இவை வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நிறைவடையும் நிலையில் மாணவர் தேர்ச்சி அறிக்கைகளுக்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் புதன்கிழமை (2ஆம் திகதியே) நிறைவடைகின்றன.

எதிர்வரும் 4 ஆம்திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் தவணை விடுமுறைக்குப் பாடசாலைகள் மூடப்படவுள்ளன.

இந்நிலையில் இறுதிநாள் முடிவடைந்த பரீட்சை மதிப்பீடுகளை மேற்கொண்டு மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் வழங்குவதில் நடைமுறைச்சிக்கல் காணப்படுவதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

வினாத்தாள்களை அவசரமாகத் திருத்த முற்படும் போது அதில் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எதிர்காலங்களிலாவது இந்தப் பரீட்சைகளை முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தினால் இத்தகைய இடையூறுகளைத் தவிர்க்கலாம் என ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (21,108)

# ஓ.எல்.பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு இன்று விருது

யாழ்ப்பாணம்,ஜூலை 31
2016ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தப் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் அதிசிறந்த பெறுபேறுகளை ஈட்டிய மாணவர்கள் இன்று விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்கம், கனடா டி எவ் எவ் எஸ் இன் ஏற்பாட்டில் நடத்தும் இந்த நிகழ்வு இன்று திங்கள் கிழமை மாலை 4 மணிக்கு கிறீஸ்தவ வாலிபர் சங்கத்தின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தோற்றி கணிதம், உயிரியல், விஞ்ஞானம் உயிர் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம்,வர்த்தகம் மற்றும் கலை ஆகிய பாடப்பிரிவுகளில் மாவட்டத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைக் கைப்பற்றிய மாணவர்கள் பணப்பரிசிலுடன் விருது மற்றும் சான்றிதழ் வழங்கி மதிப்புறுத்தப்படவுள்ள னர்.

அத்துடன் பூபால சிங்கம் நினைவு விவாதப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருதும் விவாதப் போட்டியில் பங்குபற்றிய சகல மாணவர்களுக்குப் பணப்பரிசில் என்பவையும் இந்த நிகழ்வில் மதிப்புறுத்தப்படவுள்ளனர்.

அத்தோடுவன்னியில்நீண்ட காலம் கற்பித்தல் பணியை மேற்கொண்ட ஆசிரியர் மதிப்புறுத்துவதற்கான ஆறுமுக நாவலர் விருது மற்றும் பணப்பரிசில் என்பவனவும் வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர். விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கனடா டி எவ் எவ் எஸ் ஐச் சேர்ந்த எம்.சி. பிரான்ஸிஸ்ஸும் மதிப்புறு விருந்தினர்களாக இலங்கை கிறிஸ்தவ வாலிபர் சங்க தேசிய கவுன்சிலின் தலைவர் நிமல் டி பொன்சேகா, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைவர் எஸ். அமிர்தலிங்கம் ஆகியேரும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (21)



# ௨ஆம் திருவிழா

## பிறவிப் பயணடைவோம்!

சரவணனின்
தாள்பணிந்து
சஞ்சலங்கள்
போக்கிடுவோம்!
பிரணவப் பொருளுணர்ந்து
பிறவிப் பயனடைவோம்!

கன்னித் தமிழ்ஞான
கந்தவடி வேலவனே!
பின்ணிப்
பிணைந்தெமக்குப்
பேராற்றல் தந்திடையா!

வாழும் வகைதெருட்டும்
வண்மையொளிரீ
திண்ணியனே!
சூழம் தீ விணையகற்றிச்
சுந்தரத்தைத் தந்திடையா!

*கலாபூசணம் கலைமாமணி*
*கூத்தாடி வி. சி. குஞ்சிதபாதம்*

## வெண்ணை நல்லூர் உறையும் அருள் குமரா

நாடே திரண்டு நல்லூருக்கு
வந்தாலும்
நீ ஓடியே போக மாட்டாய்
உன் உறைவிடம் நல்லூர்
தானே?
சித்தர்கள் வாழ்ந்து தடம்
பதித்த நல்லூர் தெரு
வீதியிலே
பத்தர்களின் அரோகரா ஒலி
வானைப் பிளக்குது பார்

உன் எழில் கொஞ்சும்
வடிவதனைக் கான
தினந்தோறும் யாழ்
குடாநாடே
மாலை நல்லூரில்
திரள்கிறது பார்

*க. கனகசபை*
*சண்டிலிப்பாய்*

## ஒரு ரூபாய் போதும் கந்தா உன் எழில் முகத்தைக் கான

நான்படும் அல்லல்கள்
கண்டும் இனியும் ஏனோ
பாராமுகம்
எனை நாடிய வினைகள் தீர்க்க
ஓடியு வந்திடுவேன்
திக்கெட்டும் புகழ் பரப்பும்
நல்லூர் கந்தா சூரனைப்
போரில் வென்ற
உன் எழில் கொஞ்சும்
முகத்தைக் கான ஒரு ரூபா
போதும் கந்தா

*கனகசபை*
*சண்டிலிப்பாய்*



## இனிப்பூட்டிய பானங்கள் ஆரோக்கியமற்றவை



★ இனிப்பூட்டிய பானங்களுக்கு பதிலாக சுத்தமான குடிதண்ணீர். இயற்கையான பழச்சாறு (சீனி சேர்க்கப்படாதது)
இளநீர் போன்றவை சிறந்தவை.

★ பாடசாலைகள், வேலைத் தளங்கள் மறறும் பொது இடங்களில் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

★ பாதுகாப்பாகக் குடிதண்ணீரை எம் முடன் எடுத்துச் செல்ல பழகிடுவோம்.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

## உள்ளூராட்சி சபைகளில் இடம்பெறும் வேலைத்திட்டங்களில் சமூகக் கண்காணிப்புக் குழு அவசியம்

### வடக்கு முதல்வரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 31
'வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் இடம்பெறும் வேலைத்திட்டங்களில் சமூகக் கண்காணிப்புக் குழுவை நியமிப்பதில் வடக்கு மாகாண முதல்வர், உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் கூடிய முக்கியத்துவம் அளித்துச் செயல்படுத்த வேண்டும். இதனால் மக்கள் பங்களிப்புடன் திட்டம் நிறைவேறுவதோடு அந்தந்தத் திணைக்களங்களும் மக்களும் முழுநன்மை அடைவர்' என உள்ளூராட்சி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.
இது தொடர்பில் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது: வடக்கில் நெல்சிப் திட்டங்களை முன்னெடுக்கும் போது அவற்றில் ஒவ்வொன்றுக்கும் சமூகக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவேறிக் கையளிக்கும் வரை குழு வலுவில் இருக்கும். அத்துடன் சாலை அல்லது கட்டட அமைப்பு முன்வைக்கும் போது அந்தத் திட்டத்துக்கு நிதியளிக்கும் நிறுவனம் திட்டத்தின் பெயர், திட்டத்திற்கான நிதி, பங்களிப்புத் திட்டம் ஆரம்பித்து முடிவடையும் காலம் போன்றனவற்றை முன்னிலைப்படுத்தி அறிவித்தல் பலகையிடப்படும்.
இவ்வாறு வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகளினூடாக முன்வைக்கப்படும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி, சபை நிதி, மீள்குடியேற்ற அபிவிருத்தி நிதி, மற்றும் ஏனைய நிதித் திட்டங்கள் ஊடாக முன்வைக்கப்படும் சகல உட்கட்டுமானத் திட்டங்களிலும் சமூகக் கண்காணிப்புக் குழுவை நியமிக்க உள்ளூராட்சி அமைச்சரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் முன்வரவேண்டும்.
இதன் மூலம் எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைகள் பல பிரச்சினைகளிலிருந்து மீட்சி பெறலாம், துரித கட்டுமானத்துக்கு வித்திடலாம். கடந்த காலங்களில் நெல்சிப் திட்டம் ஊடாக சாலைகள், கட்டுமானங்களின் பணிகள் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.
இவ்வாறு முன்னெடுக்கும் போது ஒவ்வொரு உட்கட்டுமானத் திட்டத்துக்கும் சமூகக் கண்காணிப்புக் குழு மற்றும் திட்டம் தொடர்பான விளம்பரப் பலகை அந்த இடத்தில் பொருத்தப்பட்டன. அதே போல வடக்கில் மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைகளூடாக முன்வைக்கப்படும் சகல அபிவிருத்தி நிதித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும் போது சமூகக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டால் அந்தக் குழுவே திட்டத்தின் முன்னேற்றம், அபிவிருத்தி குறித்தும் அறிக்கையிடும். இதனை விட திட்டம் நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை, காலதாமதம் ஏற்பட்டால் அவ்வாறு நியமிக்கப்பட்ட சமூகக் கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு அறிக்கையிடும். எனவே வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் இடம்பெறும் வேலைத்திட்டங்களில் சமூகக் கண்காணிப்புக் குழுவை நியமிப்பதில் வடக்கு மாகாண முதல்வர் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் கூடிய முக்கியத்துவம் அளித்துச் செயல்படுத்த வேண்டும்-என்று தெரிவித்தன. (21,50)

## கொழும்புக்கு வரமறுத்த சிவாஜிடம் யாழ்ப்பாணத்தில் இன்று விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 31
வாக்குமூலம் வ்ழங்க கொழும்புக்குச் செல்ல மறுத்திருந்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்துக்கு இன்று காலை வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
அரச தலைவரின் முல்லைத்தீவு வருகை தொடர்பில் பத்திரிகையாளர் சந்திப்பில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காகவே எம்.கே.சிவாஜிலிங்கத்தை கொழும்புக்கு வருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு விடுத்திருந்தனர்.
கொழும்புக்கு வரமுடியாது என்று எம்.கே.சிவாஜிலிங்கம் பதிலளித்திருந்தார். இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இன்று வருகை தருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (5,26)

## வடக்கு போக்குவரத்துச் சபையில் சாரதி, நடத்துநர்களுக்கு வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
வடபிரந்திய போக்குவரத்துச் சபையில் 79 சாரதிகளுக்கும், 42 நடத்துநர்களுக்குமான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியமுகாமையாளர் கேதீஸ் தெரிவித்தார். வடக்கு மாகாணப் போக்குவரத்துச் சபைகளின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்தத் தகவலை வழங்கினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் இயங்கும் 7 பேருந்துச் சாலைகளிலுமே இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
5 மாவட்டங்களிலும் உள்ள 7 சாலைகளிலும் 415 சாரதிகளும், 431 நடத்துநர்களும் தற்போது பணியில் உள்ளனர்.
மேலதிகமாகக் கோண்டாவில் சாலையில் 40 சாரதிகளுக்கும் 20 நடத்துநர்களுக்குமான வெற்றிடங்கள் உள்ளன.
பருத்தித்துறை சாலையில் 7 சாரதிகளுக்கும் 3 நடத்துநர்களுக்குமான வெற்றிடங்கள் உள்ளன.
காரைநகர் சாலையில் 6 சாரதிகளுக்கும் 2 நடத்துநர்களுக்கும் கிளிநொச்சிச் சாலையில் 16 சாரதிகள் மற்றும் 8 நடத்துநர்களுகும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தலா 6 சாரதிகள் நடத்துநர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மன்னார்ச் சாலையில் 2 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
அது போன்றே வவுனியா சாலையினைப் பொறுத்த மட்டில் 2 சாரதிகள், 3 நடத்துநர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
இவற்றின் அடிப்படையில் வடக்கில் இன்னும் 79 சாரதிகள் தேவைப்படுகின்றனர். இதேபோன்றே 42 நடத்துநர்களின் தேவைஉள்ளது.
இந்த வெற்றிடங்கள் நிரப்பும் சந்தர்ப்பத்தில் தற்போது சாலைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சில பேருந்துகளையும் சேவை யில் இணைத்துக்கொள்ள முடியும் என்றார். (21,101)

## தொண்டமனாற்றிலிருந்து இராணுவத்துக்கு மணல்

### பலதடவை ஏற்றிச் சென்றதாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
'தொண்டமனாற்றிலிருந்து இராணுவத்தினர் மணல் ஏற்றிச் செல்கின்றனர். அவர்கள் டிப்பர் வாகனங்களில் பல தடவைகள் மணல் ஏற்றிச் சென்றனர்' என அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர்.



'தொண்டமனாறு ஆற்றின் கரையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அணை அமைக்கப்படுகின்றது. தொண்டமனாறு ஆற்றின் கரையில் இருந்து வல்லை நோக்கி அந்த அணை அமைக்கப்படுகின்றது. நன்னீரைச் சேமிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆற்றின் மணல் அகழப்பட்டு அது அணைக்கு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அந்த ஆற்றிலிருந்து அகழப்பட்ட மணல் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டது' என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.



"டிப்பர் வாகனங்களில் 6 தடவைக்கு மேல் மணல் ஏற்றிச் செல்லப்பட்டதை அவதானித்தோம். வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டில் உள்ள முகாம் ஒன்றுக்கே மணல் கொண்டு செல்லப்பட்டது. மறுநாள் வெள்ளிக்கிழமையும் இரு தடவைகள் இராணுவத்தினர் மண் ஏற்றிச் சென்றனர்" என்றும் பிரதேச மக்கள் கூறினர்.
டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக இராணுவத்தினரின் முகாமில் உள்ள பள்ளத்தை நிரவுவதற்கு இராணுவத்தினர் மணல் கோரினர்.
அதனால் மணல் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இராணுவத்தினருக்கு இரண்டு டிப்பர் மணல் வழங்கப்பட்டது.
அதனை அவர்கள் இராணுவச் சீருடையுடன் எம்மிடம் அனுமதி கேட்டே எடுத்துச் சென்றனர். என நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (21,8, 26)

## வடக்கு ஆணையாளர்கள் இருவர் பிரதேச செயலர்களாக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர் இலங்கை நிர்வாக சேவை தரம் 1 க்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர். அவர்கள் இருவரும் பிரதேச செயலாளர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாண மோட்டார் போக்கு வரத்து ஆணை யாளராக தற்போது கடமையாற்றும் பிரபாகரமூர்த்தி மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சிவகரன் ஆகியோர் இலங்கை நிர்வாக சேவை தரம் 2இல் இருந்து இலங்கை நிர்வாக சேவை தரம் 1க்கு உயர்வு பெற்றுள்ளனர். அவர்கள் இருவரும் பிரதேச செயலாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர். சிவகரன் வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலாளராகவும் , பிரபாகர மூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்ப் பிரதேச செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாள ராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். என அறியமுடிகின்றது. (21,101)

# காணாமற்போயுள்ள இராணுவம் குறித்தும் பணியகம் அவதானம்

## கூறுகின்றார் அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு, ஜூலை 31

காணாமற்போயுள்ள ஐயிரத்து 101 இராணுவத்தினர் தொடர்பிலும் காணாமற்போனோர் தொடர்பான பணியகம் அவதானம் செலுத்தும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் காணாமற்போனோர் தொடர்பில் பன்னாட்டு ரீதியில் செயற்படும் பல மனித உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பி வருகின்றன.

இந்த நிலையில், இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் காணாமற்போனோர் தொடர்பான பணியகம் உருவாக்கப்படவுள்ளது. காணாமற்போயுள்ள ஐயாயிரத்து 101 இராணுவத்தினர் தொடர்பிலும் இந்தப் பணியகம் ஊடாக அவதானம் செலுத்தப்படும்.

இந்தப் பணியகம் காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அவர்கள் காணாமறபோனமைக்கான காரணங்களை அறியவும் செயற்படும்.

மேலும், அவர்களது உறவினர்கள் யதார்த்த ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் முகம் கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவும் உதவும்.

குறித்த செயற்பாடுகளின்போது குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்கள் கிடைக்குமாயின் பலவந்தமாகக் காணாமற்போதலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க யாருக்கும் உரிமை உண்டு. காணாமல்போனோர் பணியகம் தொடர்பான போலியான அச்சம் ஏற்படுத்தப்படக் கூடாது என்றார். (த)

# கிழக்கின் அபிவிருத்தி குறித்து ரணில் தலைமையில் கூட்டம்

திருகோணமலை, ஜூலை 31

கிழக்கு மாகாணத்துக்கு கடந்த வியாழக்கிழமை பயணம், மேற்கொண்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இடம்பெற்றது.

கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் கோரிக்கைக்கு அமைய தலைமை அமைச்சர் நேற்று முன்தினம் கிழக்குக்குப் பயணம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் கிழக்கு மாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கிழக்கு மாகாண உயர்மட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட கிழக்கு மாகாண முதலமைச்சர்,

கிழக்கு மாகாண சுற்றுலா மற்றும் விவசாயம் சார் துறைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாணத்துக்கும் விமான சேவையை விரிவாக்குவது தொடர்பிலும், மாகாணத்தின் வீதிக் கட்டமைப்பை மேம்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கிழக்கில் தகவல் தொழில்நுட்ப நகரங்கள் மற்றும் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்கான திட்டங்களை இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளோம்.

முக்கிய முதலீட்டாள்ர்களைக் கிழக்குக்கு அழைத்து வந்து சுற்றுலா முக்கித்துவம் மிக்க இடங்களில் முதலீடுகளை முன்னெடுத்து அதன் மூலம் கிழக்கின் வேலையற்ற பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றார். (த)

# காணாமற்போனோர் செயலகத்தினால் படைகளுக்கு ஆபத்து

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

காணாமற்போனோர் தொடர்பாக அமைக்கப்படவுள்ள அலுவலகம் இராணுவத்தினருக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதென லங்காசம சமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாகக் கண்டறிவதற்கு அமைக்கப்படவுள்ள அலுவலகத்தின் ஊடாக நாட்டின் எந்தவொரு நபருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கமுடியும் என அந்தக் கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அலுவலகத்தின் பரிந்துரைகள் பன்னாட்டு நீதிமன்றங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் போரை வெற்றி கொண்ட இராணுவத்துக்கே அச்சுறுத்தல் .

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு அன்று அயலுறவு அமைச்சராக இருந்த மங்கள சமரவீர கைச்சாத்திட்டிருந்தார்.

அந்தத் தீர்மானத்தின்அடிப்படையிலேயே தற்போது காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகத்தை அமைக்கும் சட்டத்தில் அரசதலைவர் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த அலுவலகம் ஊடாக நாட்டில் எவருக்கு எதிராகவும்நடவடிக்கை எடுக்கமுடியும். குறிப்பாக போரை வென்ற இராணுவத்தினர் மீது பன்னாடுகள் பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில்,இந்த அலுவலகம் ஊடாக இராணுவத்தினர் பன்னாட்டு நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வாய்ப்பு உள்ளது. ஏனெனில் குறித்த அலுவலகத்தின் பரிந்துரைகளை பன்னாட்டு நீதிமன்றங்கள் அங்கீகரிக்கின்றன.

அமைக்கப்படவுள்ள காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகத்துக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் பெற்றுக்கொள்வதற்குத் தேவை ஏற்படின் வெளிநாட்டவர்களை அழைத்துக்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தஅலுவலகத்தின் விசாரணைகளில் ஒருவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் அதற்கெதிராக மேன்முறையீடு செய்யவும் முடியாது.பொதுவாகநீதிமன்றம் ஒன்றில் ஒருவர்மீதுகுற்றச்சாட்டுநிரூபிக்கப்பட்டால் அவர் மேல்முறையீடு செய்வதற்கு அவகாசம் இருக்கின்றது.

ஆனால் இதில் அந்த உரிமை இல்லை. அதனால் குறித்த அலுவலகம் நீதிமன்றத்தையும் விட உயர்நிலையில் அமைக்கப்படவுள்ளது. அரசு இந்த உண்மை நிலைமைகளை மறைத்து வருகின்றது. அதனால் காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகம் அமைக்கப்படுவதானது நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாகஅமையும் - என்றார் (த-ய)

# ஐ.தே.கவில் மீண்டும் இணையும் மேர்வின் ?

கொழும்பு, ஜூலை 31

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மீண்டும் அரசியலில் ஈடுபட தயாராகி வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த மேர்வின் சில்வா, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாகப் பதவி வகித்த காலத்தில் அந்தக் கட்சியில் இணைந்து கொண்டார்.

சந்திரிகாவின் அரசில் அமைச்சராக பதவி வகித்த மேர்வின் சில்வா, மகிந்த ராஜபக்சவின் அரசிலும் அங்கம் வகித்தார்.

பசில் ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருடன் மேர்வின் சில்வாவுக்கு முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இதன் காரணமாக மேர்வின் சில்வாவுக்குக் கடந்த காலத்தில் அரசியல் ரீதியாகத் தொல்லை கொடுக்கப்பட்டதுடன் அவரது புதல்வர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அவர் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாகத் தீவிர அரசியலில் ஈடுபடாது இருந்து வந்த மேர்வின் சில்வா, மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை கம்பகா மாவட்டத்தில் அரசியலில் ஈடுபட்டு வந்த மேர்வின் தான் பிறந்த மாவட்டமான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீண்டும் தேர்தலில் போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (த)

# தங்கள் தலையில் தாங்களே மண் போடும் மகிந்த அணி

## முஜிபுர் ரஹ்மான் சாடல்

கூட்டு எதிர்க்கட்சியினர் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மகிந்த அணியின் குழப்பத்தால் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் கொழும்பில் நடைபெற்ற சிறப்புச் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறித்து நடைபெறவிருந்த விவாதம், மகிந்த அணியின் குழப்பத்தால் நடைபெறாமல் போனது.

மேலும்,சீனஒப்பந்தத்தை மக்கள் அறிய நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்ததன் பின்பே அதில் கைச்சாத்திடப்படும் என அரசு கூறியிருந்தது.

எந்த ஒரு உடன்படிக்கையும் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவராமல் கைச்சாத்திடமாட்டோம் என உறுதியாக தெரிவித்திருந்தோம்.

அந்த வாக்குறுதியைச் சிதைக்கும் வகையில் மகிந்த அணியினர் திட்டமிட்டு நாடாளுமன்றச் செயற்பாடுகளைக் குழப்பியுள்ளனர்.

இவற்றின் மூலம் எவ்வாறாவது இந்த அரசின் பயணத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே இவர்களின் இலக்காக இருக்கிறது- என்றார். (த)

# வன்புணர்வுக் குற்றச்சாட்டில் கனடாவில் தமிழர் கைதானார்

கொழும்பு, ஜூலை 31

பெண்ணொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கனடாவில் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரொரன்ரோவில் கல்விச்சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றின் இயக்குநரான 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என அந்த நாட்டுப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதியில் சந்தேகநபர் தன்னை இரண்டுமுறை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனப் பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 2010 2016 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மீது இரண்டு பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த-ய)

## வன்புணர்வுக் குற்றச்சாட்டில்

# பொலிஸ் அதிகாரிக்கு 19 வருட கடூழியச் சிறை

## பத்து இலட்சம் ரூபா இழப்பீட்டுக்கும் உத்தரவு

கொழும்பு, ஜூலை 31

களுத்துறை வடக்குப் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரிக்கு 19வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து களுத்துறை உயர் நீதிமன்ற நீதிபதி அமல் திலக்கரத்ன தீர்ப்பளித்தார்.

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டமையை அடுத்து இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியான ஹரல்ட் ஜெக்ஸன் என்பவருக்கே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாகப் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி களுத்துறையில் 16வயதுடைய சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# அரசுக்குள் இருந்துகொண்டு கட்சிகளை விமர்சிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

## மைத்திரி, ரணில் மந்திராலோசனை

கொழும்பு, ஜூலை31
அரசில் அங்கம்வகிக்கும் பிரதான கட்சிகள் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளை எப்படி தீர்ப்பது என்பது தொடர்பான பேச்சு வார்த்தை ஒன்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையில் நடைபெற்றுள்ளது.

இப்பேச்சுவார்த்தை நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நடந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசுக்கு எதிரான சவால்களை கூட்டாக எதிர்நோக்க வேண்டியது முக்கியத்துவம் குறித்து இருவரும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹசீம் உட்பட அமைச்சர்கள் சுதந்திரக் கட்சியை விமர்சிப்பது தொடர்பாக அரசதலைவர் ரணியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் எஸ்.எம். மரிக்காரின் புதிய அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில், அமைச்சர் கபீர் ஹசீம் சுதந்திரக் கட்சியை விமர்சித்தது குறித்து ஏற்கனவே அரச தலைவர் பங்களாதேஷில் இருந்து அமைச்சர் மலிக் சமரவிக்ரமவிடம் விசாரித்திருந்தார்.

அதேபோல் அமைச்சர் டிலான் பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியை கடுமையாக விமர்சித்து வருவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர். எதிர்காலத்தில் இப்படியான முரண்பாடுகள் ஏற்படாத வகையில் செயற்படுவது என இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர் எனத் தகவல்கள் கூறுகின்றன.



மேலும் அரசை சீர்குலைக்க கூட்டு எதிர்க்கட்சி மேற்கொள்ளும் பணிப்புறக்கணிப்பு உட்பட எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தவிர மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதான வாக்குறுதியான ஊழல்மோசடி, குற்றச் செயல்கள் சம்பந்தமான விசாரணைகளை துரிதப்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்தவும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ய)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி பதுமநிதி

(இலங்கை பெந்தேகொஸ்தே சபை - மட்டக்களப்பு)



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான கனக ரத்தினம் அழகம்மா தம்பதியரின் புதல்வி அருட்சகோதரி பதுமநிதி நேற்று (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் அருட்சகோதரி கலாநிதி தயானந்தன், சிவானந்தன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (31.07.2017) திங்கட்கிழமை மட்டக்களப்பு பெந்தேகொஸ்தே சபைச் சாலையில் பி.ப ஒரு மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 030 3913**

### ஐயாத்துரை ஸ்ரீஞானநாதன்

(ஓய்வு பெற்ற உதவிப்பதிவாளர் விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ஸ்ரீஞானநாதன் 29.07.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பரிமளம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இராசம்மா தம்பதிகளின் மருமகனும் ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும் அருணன் (பிரதேச செயலகம் , புதுக்குடியிருப்பு), பத்மப்பிரியா (வவுனியா), பத்மப்பிரபா (பிரான்ஸ்), திருமால் (விவசாயபீடம், கிளிநொச்சி), திருவேணி .(கனடா), குருதேவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலா, மணிவண்ணன் (பொது வைத்தியசாலை , வவுனியா), கருணாகரன் (பிரான்ஸ்), நந்தகுமார் (கனடா), சுதர்சனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.08.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணிக்கு கொற்கைத்துறை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை**

**தகவல்
குடும்பத்தினர்.**

### ம.செ.தேவதாசன்

(ஓய்வுபெற்ற அதிபர்)



யாழ்ப்பாணம் இல.6 அடம்பன் வீதியைப் பிறப்பிடமாவும் திருகோணமலை இல.19 பரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை தேவதாசன் (ஓய்வுபெற்ற அதிபர்) 28.07.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை பொன்னு சலோமைப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட புத்திரனும், காலசென்றவர்களான வின்சன்ட் கணபதிப்பிள்ளை, எமிலிறோசலின் கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானரட்ணத்தின் அன்புமிக்க கணவரும், காலஞ்சென்றவரான றெஜினா எசெக்கியேல் (ஆசிரியர் - யாழ்ப்பாணம்), அருட்சகோதரி லில்லி ஓசா A.C (தெமட்டக்கொட கன்னியர் மடம்), Dr. ம.செ.அலோசியஸ் (Lourdes Medical Centre Jaffna) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் M.P. வேதநாயகம் (ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி) அவர்களின் உடன் பிறவா சகோதரனும், Dr. குயின்ரன் இரட்ணதேவ், Dr. கிங்ஸ்ரன் நிமலதேவ் , Dr. திருமதி றெஜினியா அமரந்தா தேவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் , அருண் நன்சி (பொறியியலாளர்), றுக் ஷலா, கனகரட்ணம் தேவராஜா (பொறியியலாளர் ) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சேலின் எசெக்கியேல் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), முத்துநாயகம் (ஸ்ரேஷன் மாஸ்டர்), அருள்நாயகம் (ஸ்ரேஷன் மாஸ்டர்), திருமதி நீற்றா பேனாட் (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஜெபமணிதாஸ் (விவசாய அதிகாரி) மற்றும் திருமதி ஸ்கொலஸ்ரிக்கா யோசேப், திருமதி ஆனந்தறதி அலோசியஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காஷ்வினி, கிளறிஷா நிக் ஷா நிகேஷ்தேவ், நருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி இன்று (31.07.2017)திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருகோணமலை புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுகப்பட்டு, பூதவுடல் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**235 ,பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.**

Dr. **ம. செ. அலோசியஸ்**
(சகோதரன்)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.07.2017 திங்கட்கிழமை
சிவபதம் அடைந்த எங்கள் அன்புத்
தெய்வம்

**அமரர் சிவகாமி
பெரியதம்பி**

அவர்களின் 31 ஆம் நாள்
அந்தியேட்டிக் கிரியைகள் நாளை
(01.08.2017) செவ்வாய்க்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெற
இருப்பதனால் அத்தருணம்
தாங்களும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இரத்தினசிங்கம் இரமணதாசன்

மலர்வு
07.06.1976

திதி:- ஆடிமாத பூர்வபட்ச நவமி (31.07.2017)

உதிர்வு
12.08.2016

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கருணையின் வடிவமாய் பக்தியின் இருப்பிடமாய்
கம்பீர நடையும் என்றும் மறவாத புன்சிரிப்பும்
தெய்வீகக்களையோடு கூடிய அன்பாலும் அரவணைப்பாலும்
அடுத்தவர்களுக்கு கூறும் ஆறுதல் வார்த்தைகளாலும்
உதவியாலும் தானதர்மங்களாலும்
இறைவனுக்கு செய்த தொண்டுகளாலும்
அனைவரையும் கவர்ந்த எங்கள் அன்பு ரமணா!
எம்மைவிட்டு சடுதியாகப் பிரிந்தது ஏனோ?
பொறுக்காத காலனவன் உம் நல்லுள்ளம் கண்டு
பொறுக்கி எடுத்தானோ? எம்மால் ஆற முடியவில்லை
காணும் இடமெல்லாம் உமது புன்னகை பூத்தமுகம் தோன்ற
கலங்கி நிற்கின்றோம் கண்ணீர் சொரிய...

ஆண்டொன்று ஆனாலும் ஆறாது உமது பிரிவுத்துயர் என்றும்
அழியா நினைவுகளுடன் அன்பின் பிரிவால் துயருறும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

## கூட்டு அரசும் இன்று கோத்தாவின் வழியில்

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 31
அன்று கோத்தபாய ராஜபக்ச செய்ததையே இன்று நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரும் செய்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கோத்தபாய அன்று செய்ததையே இன்று நல்லாட்சி எனக் கூறிக்கொள்பவர்கள் செய்கின்றனர். ஒருபுறத்தில் பேச்சும், மறுபுறத்தில் குண்டர்களை ஏவிவிட்டு தாக்குதலும் நடத்தப்படுகின்றது-என்றார். (கு-ய)



## ரவியின் தலைவிதியை ரணிலும் மைத்திரியுமே முடிவுசெய்யவேண்டும்

### கூறுகிறார் அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு, ஜூலை 31
சர்ச்சைக்குள்ளாகியுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்கவைப் பற்றிய முடிவை அரச தலைவரும் தலைமை அமைச்சருமே எடுக்கவேண்டுமெனவும், அரச தலைவர் ஆணைக்குழுவில் ரவி கருணாநாயக்க அளிக்கும் சாட்சியத்தின் அடிப்படையிலேயே அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கமுடியுமெனவும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவி கருணாநாயக்க பற்றி வெளிவந்துள்ள உண்மைகள் திடுக்கிடவைக்கின்றன. இது இலங்கை அரசுக்குப் பெரும் தலைக்குனிவை ஏற்படுத்தும் விடயம். எனினும், ரவி கருணாநாயக்க அடுத்த வாரம் ஆணைக்குழுவில் முன்னிலையாகித் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ளதாகக் கூறியிருப்பதால் அதுவரை நாங்கள் இந்த விவகாரத்தைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லதென நினைக்கிறேன்என்றார். (கு)



## சீனப் பட்டுப்பாதை திட்டம் நாட்டுக்கு பல நன்மைகளை தரும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை31

சீனப்பட்டுப்பாதை திட்டம் இலங்கைக்கு பல்வேறு நன்மைகளைக் கொண்டுவரும் என அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பண்டையகாலம் முதல் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவுகள் நீடித்து வருகின்றன. இந்த உறவு தொடர்ந்தும் நீடித்திருக்கிறது.

இலங்கையில் சீனா முதலீடு செய்வதனை வரவேற்கவேண்டும். இப்பொழுது இருப்பதை விடவும் சீனா இலங்கையில் அதிகளவான முதலீடுகளைச் செய்யவிருக்கின்றது.

மேலும் அதிகளவான முதலீட்டினை நாம் சீனாவிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் -என்று குறிப்பிட்டுள்ளார். (ய)

## சுங்கப்பிரிவில வைக்கப்பட்டிருக்கும் சீனிக் கொள்கலன்கள் பரிசோதனை

கொழும்பு, ஜூலை31

கொக்கெய்ன் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் சீனிக் கொள்கலன்களை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரேஸிலில் இருந்து கொண்டு வரப்பட்ட கொள்கலன்களே இவ்வாறு சோதனையிடப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஒருகொடவத்த சுங்கப்பிரிவில் காணப்படும் 70 சீனி கொள்கலன்கள் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கொள்கலன்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த எழுபது சீனி கொள்கலன்களையும் சோதனையிடுவதற்கு ஒருவார காலம் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சீனிக்கொள்கலன் ஒன்றிலிருந்து 320கோடி ரூபா பெறுமதியுடைய கொக்கெய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ய)

# கிழக்கு தமிழ் இலக்கியவிழா இன்று முதல் மூன்று தினங்கள்

**அம்பாறை**

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கியவிழா இன்று திங்கள் முதல் எதிர்வரும் புதன் கிழமை (02. 08.2017) வர மூன்று தினங்கள் கோலாகலமாக நடைபெறவுள்ளன.

இன்று திங்கள் காலை பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகும் இந்த தமிழ் இலக்கிய விழா கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மருதமுனை அல்மனார் பாடசாலையிலிருந்து இன்று காலை பண்பாட்டுப் பேரணி ஆரம்பித்து கல்முனை பிரதான வீதி வழியால் உவெஸ்லி உயர்தரப் பாடசாலை விழா மண்டபத்தை அடையும்.

மூன்று தினங்களும் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவிருக்கும் இந்த தமிழ் இலக்கிய விழாவில் காலை நிகழ்வுகள் ஆய்வரங்கு கவியரங்காக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மாலை நிகழ்வுகள்**

முதலாம் நாள் (திங்கள்) மாலை நிகழ்வுகள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம் தலைமையில்" யுவன் எம்.ஏ.கபூர் அரங்கில் நடைபெறும்.

இதில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள் (செவ்வாய்க் கிழமை) பாண்டியூரன் அரங்கில் கிழக்கு மாகாண கல்விப் பண்பாளர் எம். ரி.ஏ.நிஸாம் தலைமையில் நடைபெறுவதுடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபில் நஸீர் அஹமட் இதில் முதன்மை விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

மூன்றாம் நாள் இறுதி (புதன் கிழமை) மாலை நிகழ்வுகள் ஏ.எல்.எம்.பளீல் அரங்கில் கிழக்கு மாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் சி.தண்டாயுத பாணி தலைமையில் நடைபெறும்.

இதில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் இலக்கியவிழா தொடர்பான கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான பரிசு வழங்கல் இலக்கிய விழா ஞாபகார்த்த மலர் வெளியீடு இளம் கலைஞர் பாராட்டு சிறந்த தமிழ் நூல் தேர்வுக்கான பரிசு வழங்கல் உட்பட 2017 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண வித்தகர் விருது வழங்கல் முதலான சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

**ஆய்வரங்கு - கவியரங்கு**

விழா மூன்று தினங்களும் நடைபெறும் ஆய்வரங்கு , கவியரங்கு நிகழ்வுகள் முறையே அன்பு மணி அரங்கு இசைவாணர் அரங்கு, ஜீவா ஜீவரத்தினம் அரங்கு என்பவற்றில் இடம் பெறும்.

இதில் முதலாம்நாள் காலை கிழக்கின் சமகால இலக்கிய முயற்சிகள் எனும் தலைப்பில் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையிலும்

2ஆம் நாள் கிழக்கின் சமகால இலக்கிய முயற்சிகள் எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திருமதி றூபி வலன் ரினாபிரான்சிஸ் தலைமையிலும்.

3ஆம் நாள் நாங்களும் பாடுவோம் எங்கள் நாவரண்டு விடவில்லை எனும் தலைப்பில் கவிஞர் யூ.எல்.எம். அதீக் (சோலைக்கிளி) தலைமையிலும் ஆய்வரங்கு கவியரங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (த-30)

## யானைகள் கடலுக்குள் நீந்துவது வழக்கத்திற்கு மாறான செயல்

*வன பாதுகாப்பு அதிகாரி எச்சரிக்கை*

காட்டுயானைகள் கடலுக்குள் நீந்திச் செல்வது வழக்கத்துக்கு மாறான ஒன்று என வன பாதுகாப்பு ஆய்வு மத்திய தலைவரான பேராசிரியர் பிரித்திராஜ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த 12 மற்றும் 23ஆம் திகதியில் கிழக்கு கடலில் நீந்திச்சென்ற மூன்று யானைகளை கடற்படையினர் காப்பாற்றியிருந்தனர். இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது:

கடற்படை தரப்பில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லை. எவ்வாறாயினும், இதுபோன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளன. இதில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் யானை கடலுக்குள் நீண்டதூரம் சென்றுள்ளது. சோர்வுற்ற நிலையில் காணப்பட்டுள்ளது. இரண்டாவது சம்பவத்துடன் தொடர்புடைய இருயானைகளும் அந்தப் பிரதேசத்தில் நடமாடிய யானைகள் என்று அறிய முடிந்தது.

பிரித்தானியர் காலத்தில் திருகோணமலை பகுதியிலுள்ள தீவுகளுக்கு யானைகள் நீந்திச்சென்ற நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. இந்த நிலையில், சிலநேரத்தில் இந்த இரு சம்பவங்களிலும் யானை தீவை நோக்கி பயணித்து, இறுதியில் கடலின் நடுப்பகுதிக்கு அடித்து செல்லப்பட்டிருக்கலாம்.

யானைகள் நன்றாக நீந்தக் கூடியவை. பெரிய உடம்பு என்பதால் மிதக்கக் கூடியது. இருந்தாலும் நீண்டநேரத்துக்கு அப்படி இருக்கமுடியாது. எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் சூழல்தாக்கமாக இருக்குமா என்பது குறித்து தெளிவாகக் கூறமுடியாது.

தற்போது கடும் வறட்சி நிலவுகின்றது. இதன்காரணமாக கடலுக்குப் போயிருக்குமா என்று நினைப்பதும் கடினம். இரு சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்காது என்றே நினைக்கத் தோன்றுகின்றது. இதுபோன்று மற்றுமோர் நிகழ்வு இடம்பெறுமாக இருந்தால் அதுகுறித்து கவனம் செலுத்த வேண்டியிருக்கும்- என்றார். (ய)

## அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் வைத்திருந்த எகிப்து நாட்டவர் கைது

கொழும்பு, ஜூலை31

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் வைத்திருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொத்துவில் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார் ஒன்றில் மதுபானத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்த எகிப்து நாட்டை சேர்ந்த சந்தேகநபரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பொத்துவில் பொலிஸாரிடம் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 18 மதுபானப் போத்தல்கள் மற்றும் டின்களில் அடைக்கப்பட்ட மேலும் 48 மதுபான வகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர்.(ய)

# சபாநாயகர் மீது குற்றச்சாட்டு: பக்கம் சார்ந்து நடக்கிறாராம்

கொழும்பு, ஜூலை31

சபாநாயகர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு சார்பாக செயற்படுகிறார் என கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட அமளி காரணமாக அமர்வுகளை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும்போதே வெல்கம இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலிய விநியோகம் அத்தியாவசியமான சேவையாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தமான வாக்கெடுப்பு நடைபெற்றபோது இந்த அமளி ஏற்பட்டது.

எனினும், இதனைக் காணாதவர்போல் எதிர்க்கட்சித் தலைவர் உறங்கிக் கொண்டிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் வடக்குக்கு மாத்திரம் எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டு வருகிறார். மேலும் நாடாளுமன்றத்தில் எது எதிர்க்கட்சி எது ஆளும் கட்சி என்பதை தேடிக்கண்டுபிடிப்பதும் கஷ்டமானது. எதிர்க்கட்சியின் பணிகளைக் கூட்டு எதிர்க்கட்சியே செய்து வருகிறது என அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

(ய)

**விற்பனைக்குண்டு**

கட்டில், மேசை, அலுமாரி போன்ற வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

**071 843 2004**

**SEYLAN BANK PLC**

**OFFER IS INVITED FOR VALUABLE PROPERTY**

| Detail | Ref No | Type of Property | Address | Extent |
|---|---|---|---|---|
| Jaffna | 12 | Factory Complex | Chavakacheri Road Sarasalai | 6 A 2 R 28.9 P |

For further details and inspection of property published please call 0112456453/0112456487 between 9.00 am and 5.00 pm in week days.

Please send your offer under sealed envelope marked " offer for property" on top left hand corner by registered post to the following address on or before 31.07.2017

Tender forms could be obtained from any branch of seylan bank PLC by making a payment of Rs 500.00

**Manager – Property Unit**
Seylan bank PLC
Level 14, Seylan Towers,
No 90 Galle Road Colombo 03,

Fax 0112452549

Please log onto www.seylan.lk & find property for sale it is the decision of the management to accept or reject any offer. Conditions apply

**Award Ceremony to Recognize the Best Performers in the G.C.E Advanced Level Examination - 2016**

Organized by: Young Men's Christian Association - Jaffna

Date: 31.07.2017 (Monday)
Time: 4.00pm
Venue: Main Hall, YMCA, Jaffna

Sponsored by: Direct Family Financial Support - Canada

Organized by YMCA JAFFNA

All are welcome

Sponsored by DFFS

# காணாமற்போன உறவுகளுக்கு நடந்தது என்ன?

## உண்மையை அரசு வெளிப்படுத்தவேண்டும் என மக்ஸ்வல் பரணகம வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 31

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மக்ஸ்வல் பரணகம கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர்களது உறவினர்களுக்கு உண்மையை வெளிப்படுத்தவேண்டியது அரசின் கடமை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டத்தில் அரச தலைவர் கைச்சாத்திட்டுள்ளமை மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துள்ளமை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலே மக்ஸ்வல் பரணகம இதனைக் கூறியுள்ளார்.

காணாமற்போனோரின் உறவினர்களை கண்ணீரை துடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலத்தைக் கடத்தி கொண்டிருக்காமல் பொறிமுறை ஒன்றை முன்னெடுப்பதுடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதிலளிப்பதற்கான கட்டுப்பாட்டை அரசு புறக்கணிக்க முடியாது.

காணாமற்போனோரின் உறவினர்கள் முகம் கொடுக்கும் நெருக்கடிகள் வேதனைக்குரியவை. அந்த மக்களின் துயரங்களுக்கு விடிவு காண வேண்டியது அவசியம்.

தமது ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகளை முன்னெடுத்தபோது ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் வந்தபோதிலும் அவற்றை முழுமையாக விசாரிப்பதற்கான கால அவகாசம் போதவில்லை.

எமது பரிந்துரைகளில் முக்கியமான பல விடயங்கள் முன்வைத்திருந்தோம். அதில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்திருந்தோம்.

தற்போது காணாமற்போனோர் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புக்களும் எழுந்துள்ளன. எனினும், ஏதாவது ஒரு பொறிமுறையை முன்னெடுத்து இந்த காணாமல் போனோர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து மக்களுக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலக முடியாது.

மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஒருவர் இறந்துவிட்டால் சம்பந்தப்பட்ட குடும்பம் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கும்.

ஆனால், காணாமற்போனோர் ஒருவர் தொடர்பில் இவ்வாறு எதுவும் செய்ய முடியாது. உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பதுகூடத் தெரியாமல் உறவினர்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பில் அரசு கவனத்திற்கொள்ள வேண்டும்.

காணாமற்போனோர் விடயத்தில் அரசு என்ன செய்கின்றது என்பதை பன்னாடும் பார்த்துக்கொண்டிருக்கின்றது. மக்களின் வேதனையை உணர்ந்துகொள்ள வேண்டும். காணாமற்போன தமது உறவுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருப்பதானது கொடூரமான நிலையாகும்.

எனவே, ஒரு முறையான விசாரணைப் பொறிமுறை அவசியமாகும். அதனூடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும். மாறாக இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து இழுத்தடித்துக்கொண்டு இருப்பது முறையானதல்ல-என்றார். (கு)

## தேர்தல் ஒத்திவைப்பை கண்டிக்கின்றது பவ்ரல்

கொழும்பு, ஜூலை 31

சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தப் போவதாகக் காரணங்காட்டி அரசு அந்தத் தேர்தல்களை மீண்டும் ஒத்திவைத்திருப்பது குறித்து பவ்ரல் அமைப்பு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை அவ்வப்போது நடத்துவதற்கான அதிக செலவு ஏற்படுமெனவும், அந்தச் செலவைக் குறைப்பதற்காகவே எல்லா தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தவுள்ளதாகவும் அரசு காட்டும் காரணம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று எனவும்,

தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்படுவது ஜனநாயக உரிமைகளை மீறும் செயல் எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலொன்றை ஒத்திவைப்பதற்கு மக்களிடம் கருத்துக்கணிப்பு எடுக்கவேண்டும்.

செலவை மிச்சப்படுத்துவதற்காக ஒன்பது மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரு தினத்தில் நடத்தப் போவதாக அரசு கூறுவது வேடிக்கையாக உள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்தடுத்து ஒத்தி வைக்கப்பட்டுவந்த நிலையில், இன்று அதேகதி மாகாண சபைகளுக்கும் நடக்கவுள்ளதென்பது வருந்தத்தக்க விடயம் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார். (கு)



## கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜூலை 31

வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் குட்டிமணி மற்றும் தளபதி தங்கதுரை உட்பட 53 அரசியல் போராளிகள் உட்பட படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூரும் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஏற்பாட்டில், மட்டக்களப்பு ஊறணியிலுள்ள அமெரிக்க மிஷன் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் இந்த நிகழ்வில், ரெலோ இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான மா.நடராஜா, இரா.துரைரெட்ணம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கு)

வறட்சியின் எதிரொலி:

## மின் உற்பத்திக்கு 3,800 கோடி ரூபா மேலதிக செலவு

கொழும்பு, ஜூலை 31

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை முடிவுக்கு வரும்வரை டீசல் மூலமான மின் உற்பத்தி நிலையங்களினூடாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை மின்சார சபைக்கு 3,800 கோடி ரூபா மேலதிக பணம் செலவிடவேண்டியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களில் 38 சதவீதம் தாழ்ந்துள்ளது.

இந்த நிலையில், டீசல் மூலம் இடம்பெறும் மின் உற்பத்தி 80 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

மேலதிக செலவுகளை ஏற்றாலும், மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (கு)

## காணாமற்போனோரின் குடும்ப உறவுகளுக்காக புதிய வேலைத் திட்டம்

### வேண்டும் என்கிறார் துமிந்த திசாநாயக்க

கொழும்பு, ஜூலை 31

காணாமற்போனோரின் குடும்ப உறுப்பினர்களின் குடும்ப நலன்புரி நடவடிக்கைகளுக்காகப் புதிய வேலைத்திட்டம் ஒன்றைப் பன்னாட்டு ஆதரவுடன் முன்னெடுக்கப்படவேண்டும் என அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் போயுள்ளவர்களாக கூறப்படுகின்றவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பது தொடர்பில் தெரியாத நிலையில் நாட்டில் பெரும் பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.

இதன் காரணமாக, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பன்னாட்டுடன் இணைந்து நடவடிக்கைகளை எடுக்கலாம்.

இதனூடாக பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை வளப்படுத்துவது மட்டுமன்றி, அனைத்தையும் மறக்கும் நாளொன்றை உருவாக்க முடியும்-என்றார். (கு)

## எசல பெரஹராவை முன்னிட்டு மேலதிக ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 31

கண்டி வரலாற்றுச் சிறப்பு மிக்க தலதா மாளிகையின் எசல பெரஹராவை முன்னிட்டு சிறப்பு ரயில் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒகஸ்ட் 03 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த ரயில் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்துக்குப் பொறுப்பான அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்தார். (கு)

## டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் அரசு தீவிரம்

### 300 மில்லியன் ஒதுக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 31

டெங்கு நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

தலைமை அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சரினதும் சிபாரிசுகளை கவனத்திற்குக் கொண்டு வந்து டெங்குநோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில், உள்நாட்டில் கொள்வனவு செய்ய முடியுமான உபகரணங்களை உடனடியாகக் கொள்வனவு செய்வதற்கும், மிகுதி உபகரணங்களை வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களின் ஊடாக கொள்வனவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக 300 மில்லியன் ரூபா நிதியை சுகாதார, போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கு ஒதுக்கி கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (கு-ய)

## பௌஸிக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 31

நெதர்லாந்து அரசு இலங்கை இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்த சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான வாகனமொன்றைத் தனது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தினார் என்ற் குற்றச்சாட்டின் கீழ் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்ந்திருந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதி நடைபெறுமென கொழும்பு மேலதிக நீதிவான் புத்திக்க ராகல அறிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசு இலங்கை இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்த இந்த வாகனத்தை அப்போதைய இடர் முகாமைத்துத்துவ அமைச்சராக இருந்த ஏ.எச்.எம்.பௌஸி தனது சொந்தப் பாவனைக்கு எடுத்துக்கொண்டதன் மூலம் பத்து இலட்சம் ரூபா அரச பணத்தை துஷ்பிர யோகம் செய்தார் எனக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (கு)



# அயலுறவுச் செயலர் நியமனத்தில் முரண்பாடு

*ஐ.தே.கவின் விருப்பத்தை புறந்தள்ளினார் மைத்திரி*

கொழும்பு, ஜூலை 31

ஐ.தே.க. தலைவர்களின் விருப்பங்களுக்கு முரணாகவே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால், புதிய அயலுறவுச் செயலராகப் பிரசாத் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அயலுறவு அமைச்சின் செயலராக இருந்த எசல வீரக்கோன், நேற்று முன் தினம் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டதுடன், அயலுறவுச் செயலராகப் பிரசாத் காரியவசம் நியமிக்கப்பட்டார். அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

தற்போது அமெரிக்காவில் தூதுவராகப் பணியாற்றும் பிரசாத் காரியவசம், எதிர்வரும் 15ஆம் திகதி அயலுறச் செயலராகப் பதவியேற்பார்.

மூத்த துறைசார் இராஜதந்திரியான எசல வீரக்கோன், விரும்பியே இந்த இடமாற்றத்தைப் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

இதையடுத்து, புதிய அயலுறவுச் செயலராக, பிரசல்ஸில் உள்ள இலங்கைத் தூதுவர் ரொட்னி பெரேராவை நியமிப்ப தற்கு ஐ.தே.க. தலைவர்கள் முனைப்புக் காட்டியிருந்தனர்.

எனினும் ஐ.தே.கவைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால், அரச தலைவரின் விருப்பத்தின் பேரில், பிரசாத் காரியவசம் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

செப்ரெம்பருடன் அமெரிக்காவுக்கான தூதுவர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் பிரசாத் காரியவசத்தை இந்தப் பதவிக்கு நியமிக்குமாறு அரச தலைவர் தமது செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரச தலைவரின் இந்த நகர்வு, ஐ.தே.க. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடையிலான பதற்றத்தின் பிரதிபலிப்பே என்று கூறப்படுகிறது. அயலுறவு அமைச்சு ஐ.தே.கவின் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வடக்கில் பெண்கள் மீது பாலியல் கொடுமைகள் இன்னும் தொடர்கின்றன

*பன்னாட்டு நெருக்கடிகள் குழு சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 31

வடக்கு கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும், அரச அதிகாரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், படையினர் போன்றோர் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு பெண்களைத் துஸ்பிரயோகம் செய்து வருவதாகவும் பன்னாட்டு நெருக்கடிகள் குழு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை முழுவதிலும் வீட்டு வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும், வடக்கு கிழக்கில் இவ்வாறான சம்பவங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆயுதப் போராட்டம், இராணுவ மயமாக்கல், கலாசாரக் காரணிகள் போன்றவற்றினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் பாலியல் வன்கொடுமைகள் பதிவாகின்றன.

அரச அதிகாரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், படையினர் உள்ளிட்டவர்கள் தம்மை துஸ்பிரயோகம் செய்வதாகப் பல பெண்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதற்குப் பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு, வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இவ்வாறு ஆண்கள் பாலியல் லஞ்சம் கோருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மாகாணங்களிலும் பால் நிலை சமத்துவமின்றமை அதிகளவில் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாலியல் துஸ்பிரயோகச் சம்பவங்களுக்காக நீதி நிலைநாட்டப்படும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது- என்றுள்ளது. (த)

# பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு இதுவரை 335 முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 31

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (எவ்.சி.ஐ.டி) நிறுவப்பட்டது முதல் இதுவரை நிதிமோசடிகள் தொடர்பாக 335 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதி பொலிஸ் மா அதிபர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவற்றில் விசாரணைகள் முடிவுற்ற 89 முறைப்பாடுகளின் அறிக்கைகள் வழக்குத் தொடர்வதற்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பட்டுள்ளன.

அத்துடன், 12 முறைப்பாடுகளுக்கு உயர்நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளன. 115 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளில் குற்றம் கண்டறிப்படாத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளன.

ஏனைய முறைப்பாடுகள் மேலதிக விசாரணைகளுக்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

131முறைப்பாடுகள்தொடர்பில்விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன-என்றார். (த-ய)

# சைட்டத்துக்கு எதிராக ஓகஸ்ட் 2 போராட்டம்

கொழும்பு, ஜூலை 31

எதிர்வரும் 2 ஆம் திகதி சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சைட்டம் எதிர்ப்பு அமைப்பின் உறுப்பினர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் இணைத்து குறித்து போராட்டம் முன்னெடுக்கப்படும். குறித்த தினத்தில் அனைத்து நகரங்களிலும் சைட்டத்திற்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (த)



# மனைவி கொடூரக் கொலை; கணவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 31

நுவரெலியா ராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தப்பளை, பகலவத்தை தோட்டத்தில், பெண் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், குறித்த பெண்ணின் கணவர், நேற்று முன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவருக்கும் மனைவிக்கும் இடையில் வாய்த்த கராறு ஏற்பட்டதாகவும், பின்னர் அது, கைகலப்பாக மாறியமையால், பொல்லொன்றை எடுத்த கணவர், மனைவியின் தலையில் தாக்கியுள்ளார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான பெண், அயலவர்களின் உதவியுடன், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லும் போது, வழியிலேயே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# சம்பூரில் நிரந்தரமாக நிறுத்தப்படுகின்றது மரைன் பற்றாலியன்

கொழும்பு, ஜூலை 31

இலங்கைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, மரைன் பற்றாலியன், திருகோணமலை சம்பூரில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, சம்பூரில் உள்ள எஸ்.எல்.என்.எஸ். விதுர கடற்படைத் தளத்தில் மரைன் படையினருக்கான விடுதி அறை, மூத்த மற்றும் இளைய அதிகாரிகளுக்கான உணவுக்கூடங்கள், நான்கு மாடிகளைக் கொண்ட நிர்வாக வளாகம் என்பன இலங்கைக் கடற்படைத் தளபதியினால் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டன.

மரைன் படையினருக்கான பயிற்சி மற்றும் நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்ற வசதிகளைக் கொண்டதாக இந்தத் தளம் மாற்றப்பட்டு வருகிறது.

சம்பூர் கடற்படைத் தளம் அமைந்துள்ள பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் பல இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளன.

இந்த நிலையில், கடற்படையின் வலிமை வாய்ந்த படைப்பிரிவான, மரைன் படைப்பிரிவு அங்கு நிரந்தரமாக நிலைகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# மருத்துவக் கல்வியின் தரத்தை நிர்ணயிக்கக் கலந்துரையாடல்

*மருத்துவர் சங்கம் பங்குபற்றாது*

இலங்கையின் மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தரத்தை நிர்ணயிப்பதற்காக அரசு நடத்தவிருக்கும் கலந்துரையாடலில் தங்கள் சங்கம் பங்குபற்றப் போவதில்லை என அரச மருத்துவர் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்னாயக்கவுடன் நாங்கள் நடத்திய பேச்சுகள் திருப்திகரமாக இருந்தன. அவர் வழங்கிய உறுதிமொழிகளுக்கு மதிப்பளித்தே நாங்கள் எங்களது 24 மணித்தியால வேலைநிறுத்தத்தை மீளப் பெற்றோம். அவருடன் நடத்திய கலந்துரையாடலில் தற்போது சிறை வைக்கப்பட்டிருக்கும் பல்கலை மாணவர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற எங்களது கோரிக்கை பிரதானமாக இருந்தது. அந்த மாணவர்கள் திருடவில்லை, கொள்ளையடிக்கவில்லை. ஜனநாயக முறையில் மாத்திரமே போராடினார்கள் என்பதை நாங்கள் அமைச்சருக்கு விளக்கிக் கூறினோம். அவர்களை விடுதலை செய்வதற்குப் பொலிஸாரே இடையூறாக உள்ளார்கள் எனவும் நாங்கள் எடுத்துக் காட்டினோம். எனினும், இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், இலங்கை மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தரத்தை நிர்ணயிப்பதற்கான கலந்துரையாடல்களில் நாங்கள் கலந்துகொள்ளவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் எதைச் செய்தாலும் தனியார் மருத்துவக் கல்லூரியின் நிர்ணயம் தனிநபரொருவரின் ஆதிக்கத்திலேயே இருக்கப்போகிறது என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மை என்பதால் இந்தக் கலந்துரையாடலில் நாங்கள் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை -என்றார். (த)

# தாழிறங்கியதால் அச்சம்

*150 குடும்பங்கள் மாற்றிடங்களில் தஞ்சம்*

கொழும்பு, ஜூலை 31

பண்டாரவளை எல்ல திக்ராவ பிரதேசத்தில் இரவு திடீரென நிலம் தாழிறங்கியதால் அந்தப் பகுதியில் வசித்து வந்த 150 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு மாற்றிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடும் வறட்சிக்குப் பின்னர் பெய்த கடும் மழையைத் தொடர்ந்தே நிலம் தாழிறங்கியுள்ளது.

உமாஓயாத் திட்டம் காரணமாகப் பிரதேசத்தின் பல வீடுகளில் தற்போது வரையில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. நிலம் தாழிறங்குவதுடன் வீட்டுக்குள் நீர் வருவதற்கு ஆரம்பித்துள்ளமையால் மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை ஏற்பட்டமையால் கொழும்பு-பதுளை வீதியை மறித்து மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (த-ய)

# கட்சிச் செயலாளர்களுக்கு ஓகஸ்ட் 4 அவசரக் கூட்டம்

*தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அழைப்பு*

கொழும்பு, ஜூலை 31

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, கட்சிகளின் செயலாளர்களுக்கான அவசர கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாகவே இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று மகிந்த அணி வலியுறுத்தி வருகிறது. அரசும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தயாராக இருப்பதாகக் கூறியிருந்தது.

இந்தப் பின்னணியிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளின் செயலர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (த)



# மிக அவசரமாகக் கூடியது ஜப்பான் பாதுகாப்புச் சபை

டோக்கியோ, ஜூலை 31
வடகொரியாவின் ஏவுகணைச் சோதனையை அடுத்து ஜப்பானின் பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் அவசர அவசரமாகக் கூடியது.
ஜப்பான் கடல் பகுதிக்கு அருகாக இந்தச் சோதனை நடத்தப்பட்டதால் தற்காப்பு நடவடிக்கைளை ஜப்பான் அதிகளவில் கையாண்டது. இதன்படி வடகொரியாவின் சோதனை நடத்தப்பட்ட சில மணி நேரத்தில் ஜப்பான் தேசிய பாதுகாப்புச் சபை கூடியது. "எமது நாட்டின் கடல்பகுதிக்கு மிக அருகாக வடகொரியா ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. எனவே எமது தேசிய பாதுகாப்பை அதிகப்படுத்துங்கள். வடகொரியாவை அதிகம் கண்காணியுங்கள்" என்று ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே பாதுகாப்புச் சபையில் உரையாற்றினார். (ம)



# அல் அக்சா மசூதியில் இளைஞர்கள் வழிபட இஸ்ரேல் தடை விதிப்பு

ஜெருசலேம், ஜூலை 31
கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேலியப் பொலிஸாருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை நீடித்து வருகிறது. இந்த நிலையில் குறித்த பகுதியில் உள்ள அல் அக்சா மசூதியில் பலஸ்தீன இளைஞர்கள் வழிபடுவதற்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளது.
கிழக்கு ஜெருசலேமில் இஸ்லாமியர்களின் மூன்றாவது புனித மசூதியான அல்அக்சா மசூதி உள்ளது. இந்த மசூதிக்கு அருகில் கடந்த 14ஆம் திகதி இஸ்ரேலியப் பொலிஸார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பலஸ்தீனர்கள்தான் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று குறிப்பிட்டது இஸ்ரேல்.
அல் அக்சா மசூதிக்குள் இருந்து சென்ற நபரே இந்தத் தாக்குதலை நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் மசூதிக்குள் ஆயுதங்களை அறிந்திடும் உலோக உணரிகளை இஸ்ரேல் பொருத்தியது. தமது புனித மசூதிக்குள் பொருத்தப்பட்ட குறித்த உணரியை இஸ்ரேல் அகற்ற வேண்டும் என்று தெரிவித்து பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தப் பின்னணியின் அடிப்படையில் குறித்த பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. பின்னர் கடந்த 25ஆம் திகதி மசூதிக்குள் பூட்டப்பட்ட உலோக உணரிகளை அகற்றியது இஸ்ரேல்.
இதனால் கிழக்கு ஜெருசலேமில் இயல்புநிலை திரும்பும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் அங்கு பதற்றமான சூழலே தொடர்ந்தும் உள்ளது. மசூதியின் சுற்றுவட்டாரப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் உள்ள இஸ்ரேலியப் பொலிஸாரை அங்கிருந்து திரும்பப் பெறவேண்டும் என்று பலஸ்தீனர்களின் தரப்பால் தற்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பொலிஸார் வெளியேற வேண்டுமாயின் பலஸ்தீன இளைஞர்கள் அல் அக்சா மசூதியில் வழிபடக்கூடாது என்று தெரிவித்து இஸ்ரேல் தடை விதித்தது. (ம)


# அமெரிக்காவின் எப்பாக
# ஏவுகணையைச் சோதித்

## மிகவும் அபாயகரமான ரகம்
## வொஷிங்டன் கடும் கொதிப்பு
## ஐ.நா. சபை காட்டுக் கத்தல்

பியாங்யாங், ஜூலை 31
தனது 64ஆவது இராணுவ தினத்தை முன்னிட்டு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்தது வடகொரியா. இந்த ஏவுகணை அமெரிக்காவின் எப்பாகத்தையும் தாக்கவல்லது என்றும், வடகொரியா இதுவரை சோதித்த ஏவுகணைகளிலேயே இதுவே மிகவும் அபாயகரமானது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை வடகொரியாவின் முக்கிய வருவாயான நிலக்கரி ஏற்றுமதியை முடக்கியுள்ளது. ஏனைய பல பொருளாதாரத் தடைகளையும் அது விதித்துள்ளது.
ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கூட்டாகவும், ஏனைய நாடுகளும் வடகொரியா மீது பல தடைகளை அடுக்கியுள்ளன. எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டே உள்ளன. கடந்த 4ஆம் திகதி வடகொரியா கண்டம் விட்டுக்கட்டம் பாயும் ஏவுகணையைச் சோதித்தது. இது அமெரிக்காவுக்குப் பேரிடியாக அமைந்தது.
இத்துடன் நின்றுவிடாமல் மற்றொரு ஏவுகணைச் சோதனைக்கும் வடகொரியா தயாராகி வந்தது. ஆனால் இந்த ஏவுகணையை அது எப்போது சோதிக்கும் என்பது புரியாத புதிராகவே இருந்தது. கொரியப் போரின் 64ஆவது ஆண்டு நிறைவுதினம் நேற்றுமுன்தினம் அந்த நாட்டில் மிகவும் கோலாகமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி அந்த நாடு ஏவுகணைச் சோதனையை நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. செய்மதி ஒளிப்படங்களும் இதற்கு சிறந்த ஆதாரமாக அமைந்தன. எதிர்பார்க்கப்பட்ட படியே நேற்றுமுன்தினம் அந்த நாடு கண்டம் விட்டுக்கண்டம் பாயும் (மேம்பட்ட ரகம்)



ஏவுகணைச் சே
யது. இதுவரை
களிலேயே இது
கரமான சோத
டப்படுகிறது. தம
ரிக்காவின் எந்த



பலஸ்தீன மக்களின் விடுதலையை வலியுறுத்திப் போராடிவரும், ஹமாஸ் ஆயுதக் குழுவின் பயிற்சி முகாம் தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. இந்த அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வான்
## நொ

லண்டன்
பிரிட்டன
கொள்வ
நொறுங்
கோடி ரூ
தெற்கு
உயிரிழ
பாவனை
சமூக வ
ஒளிப்பட





# ஷெரீப்புக்

இஸ்லாமபாத், ஜூலை 31
பனாமாகேட் ஊழல் வழக்கி
பாகிஸ்தான் முன்னாள் தலை
அமைச்சர் நவாஸ் ஷெரிப் குற்
வாளி என்று குறிப்பிட்ட பாகிஸ்தா
உச்ச நீதிமன்றம், அவர் தனது ப
வியில் இருந்து விலக வேண்
என்றும் கட்டளை பிறப்பித்தது
இதையடுத்து பாகிஸ்தானின் ப
இடங்களில் ஷெரிப்புக்கு ஆதரவ
கவும், எதிராகவும் ஆர்ப்பாட்டங்க
நடத்தப்படுகின்றன.
பனாமா நாட்டில் உள்ள புகழ்பெற்
'மொசாக் பொன்சேகா' சட்ட நிறு

# கத்தையும் தாக்கும் த்தது வடகொரியா



ணைச் சோதனையை நடத்தி இதுவரை சோதித்த ஏவுகணை லயே இதுவெ மிகவும் அபாய ன சோதனை என்று குறிப்பி டுகிறது. தமது ஏவுகணை அமெ வின் எந்தமூலைமுடுக்கையும் தாக்கும் திறன் பெற்றது என்று வட கொரிய அதிபர் கிம் யோங் உன் குறிப்பிட்டார். கொரியத் தீபகற்பத்தில் தற்போது மீண்டும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

"வடகொரியா பன்னாட்டு சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அந்த நாடு கொரியத் தீபகற்பத்தில் பதற்ற நிலையை தொடர்ந்தும் உருவாக்கி வருகிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் வலியுறுத்தினார். (ம)



# 'ஓவியா' பேரவையாம் அன்னதானத் திட்டமாம்

சென்னை, ஜூலை 31

'பிக் பாஸ்' பார்க்கும் அத்தனைபேருக்கும் விடாமல் அடித்துக்கொண்டிருக்கிறது ஓவியா காய்ச்சல். ஓவியாவுக்கு பாட்டு எழுதுவது, சமூக வலைத்தளங்களில் ஆதரவான கருத்துக்களை அள்ளி விசுவது, என்று சென்றுகொண்டிருந்த ஓவியாவின் ரசிகர்கள், தற்போது 'ஓவியா பேரவை' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளனராம். இந்தப் பேரவையில் சுமார் 350 உறுப்பினர்கள் உள்ளனர். ஓவியாவுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அவர்கள் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

'பிக் பாஸ்' நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்பலையே அதிகளவில் இருந்தது. காலப்போக்கில் இந்த எதிர்ப்பலையே இந்த நிகழ்ச்சியை பார்க்கக்கூடிய வகையில் மக்களை ஈர்த்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் உள்ளவர்களில் ஓவியாவே பலராலும் விரும்பப்படுப வராக உள்ளார். அவரது இயல்பான பழக்கங்களே இந்த ஆதரவை அவருக்குக் கொடுத்துள்ளது என்று கருதப்படுகிறது. இந்த ஆதரவின் ஒரு பகுதியாகவே ஓவியா பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பேரவையின் மூலம் சுமார் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெறவுள்ளதாம். (ம)

உங்கள் ஓட்டு ஓவியாவுக்கே



## வாங்கிய ஒரு மணிநேரத்தில் நொறுங்கியது சொகுசுக் கார்

லண்டன், ஜூலை 31

பிரிட்டனில் அதிநவீன சொகுசு கார் ஒன்று புதிதாகக் கொள்வனவு செய்த ஒரு மணி நேரத்தில் விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. இந்தக் காரின் இலங்கை மதிப்பு சுமார் 6 கோடி ரூபா.

தெற்கு ஜோர்க்ஷை பகுதியில் இந்த விபத்து நடைபெற்றது. உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் முற்றிலும் பாவனைக்கு உதவாத வகையில் கார் நொறுங்கியது. சமூக வலைத்தளங்களில் இந்த விபத்து தொடர்பான ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ம)



# 2020 அமெரிக்க அரச தலைவர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பாக திலேனி



வொஷிங்டன், ஜூலை 31

அமெரிக்காவில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அதிபருக்கான தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பாக ஜோன் திலேனி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது.

இதில் குடியரசுக் கட்சியின் சார்பில் டொனால்ட் ட்ரம்பும் ஜனநாயக கட்சியின் சார்பில் ஹிலாரி கிளிங்டனும் வேட்பாளராக நிறுத்தப்பட்டனர். ட்ரம்ப் வெற்றிபெற்று அதிபரானார்.

இதைத் தொடர்ந்து, அடுத்த அதிபர் தேர்தல் 2020ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். இதன்படி ஜோன் திலேனி போட்டியிடவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. ஜோன் திலேனியை எதிர்த்து ட்ரம்ப் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

> அமெரிக்காவின் அடுத்த அதிபர் தேர்தல் 2020ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். இதன்படி ஜோன் திலேனி போட்டியிடவுள்ளார்

# புக்கு ஆதரவும் எதிர்ப்பும்

31
வழக்கில்
தலைமை
ஷரிப் குற்ற
பாகிஸ்தான்
ர் தனது பத
வேண்டும்
றப்பித்தது.
தானின் பல
கு ஆதரவா
பாட்டங்கள்

புகழ்பெற்ற,
சட்ட நிறுவ

னத்தின் உதவியுடன், பல்வேறு நாடுகளின் முக்கிய பிரமுகர்கள், வெளிநாடுகளில் சட்ட விரோதமாக முதலீடு செய்துள்ளனர். இதுதொடர்பான ஆவணங்கள், 'பனாமா பேப்பர்ஸ்' என்ற பெயரில் கடந்த ஆண்டு வெளியானது.

அந்த பட்டியலில் நவாஸ் ஷெரிப்பின் பெயரும் இருந்ததால், அவருக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

விசாரணைகளின் அடிப்படையிலான தீர்ப்பு கடந்த திங்கட்கிழமை வெளியானது. இதில் ஷரிப் குற்றவாளி என்று குறிப்பிட்ட மன்று அவர் தனது பதவியில் இருந்து விலகி விடவேண்டும் என்றும் உத்தரவிட்டது. இதையடுத்து ஷெரிப் பதவியில் இருந்து விலகினார்.

ஷெரிப்புக்கு ஆதரவானவர்கள் இந்தக் குற்றச்சாட்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்று தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஷெரிப்புக்கு எதிரானவர்கள் 'ஊழல் மோடிவாதி ஷெரிப்' உள்ளிட்ட வாசகங்கள் எழு திய பாதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டு அரசும் உண்மையை மறைப்பதேன்?

தமிழ் மக்கள் மனதில் ஆறாத காயங்களை ஏற்படுத்திய ஜூலைக் கலவரம் குறித்த அதிர்ச்சி புள்ளவிவரமொன்றை வெளியிட்டிருக்கின்றது கூட்டரசு. கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 7 எனத் தெரிவித்திருக்கின்றார் அமைச்சர் சாகல ரட்ணாயக்க.

இலங்கையின் வரலாற்றை முற்றாக வன்முறைப் பாதையை நோக்கித் திருப்பிய ஜூலைக் கலவரம் இடம்பெற்றவேளை, என்ன நடக்கின்றது எனத் தெரியாமல் அதனால் உயிரிழந்த தமிழ் மக்களின் எண்ணிக்கை பெரியது.

அந்த உக்கிரம் கொழும்பிலேயே மிக மோசமாக வெளிப்பட்டது. வீதிகளில் வீடுகளில் கார்களில் பேருந்துளில் எனத் தமிழர்கள் துடிக்கத்துடிக்க கொல்லப்பட்டனர்; உயிருடன்எரிக்கப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில் இடம்பெற்ற இந்தப் பெரும் பயங்கரத்தில் உயிர்கள்காவு கொள்ளப்படுவதை நேரில் பார்த்தவர்கள் பலர் உள்ளனர். அவ்வாறு தாங்கள் நேரில் கண்டதைத் தடுக்கமுடியாமல்திண்டாடியதை பலர்தெரிவித்த பதிவுகள் உள்ளன. வாய்மூலமாகத் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் எழுத்துவடிவிலும் வெளிவந்துள்ளன.

இவை ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கு மதிப்பிடுவதற்கு உதவியாக அமைந்துள்ளன.

ஆனால், இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு – மறந்துவிட்டுஅரசுவெளியிட்டுள்ளபுள்ளிவிவரம் உண்மையில் அதன் மாறாத சிங்களப் பேரினவாத மனோபாவத்தை வெளிப்படுத்தியுள்ளது.

முன்னைய அரசு எவ்வாறு முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து காண்பிக்க முயல்கின்றதோ அதையே தற்போதைய அரசும்கறுப்புஜூலைகுறித்துசெய்ய முயல்கின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்களின் இந்த மனோபாவமே உண்மையில் நீதியை ஏற்படுத்துவதற்குப் பெரும் தடையாகக் காணப்படுகின்றது.

நீதியை நிலைநாட்டுவதற்கு உண்மையை ஏற்றுக் கொள்வது மிகவும் அவசியம். உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு தயக்கமும் அச்சமும் கொண்டவர்களால் நீதியை நிலைநாட்டுவதற்கான பயணத்தை மேற்கொள்ளமுடியாது. அவர்களது மனோபாவம்அதற்குஇடமளிக்காது.உண்மையை கண்டு அஞ்சுபவர்கள் உண்மை வெளிவருவதை விரும்பமாட்டார்கள்.

அவர்கள் நீதியை நோக்கிய பயணத்துக்குத் தடையாகஅமைவார்கள்.அதனைத்தடுப்பதற்குஅதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கு விரும்புவார்கள்.

இதன்காரணமாகநீதியை வேண்டிநிற்கின்றபாதிக்கப்பட்ட மக்களின் காயங்கள் இன்னமும் ஆழமானதாக மாறும். அவை மாறா நிலையை அடையும்.

உலகின் பல உதாரணங்கள் மூலம் வரலாறு கற்றுத் தந்த பாடம் இது.

இந்த முக்கியமான பாடத்தை உள்வாங்க மறுத்து கூட்டு அரசும் வரலாற்றை திரிபுபடுத்தவும், உண்மையை ஏற்றுக்கொள்ளவும் மறுப்பதே நீதிக்கான பயணத்துக்கான தடையாகக் காணப்படுகின்றது.



# தவறான பாதையில் பயணிக்கும் அரசு

கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான மற்றும் அரச கொள்கைகள் கற்கைப் பிரிவின் மூத்த விரிவுரையாளர் தம்ம திசநாயகாவின் கருத்து

சிங்கள மூலம் லங்காதீப
தமிழில் வீ.எஸ்.ரீ

நாடு ஒரு புறத்திலும், அரசஅதிகாரத்தையும் அரச வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் அரசு மற்றொரு புறத்திலும் செயற்பட நேர்ந்துள்ளது. நாட்டை முன்னேற்ற உழைப்போமெனக் கூறி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ள தரப்பினர், முற்றுமுழுதாகஅதற்குமாறான வித்திலேயே செயற்பட்டு வருகின்றனர். நாடு அத்தகைய போக்குக்கு எதிராக கிளர்ந்தெழுகிறது. அப்போதுஅரசவளங்களூடாக அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசு, நாட்டு மக்களுடன் மோதிக்கொள்ள நேர்கிறது. எம்மை ஏசுவதால் பயனில்லை. நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியது, எமது வசதி வாய்ப்புக்களை அனுபவிக்கவே என்ற மனோநிலையிலேயே ஆட்சியாளர்கள் நடந்துகொள்கின்றனர். இயற்கைப் பாதிப்புக்கள், வறுமை, எமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும்சுற்றாடல்பாதிப்புக்கள். பாதாள உலகக் கோஷ்டியினரது செயற்பாடுகள், சாலை விபத்துக்கள் போன்றவற்றால் சிரமங்களுக்கு உள்ளாகும் நாட்டு மக்கள் குறித்து ஆட்சியாளர்கள் அலட்டிக் கொள்ளாத போக்குத்தொடர்கிறது. ஆனால் அரசியலில் அதிகாரத்தைக் கொண்டுள்ள வாய்ப்பால் அதிகாரத்தரப்பினர்கள் பல்வேறு வகைகளில் தமது வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொண்டுதம்மைக் கோடீஸ்வரர்களாக ஆக்கிக் கொள்கின்றனர். மனிதத்துவத்தை முற்று முழுதாக மறந்துவிடுகின்றனர். அந்த வகையில் இன்று நாட்டுமக்கள் இந்த நாடு மட்டுமே எம்முடையது. ஆனால் அரச அதிகாரம், அரசின் அடக்குமுறை, மற்றும் நிர்வாகம் என்பதெல்லாம் ஆட்சியாளர்களது கைகளிலேயே என்ற நிலைப்பாட்டையே ஏற்க நேர்கிறது.

### நாட்டின் வங்குரோத்து நிலை குறித்து மக்களுக்கு எதுவுமே தெரியாது

இந்த நாடு இன்னமும் உணர்ந்துகொள்ளாதஒருவிடயம் உள்ளது. அதேபோன்று ஆட்சியாளர்கள் இந்த நாட்டுக்கு, நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காததொருவிடயமும் உள்ளது. இவை இரண்டுமே ஒன்றுதான். அதாவது, இந்த நாட்டின் அரசு வங்குரோத்து நிலைக்குஉட்பட்டுள்ளதுஎன்பதே அது. நாட்டின் பொருளாதாரம்வங்குரோத்துநிலைக்கு உட்பட்டாகியுள்ளது. நாட்டின் சொத்துக்கள் என்று பெரிதாக எதனையும் கூறிக் கொள்ளவோ, சுட்டிக்காட்டவோ இயலவில்லை.

பொருள்கள் மற்றும் சேவைகள், வர்த்தகம் வங்குரோத்து நிலை கண்டுள்ளன. நிதிவர்த்தகச்சந்தைவங்குரோத்துக்கு உட்பட்டுள்ளது. அரசியல், மக்கள் நலனோன்புத் துறைகள். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற மக்கள் நலன் சார் துறைகள், யாவும் வங்குரோத்துக்கண்டுள்ளன. ஜனநாயகம், நாடாளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம் என்றுசகலதுறைசார்செயற்பாடுகளும் வங்குரோத்து நிலை கண்டுள்ளன. இவை குறித்து நாட்டு மக்கள் தெளிவாகத்தெரிந்து கொண்டிருக்கவில்லை. ஆட்சியாளர்கள் இவை குறித்து நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் கிடையாது. அந்தவிதம்நாட்டு மக்களுக்குத்தெரிவந்தாலும், ஆளும் தரப்பினர் அனுபவிக்கும்வசதிவாய்ப்புக்கள்குறித்து பிரச்சினை பெரிதாக எழ வாய்ப்பு ஏற்படாது. விமர்சனங்கள் எழுமானால், அதனை மூடி மறைப்பதற்கான போர்வையாக ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்படும் "நாம் நாட்டை அபிவிருத்தி செய்து வருகிறோம்" என்றமேலாடைகளையப்பட்டு அரசு நிர்வாணப்படுத்தப்பட நேரும்.

காலாதிகாலமாககூட்டுவர்த்தகத்துக்கும், கூட்டு அதிகார அரசியலுக்கும் அடிப்படை வசதிகளை வழங்கும் பன்னாட்டு மற்றும் தேசிய கூட்டு முதலாளித்துவத்தால் இந்த நாட்டின் அரசு வங்குரோத்து அரசாக ஆக்கப்பட்டு விட்டுள்ளது.

இலங்கையைஅந்தநிலைக்கு உட்படுத்திய இந்த நாட்டு ஆட்சியாளர்களைப் பாராட்டி பன்னாட்டு கூட்டு முதலாளித்துவத்தின் உதவியாளர்களான ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா.சபை உலக வங்கி. உலக வர்த்தக ஒன்றியம். ஆசிய அபிவிருத்தி வங்கிபோன்றபன்னாட்டுநிறுவனங்களும், இந்தியா, சீனா போன்ற நாடுகளும் இலங்கைக்குவிருதுகள்வழங்கியுள்ளன. எதிர்காலத்திலும் அது தொடர இடமுண்டு. உலகிலேயே சிறந்த அமைச்சர்கள் என்ற வகையில் இலங்கையின் சகல அமைச்சர்களுக்கும் எதிர்காலத்தில் விருதுகள் வழங்கப்படக்கூடும்.

அதேபோன்று நாட்டுமக்களால்புறக்கணிக்கப்பட்ட அரசியல்வாதிகளை தேசியப் பட்டியல்மூலமாகநாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதாலும், பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட எதிரணி இருந்த நிலையில் சிறுபான்மை எதிரணித் தரப்புக்களுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வழங்கியதாலும், எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் காலத்தை இழுத்தடித்துச் செல்லும் போக்காலும் உலகத்தின் மூத்தஜனநாயகஅரசுக்கானவிருதுகூட இலங்கை அரசுக்குக் கிட்டக் கூடும்.

போதிய அதிகாரம் கைவசமிருந்தும், இந்த அரசு வங்குரோத்துக்கு உள்ளாகும்வரை ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து மௌனம் காத்ததன் மூலம், அதற்குஉதவியமைக்காக சில அரசதலைவர்களுக்கும் சிறந்த அரச தலைவர் என்ற விருது கிட்டக்கூடும்.





### நாடு வங்ரோத்து நிலை அடைவது பெரியதொரு விபத்தே

எந்த வகையில் பார்த்தாலும், ஒரு இராச்சியம்மற்றும்அதன்அரசுவங்குரோத்து ஆவதென்பது ஒரு நாடு முகம்கொடுக்கநேரும்பெரியதொரு விபத்தே. அத்தகையதொரு நாடு வெற்றிபெற்றநாடாகமற்றும்வெற்றிபெற்ற அரசாகத் தலையெடுக்க வேண்டுமானால், அதற்குக் கடும் முயற்சி அவசியமாகும். தற்போது எமது நாட்டுக்குள்ள ஒரேயொரு சாதகமான நிலைமை, இலங்கை இராச்சியமும்அதன்அரசும்வங்குரோத்து அடைந்துள்ளபோதிலும், இந்த நாடு இதுவரைவங்குரோத்துஅடையாது தொடர்ந்துஇயங்குதலாகும். நீர்கொழும்புமீனவர்கள், ரதுபஸ்வலபொதுமக்கள், மீதோட்டமுல்லபகுதிமக்கள், லொத்தர் சபை விநியோகஸ்தர்கள் போன்ற தரப்பினர்களது எதிர்ப்புக்கள், பொதுமக்களது அன்றாட உணவுப் பொருள்களது விலையேற்றம். சைற்றம்எதிர்ப்பு, பெற்றோலியஊழியர்கள் மற்றும் துறைமுக ஊழியர்கள் எதிர்ப்பு போன்றவற்றின் மூலம் புலப்படும்உண்மை இந்தநாடுஇன்னமும் வங்குரோத்து அடையவில்லை என்பதேயாகும்.

ஆனால் இத்தகைய எதிர்ப்புக்களின்போது நிலவிய மற்றும் நிலவும் முக்கிய பின்னடைவு என்னவெனில், எதிர்ப்பாளர்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வைத்தாம் வங்குரோத்துநிலைஅடைந்துள்ள அரசிடமிருந்தே கோருகிறோம் என்பதைத்தெரிந்துகொள்ளாதிருப்பதேயாகும்.

அதேபோன்று பல்வேறு பிரிவுகளிலும் ஜனநாயக நடைமுறை வங்குரோத்துக்கு உட்பட்ட நிலையிலுள்ள அரசிடமே தாம் தமது கோரிக்கைகளை முன்வைப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாட்டைப் பற்றிப் பீடித்துள்ள நோய்களுக்கான சிகிச்சையை அந்த நோய்களைக் காவும் அரசுகளிடமிருந்து அல்லது அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள அரச அதிகாரம். அடக்கி ஒடுக்கல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றினூடாக மக்கள் பெறநேர்கிறது. அது புரிந்துணர்வற்ற தன்மையின் பலாபலனாகும். ஒருபுறம்அரசவளங்கள் மற்றும் அவற்றைக் கையகப்படுத்தியுள்ள அரசு நோய் நிவாரணியல்ல நோயின்மூலகாரணமே அதுதான். ஆதலால். நோய்க்கான மருந்தோ. நிவாரணமோ கோரி கூப்பாடுபோடுவது எந்த வகையிலாவது பயன்தர வல்லதா? ஆனால் உண்மையில் அத்தகைய புரிந்துணர்வற்ற செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டின் வளங்களை விற்பனை செய்வது, 99வருடங்களுக்கோஅல்லது 198 வருடங்களுக்கோ குத்தகைக்குவிடுவது, மென்மேலும்கடன் பெறுவது, ரூபாயின் மதிப்பைக் குறைத்தல் அல்லது வெளிநாட்டுப் பங்குச்சந்தை அரசநிறுவனங்களது நிபந்தனைகளுக்குகீழ்ப்படிவது, என்பவை சில பகுதிகளாகப் பார்க்கப்பட வேண்டும். அரசொன்று இத்தகைய முக்கியதீர்மானங்களைமேற்கொள்வதுஒன்றில்அரசைமுன்னெடுத்துச் செல்ல இயலாத அளவுக்கு வங்குரோத்து நிலைக்கு உட்படநேரும் சந்தர்ப்பத்திலேயே அல்லது வெளிநாட்டுத் தரப்புக்களால் அத்தகைய விதத்தில் செயற்படுமாறு அழுத்தம் மேற்கொள்ளப்படுவது அல்லது அவ்விதம் செயற்படாவிட்டால்அரசைகவிழ்த்துவிடுவதான மிரட்டல் விடப்படுவதாலாகும், அல்லது அத்தகைய தீர்மானங்களால் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு பெரும் இலாபமீட்டும் வாய்ப்புக் கிட்டுவதாலும் அந்த நிலை ஏற்படக்கூடும். அத்தகையவிற்பனையால் கையூட்டு அல்லது பங்குத்தொகை பெறும்வழக்கம் முதலாளித்துவதரப்புக்கள் மத்தியில் வழக்கில் உண்டு.

எதிர்ப்பாளர்கள் மீது பாதுகாப்புப்படையினர் மூலம் பல தரப்பட்ட எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வது. எதிர்ப்பாளர்களால் அரச சேவையாளர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாவது. எவர் எதிர்த்த போதிலும் அரசு தான் தீர்மானித்த விதத்திலேயே செயற்படுமென தேசியப்பட்டியல் மூலம் அமைச்சுப்பதவி பெற்றுச் செயற்படும் அமைச்சர்கள் இறுமாப்புடன்தெரிவித்தல் அரசசட்டதிட்டங்களுக்குஎதிர்ப்புத் தெரிவிக்கும்உரிமை நாட்டு மக்களுக்குக் கிடையாதென தெரிவித்தல் போன்றவற்றை மேற்கூறப்பட்டபின்னணியின்அடிப்படையிலேயே வைத்து நோக்க வேண்டியுள்ளது.

> இந்த நாடு இன்னமும் உணர்ந்து கொள்ளாத ஒரு விடயம் உள்ளது. அதே போன்று ஆட்சியாளர்கள் இந்த நாட்டுக்கு, மக்களுக்குத் தெரிவிக்காத தொரு விடயமும் உள்ளது. இவை இரண்டுமே ஒன்றுதான். அதாவது, இந்த நாட்டின் அரசு வங்குரோத்து நிலைக்கு உட்பட்டுள் ளது என்பதே அது.

வங்குரோத்து அடைந்துள்ள பின்னணியில் நாடுபுரிந்துகொள்ளவேண்டிய விடயமொன்று உள்ளது. நாட்டு மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயலுமை இன்று அரசிடம் இல்லை. இதனால் அரசு பின்னடைவுநிலை கண்டுள்ளது. வெளிநாடுகளது அச்சுறுத்தல்களிலிருந்து விடுபடவிரும்பினாலும், அந்தவிதம் செயற்படும் வலிமை அரசிடம் இல்லை. அந்தஇயலாமையைஅரசு நாட்டு மக்களுக்குக்காட்டிக்கொள்ளவும் விரும்பாது. அந்த விதம் வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை விடுவிக்கத்தக்கதிறன் கொண்ட அரசியல்வாதிகள் எவரும் இன்றைய நாடாளுமன்றத்தில் இல்லை. ஏனையஅரசநிறுவனங்களிலேயோ, அரச சேவையாளர் மற்றும் குடிசார் சமூகத்தின் மத்தியிலோ அத்தகைய திறன் கொண்ட எவரும் கிடையாது.

இத்தகைய வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விடுபட வேண்டுமானால் அதற்கான உரியசெயற்றிட்டங்கள்வகுக்கப்பட்டு, அவை முறைப்படி முன்னெடுக்கப்படல் வேண்டும். பழையஅனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டாக வேண்டும். நாம் நினைப்பதைவிட அரசியல் பொருளாதாரம், மற்றும்சமூக இயக்கம்என்பவைசிக்கல்கள் நிறைந்தவை. எனவேநியாயமாகச் சிந்தித்து நாட்டின் அரசியல் செயற்பாடுகளை உரிய முறையில் திட்டமிட்டு, உரிய முறையில் நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும்.





## ஆசிரியருக்கான கடிதம்

### அசாதாரண சந்தர்ப்பங்களில் எரிபொருள் விநியோகத்தில் ஒழுங்கு முறையொன்று கடைப்பிடிக்கப்படுமா?


நாட்டில் இன்று எங்கு பார்த்தாலும் ஏதேதோ கோரிக்கைளை முன்வைத்துப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனநாயக நாட்டில் அறவழியிலான போராட்டங்கள் மதிக்கப்பட வேண்டும். அதே சமயம் போராட்டங்களை முன்னெடுப்போரும் மக்கள் நலன் பாதிப்புறாத விதத்தில் செயற்பட வேண்டியது அவசியம். பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சமீபத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தபோது பொதுமக்களில் பல்வேறு தரப்பினரும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடரக் கூடுமெனத் தவறாக எண்ணி உடனடித் தேவைக்கு அதிகமாக எரிபொருள் கொள்வனவு செய்து இருப்பில் வைத்துக் கொள்ள முயன்றனர்.

கடந்த 24 ஆம் திகதி திங்கள் இரவு வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதால் மறுநாள் செவ்வாய்க்கிழமை குடாநாட்டின் பல இடங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வாடிக்கையாளர்களால் நிறைந்தன. அவ்வாறு சென்றவர்களுக்கு நிரப்பு நிலையத்தினரும் கட்டுப்பாட்டின்றி எரிபொருள் நிரப்பி முடித்துவிட்டனர். பகலில் ஓய்வாக இருந்தவர்கள் போக வேலை முடிந்து மாலையில் சென்றவர்களுக்கு வழக்கம் போல்"எரிபொருள்தீர்ந்துவிட்டது" என்றபதிலே கிடைத்தது.

திட்டமிடப்படாத இத்தகைய செயற்பாட்டால் அன்றாடம் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரம்பும் வாகன உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனவே இனிவரும்காலங்களிலாவது எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடத்துவோர் அதுவும் ப.நோ.கூ. சங்க நிரப்பு நிலையங்கள் பங்கீட்டு அடிப்படை முறையை பின்பற்றினால் நன்மை பயக்கும் என நம்புகிறேன். எப்படியும் ஓரிரு நாளில் போராட்டம் நிறை வடையும்தானே? முன்புபோல பாதைத் தடையோ விலையேற்றமோ ஏற்படப் போவதில்லை என்பதை மக்களும் உணர்ந்து செயற்பட வேண்டும்.


நா. துஷாந். வரணி.

# நடப்பாண்டின் ஜூன் மாத நகரும் சராசரி பணவீக்க மாதிரி




நடப்பு வருடத்தின் ஜூன் மாத காலப்பகுதிக்கான நகரும் சராசரி பணவீக்கம் 6.1 வீதமாகக் காணப்படுகிறது. அத்துடன் மே மாதத்துக்கான நகரும் சராசரி பணவீக்க பெறுமானங்களும் 6.1 சதவீதமாகவே அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

# இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு குறைவடைந்துள்ளது



## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கடந்த மே மாதத்தில் இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு மேலும் குறைவடைந்துள்ள தகவலை இலங்கை மத்திய வங்கி வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி அமெரிக்க டொலரின் பெறுமானத்துடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது 3.8 வீதத்தால் குறைந்திருந்தது எனவும், 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதி தொடக்கம் கடந்த மே மாதம் வரை அதன் மதிப்பு என்பது மேலும் 1.2 வீதத்தால் குறைவடைந்துள்ளது எனவும் வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை தற்போது அமெரிக்க டொலரொன்றின் பெறுமான மதிப்பீடு இலங்கை ரூபாவில் 151.94 ஆக உள்ளது. தவிர யூரோவுக்கு 3.2 வீதமும், ஸ்டேர்லிங் பவுணுக்கு 2.8 வீதமும், ஜப்பானிய் யென்னுக்கு 5.5 வீதமும், கனேடிய டொலருக்கு 1.9 வீதமும், ஆஸ்திரேலிய டொலருக்கு 6.1 வீதமும், இந்திய ரூபாவுக்கு 4.8 வீதமும் என்ற விகிதாசாரத்தில் இலங்கை ரூபாவின் மதிப்பு குறைவடைந்து காணப்படுகிறது.

மேலும் இந்த நிலமைகள் மேலும் தீவிரமடையலாம் எனவும் 2016ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 2.2 வீதத்தால் குறைவடைந்து ஆயிரத்து 310 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பதாகவும் மத்தியவங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ)

# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றமில்லை

## சமனிலையைப் பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்

சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக் கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்தக்கூடிய கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானித்துள்ளதென தெரியவருகிறது.

இதன்படி நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித்தன்மை காணப்படுகின்ற தகவல்களும் தீர்மானமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7 மற்றும் 8.5 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படும் என மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை யாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.5 சதவிகிதமாக ஆக பேணப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஓ)

# ‘முதலீட்டாளர் கருத்துக்களம்’ மாநாடு கொழும்பில்

## தேசிய அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது

தேசிய அபிவிருத்தி வங்கி 2015/2016 நிதியாண்டின் செயற்பாடுகள் குறித்து அறிவிக்கும் நோக்குடன் ஒழுங்கமைத்திருந்த 'முதலீட்டாளர் கருத்துக்களம்' மாநாடு கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கில் அதிகளவான முதலீட்டாளர்கள், முதலீட்டு ஆலோசகர்கள், பங்குத்தரகர்கள், நிதிய முகாமையாளர்கள் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்களுக்கு தேசிய அபிவிருத்தி வங்கி குழுமத்தின் செயற்பாடுகள் குறித்தும் எதிர்காலத்துக்கான மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

மாநாட்டு நிகழ்வில் கருத்துரைத்த தேசிய அபிவிருத்தி வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி திமந்த செனவிரட்ண,

“அபிவிருத்தி நோக்கிலான வர்த்தக வங்கியியல்” போன்ற தனித்துவமிக்க வர்த்தக கருத்தாக்கம் எவ்வாறு சில்லறை வர்த்தக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக பரப்பினுள் இயல்பாக நுழைகிறது என்பது குறித்துப் பேசப்பட்டது. மூலதன முதலீட்டுச் சந்தை தலைமைத்துவ இடத்துடன் வங்கியியல் கூட்டுத்தொகுதியை குறுக்கு விற்பனை வாய்ப்புகளில் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

தவிர தரமான சொத்து அடித்தளம், உயர் பயிற்சிபெற்ற பணியாளர்கள் மற்றும் கடந்தகாலத்தில் பெற்றுக் கொண்ட பாடங்கள் ஆகிய வாய்ப்புகளை பற்றிக்கொண்டவாறு வங்கியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்கு உந்துதல் அளிக்கும் காரணிகளாக இந்த விடயங்களும், மாநாடும் அமைந்துள்ளது” - என்றார். (ஓ)

NDB bank

# தெற்காசியாவின் இரண்டாவது செலவுகூடிய நகரமாகக் கொழும்பு

## பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவின் ஆய்வு முடிவில் தகவல் வெளியீடு

தெற்காசியாவில் உள்ள நாடுகளில் இரண்டாவது செலவுகூடிய நகரமாகவும் உலகின் 108 ஆவது நகரமாகவும் கொழும்பு தெரிவாகியுள்ளது.

இதன்பிரகாரம் பொருளாதார புலனாய்வுப் பிரிவு (Economist Intelligence unit) மேற்கொண்டதான ஆய்வின் முடிவிலேயே இந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இந்தக் கணக்கெடுப்பானது உலகின் 133 நகரங்களில் இருந்தான 160 வகையான பொருள்களுக்கு 400 இற்கும் மேற்பட்ட விலை நிர்ணய குறிகாட்டிகளை ஒப்பீட்டு நோக்கியதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

> உலகின் 133 நகரங்களில் இருந்தான 160 வகையான பொருள்களுக்கு 400 இற்கும் மேற்பட்ட விலை நிர்ணய குறிகாட்டிகளை ஒப்பீட்டு நோக்கியதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஒப்பீட்டு அடிப்படைகளினுள் உணவு, நீர், ஆடை, வீட்டுத்தளபாடங்கள், தனிப்பட்ட பராமரிப்புப் பொருள்கள், வீட்டு வாடகை, போக்குவரத்து செலவு, பயன்பாட்டுக் கட்டணங்கள், தனியார் பாடசாலைகள் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்ததமை குறித்து நோக்கத்தக்கது.

தெற்காசியாவில் செலவு கூடிய நகரங்களின் பட்டியலில் முதலிடத்தை டாக்காவும், மூன்றாவது இடத்தை காத்மண்டுவும் பெற்றுக்கொண்டுள்ளது.

பொருளாதார புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளதான இந்த ஆய்வில் புதுடெல்லி, சென்னை, மும்பை, கராச்சி, பெங்களூர் உள்ளடங்கலான 8 தெற்காசிய நகரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# குடும்பங்களின் வாழ்வாதாரக் கட்டமைவு




## கடன் குழியில் இருந்து மீளுதல்

உடுவிலூர் கலா

மனித வாழ்வியல் என்பது பல்வேறு பண்பியல்கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் உணவு, உடை, உறையுள் என்பன இடைவிலகலின்றி அத்தியாவசியமாகிறன.

கலை, கலாசார, ஒழுக்கவிழுமியங்கள் பண்பியல் ரீதியான கட்டுப்பாடுகளாகவும், தனிமனித கடப்பாடுகளாகவும் வரையறைபெறுகின்றன. சமூகநிலைத்திருப்பில் இவற்றைக் கைக்கொள்ளும் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கனதியாக உறவாடுகின்றனர். குடும்பமாக இணைவுகொண்டு தங்களை வழிநடத்திச் செல்வதற்கான தேடல்களை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

**குடும்பப் பொருளாதாரம்**

இவ்விதமான தேடல்களுள் குடும்பப் பொருளாதாரம் என்பது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அங்கு கண்டுகொள்ளப்பட வேண்டிய பிறழ்வின்றிய வருமானத் தெரிவும், அது தருகின்ற நிதிப் பங்கீடுகளின் தெளிவும் உறுதித் தன்மையோடு இருக்க வேண்டும். வருமானத் தெரிவிலும், நிதிப் பங்கீடுகளின் தெளிவிலும் உடைவுகள் ஏற்படும் போது வாழ்வாதாரம் என்பது இயல்பாகவே சிதைவுறுகிறது. இந்தநிலைகளில் தொழிற்றுறை விருத்தியும், அது சார்ந்த நேர்த்தியான நிதி ஈட்டங்களும் சிறந்த முறையில் பங்காற்ற வேண்டும். குடும்பம் என்கின்ற வாழ்வியல் கூறுகளில் வாழ்வாதாரமாகக் கட்டமிடப்படுகின்ற நிதி ஆளுகைகள் குடும்ப அங்கத்துவம் சார்ந்து சமநிலை பெறவேண்டும். அதற்கான காரணிகள் உறுதிப்பாட்டோடும் இருக்க வேண்டும்.

இந்த நிலையிலே சமூகப் பரம்பலில் அமைவு பெறுகின்ற நிதி நிறுவனங்கள் மக்களிடையேயான பண விநியோகத்தில் முக்கிய பங்குதாரராக நிலைபெறுகின்றன. சேமிப்பு, பணப் பங்கீடு, கடன்வழங்கல், குத்தகை என்ற போக்கில் குடும்பங்களோடு தங்கிவாழ்கின்ற. நிதியின் சமநிலையான புரள்வை 'வங்கி' என்கின்ற அங்கம் கொண்டு அரசு சார்ந்தும், தனியார் சார்ந்தும் சதகமாக்கிக் கொள்கின்றனர். குடும்ப நிலைகள் சார்ந்து இடர்பாடுகளை தந்திருக்கின்றனர். குறிப்பாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிக இடர்பாடுகளை எதிர்நோக்கிவருகின்றனர்.

**தலைமைத்துவம்**

வருமான ஈட்டம் குறைந்த குடும்பங்களில் வாழும் பெண்கள் தமது குடும்பத்தின் கல்வி, உணவு, உடை போன்ற தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு கடன் பெறுநிலைக்கு ஆளாகின்றனர். பெண் தலைமைத்துவக் குடும்பங்களை எடுத்து நோக்கின் பெண்களே குடும்பத்தின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் அதிக மன உளைச்சலுக்கும், விரக்திக்கும் ஆளாகின்றனர். வாழ்வாதாரத்துக்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை உதவி கோரி நாடும் பெண்களுக்கு கடனடிப்படையில் சில உதவிகள் வழங்கப்படுகின்றன.

சுயதொழிலாளருக்கான தொழில் மேம்பாட்டுக் கடன்களை வங்கிகள் வழங்குகின்ற போதிலும் அவை குழுக்கடனாகவோ அல்லது தனிக்கடனாகவோ உள்ளன. இதைவிடவும் தனியார் வங்கிகளும், தனியார் லீசிங் கம்பனிகளும் கடனடிப்படையில் பணத்தை வழங்குகின்றன. கிராமங்கள் தோறும் சென்று குழு அடிப்படையிலேயே கடன்களை வழங்குகி வருகின்றன. இவை பெண்களின் தொழிலையோ, உத்தரவாதிகளையோ கருத்தில் கொள்ளாத கடன் வழங்கலாகவே அமைந்துள்ளன.

இந்தக் கடன்களைப் பெறுபவர்கள் பெரும்பாலானோர் பெண்களாகவே உள்ளனர். தமக்காகவும் ஏனையோருக்காகவும் கடனைப் பெற்றுத் தவணைப் பணம் கட்டுவதற்கு இவர்கள் படும்பாடு என்பது வார்த்தைகளில் விபரிக்கமுடியாதவை.

ஆரம்பத்தில் குடும்பத்தின் கட்டாய தேவை கருதி கடன் பெறுகின்ற போதும் காலம் செல்லச் செல்ல காரணமின்றி கடன் பெறும் நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். குழுவில் இல்லாதவர்கள் கூட குழுவில் உள்ளவர்கள் பெயரிலே கடன் தொகையைப் பெறுகின்றனர். கடன்தொகையை மீள் செலுத்துவதில் அதிக இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

வீட்டில் பணம் இல்லாத போது வாராந்தம் எப்படித் தவணைப் பணம் கட்டுவதென்ற சிக்கலை இயல்பாகவே எதிர்கொள்கின்றனர். பணம் கட்ட வேண்டிய தினத்தில் அதிகாலையே பெண்கள் எழுந்து வீடு வீடாக சென்று கடன்கேட்டிருப்பதை காணக் கூடியதாக உள்ளது. கிராமங்களில் வழங்கப்படும் கடனால் பெண்கள் பலவித சீரழிவுகளை எதிர்கொள்கின்றனர். அண்மையில் குழந்தையையும் கிணற்றில் எறிந்து தாயும் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட செய்திகளை நாம் அறிந்துகொண்டுள்ளோம். இதுகூட வங்கிக் கடன் நன்முகம் கொண்டு தந்த சோகமே.

**கடனளிப்பு**

வங்கிக் கடன்களை எடுத்துநோக்கின் அவை தேவையின்றி ஒருபோதும் வழங்கப்படுவதில்லை. அரச உத்தியோகத்தர் இருவர் பிணையாளியாக இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது. அதனையும் தாண்டி கடன் பெற்றால் காலம் தவறாது தவணைப்பணத்தைச் செலுத்த வேண்டும். ஆக, குடும்பங்கள் கடன்பெறும் முன்பாக அது குறித்தான நடைமுறை இடர்பாடுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். கடன் பெறுவதானால் அதற்கான திட்மிடல்களை முற்கூட்டியே மேற்கொள்ள வேண்டும்.

> சுயதொழிலாளருக்கான தொழில் மேம்பாட்டுக் கடன்களை அரச வங்கிகள் வழங்குகின்ற போதிலும் அவை குழுக்கடனாகவோ அல்லது தனிக்கடனாகவோ உள்ளன. இதைவிடவும் தனியார் வங்கிகளும், தனியார் லீசிங் கம்பனிகளும் கடனடிப்படையில் பணத்தை வழங்குகின்றன. கிராமங்கள் தோறும் சென்று குழு அடிப்படையிலேயே கடன்களை வழங்கி வருகின்றன. இவை பெண்களின் தொழிலையோ, உத்தரவாதிகளையோ கருத்தில் கொள்ளாத கடன் வழங்கலாகவே அமைந்துள்ளன.

இவைதவிர கடன் வழங்கும் கம்பனிகளும், தனியார் வங்கிகளும் கிராமங்கள் தோறும் சென்று வழங்கிவரும் குழுக் கடன்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அத்தோடு அரச வங்கிகளின் கடன் செயற்றிட்டத்தினை ஒருமுறை மீளாய்வு செய்ய வேண்டியதும் கட்டாயமானதாகும். இந்தக் கடன் திட்டங்கள் மூலம் பெண்களே அதிகம் பாதிப்படைகின்றனர். இதனை தெளிவாகப் புரிந்துகொண்டு நிதி நிறுவனங்கள் தங்களது நிதி சார்ந்து கடன் பங்கீடுகளை மக்களுக்கு வழங்க முன்மொழிவுகளை மேற்கொள்ள வேண்டும். சில கிராமங்களில் இருக்கும் சனசமூக நிலையங்களில் எந்த வித செயற்பாடுளும் இருக்காது. தினசரிப்பத்திரிகைகள் கூட அங்கு இருப்பதில்லை. ஆனாலும் வங்கிகளின் செயற்பாடுகள் மட்டும் இயங்குநிலையில் இருந்துகொள்ளும். இதுவே பொது அவதானமாகக் காணப்படுகிறது.

ஆக, கடன் வழங்கும் வங்கிகளும், கம்பனிகளும் குறித்து கரிசனை கொள்ள வேண்டும். சுயதொழிலை மேம்படுத்தும் விதமான கடன் தொகைகளை வழங்க வேண்டும். அதற்கான சிறந்த இலகு நடைமுறைகளை முன்னிலைப்படுத்த தங்களது திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். கடன் பெறுவோரும் அதற்கேற்றவிதமாக தங்களை தகவமைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செயல்நிலைபெறமுடியாது போனால் கடன்பெறல் என்ற நிலையிலிருந்து தங்களை இடைவிலத்திக் கொள்ள வேண்டும். வாழ்வாதாரங்களை கட்டமைத்துக்கொள்ள தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். தேவையற்று கடனாழிகளுக்குள் மூழ்கிப் பரிதவித்திடாது தங்களைத் தற்காத்திருக்க வேண்டும்.



# மங்கையரின்



## பாதங்கள் கூறும் பலன்கள் என்ன?

- மங்கையரின் பாதங்கள் தாமரை இதழ்களைப் போன்று சிறந்த நிற முடையனவாக அமைந்திருந்தால் அத்தகைய மங்கையர்கள் சத்குண சம்பத்துகள் உடையவர்களாகவும், சங்கீத சாகித்திய வித்வாசகம் பொருந் தியவர்களாகவும், இனிய குரலுடன் மகாராணி போன்ற சுகபோக சௌபாக் கியங்களை உடையவர்களாகவும் விளங்குவார்கள். புண்ணிய காரியங் களைச் செய்வதிலும் தான, தர்மங்க ளைச் செய்வதிலும் சிறந்து விளங்கு வார்கள்.


- பாதங்கள் சிவந்த நிறமுடைய னவாக வும் தசை வளம் மிக்கனவாகவும், மென்மையானவையாகவும் மழ மழப்பாகவும் நன்றாகப் படியக் கூடிய னவாகவும் எப்போதும் வெதுவெதுப் பானவையாகவும், அமையப் பெற்ற பெண்கள் பெரும் பேறுகளைப் பெற் றுத் திகழ்வார்கள்.

- பாதங்கள் வெண்மையாகவோ, தங் கத்தைப் போன்ற நிறமுடையவன வாகவோ அமைந்திருக்கும் மங்கை யர்கள் மகா பாக்கியசாலிகளாகவும் கணவனுக்கு ஏற்ற நல்லதொரு மனை வியாகவும் அன்னதானம் செய்பவர்க ளாகவும் பெரியோர்களைப் பக்தியுட னும், மரியாதையுடனும் ஆதரிக்கும் நற்குணமுடையவர்களாகவும் விளங் குவார்கள். புண்ணிய நதிகளில் நீரா டிப் புண்ணிய திருத்தலங்களுக்கும் திருக்கோயில்களுக்கும் சென்று தெய்வ தரிசனம் செய்வதில் ஆர்வமு டையவர்களாகவும் திகழ்வார்கள். சாந்த சுபாவமும், தெய்வ பக்தியும் மிக்க இவர்கள், கணவரின் பணிவி டைகளை அன்புடனும் பொறுப்புட னும் செய்யும் நற்குண நற்பண்புக ளைக் கொண்டவர்களாகவும் இருப் பார்கள்.

- பாதங்கள் முரடாகவும் கெட்டியாகவும் நிறம் மாறியும் காணப்படுவது குறை வைக் குறிப்பதாகும். வெண்மை நிறத் துடனும், கோணலாகவும், வறண்டும் காணப்படுவது வறுமையைக் குறிக் கும். வெண்மை நிறமாகவும் சமமில் லாமலும் கல்லைப் போன்று கடினமா கவும் இருந்தால் துன்பங்கள் அதிகமா கும். கருமை நிறமாக இருப்பின் நல்ல அமைப்புகளைக் கெடுத்துவிடும்.

- பாதங்களைப் பச்சை இலையின் பழுப்பு நிறமுடையனவாகப் பெற்றவர் கள் கொடூர மனமுடையவர்களாக வும், நல்லோரைப் பழிப்பவர்களாக வும் தெய்வ நம்பிக்கையற்றவர்களாக வும, நாத்திகம் பேசுபவர்களாகவும் இருப்பதோடு உடல் தூய்மை, மனத் தூய்மை, ஆத்ம சுத்தம் அற்றவர்களா கவும் இருப்பார்கள்.

(தொடரும்)



## வரலாற்றில் இன்றைய தினம் 31.07.2017



2012-ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கம் வென்ற லரிசா லற்றினாவின் சாதனை மைக்கல் பெல்ப்ஸால் முறியடிக்கப்பட்டது.

751-பிஜி எரிமலை கடைசியாக வெடித்ததாகப் பதிவு.

1492-ஸ்பெய்னிலிருந்து யூதர்கள் வெளியேற்றப் பட்டனர்.

1656-இந்திய மொகலாயப் பேரரசராக அவுரங்க சீப் அறிவிக்கப்பட்டார்.

1865-உலகின் முதலாவது ஒடுங்கிய ரயில் பாதை ஆஸ்திரேலியாவின் குவின்ஸ்லான்ட் கிறான்ட் செஸ்ரரில் திறந்து வைக்கப்பட்டது.

1948-நியூயோர்க் பன்னாட்டு வானூர்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. பின்னாளில் இது ஜோன் எப் கெனடி பன்னாட்டு வானூர்தி நிலையமென் பெயர் மாற்றப்பட்டது.

1964-றேன்ஜர் 7 செய்மதியால், சந்திரனின் அண் மித்த தெளிவான படங்கள் அனுப்பப்பட் டன. இவை முன்னதாக தொலைநோக்கி யால் அவதானிக்கப்பட்டதை விட ஆயிரம் மடங்கு தெளிவானவையாகும்.

1973-டெல்ரா வானூர்தி சேவை வானூர்தியான டி.எல். 723 மசாசூட்ஸ் பொஸ்டன் லோகான் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானதில் 69 பேர் உயிரிழந்தனர்.

1988-மலேசியா பெனாங்கலி சுல்தான் அப்துல் ஹலீம் பெரிடேர்மினல் பாலம் உடைந்ததில் 32 பேர் உயிரிழந்தது டன் ஆயிரத்து 674 பேர் காயமடைந்தனர்.

1992-ஜோர்ஜியா, ஐக்கிய நாடுகள் சபையில் இணைந் தது.

1992-தாய்லாந்தின் வானூர்தியொன்று நேபாளம் காத் மண்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 113 பேரும் உயிரிழந்தனர்.

2002-நிமலராஜன் படுகொலை வழக்கில் கைதான ஈ.பி.டி.பி. உறுப்பினர் யாழ். கொண்டுவரப்பட்டார்.

2006 -பிடல் காஸ்ரோவால் அவரது அதிகாரங்கள் சகோதரரான ரவுல் காஸ்ரோவிடம் கையளிக்கப் பட்டன.

2006-லெபனானின் கானா கிராமம் மீது இஸ்ரேலிய வானூர்திகள் குண்டு வீச்சு நடத்தியதில் 22 குழந் தைகள் உட்பட 51 பேர் உயிரிழப்பு.

2012-ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கம் வென்ற லரிசா லற்றினாவின் சாதனை நீச்சல் வீரர் மைக் கல் பெல்ப்ஸால் முறியடிக்கப்பட்டது.

### நாளை

**01.08.2017**
செவ்வாய்க்கிழமை

**ஆடி - 16**

திதி: நவமி பி.ப.02.21 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.ப. 03.18 வரை
சுபநேரம்: 10.33–12.03 வரை
ராகுகாலம்: 03.03–04.33 வரை

# பத்தி எழுத்து

## ஈழத் தமிழரின் அடையாளமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்

உலகின் பிறநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகளைத் தற் போது தாயக மண்ணில் பெருமளவில் காண முடிகின்றது. இவர்களால் யாழ்ப் பாண நகர வீதிகள் நிரம்பி வழிகின்றன. வர்த்தக நிலையங்கள் பலவற்றுக்கும் இவர் கள் சென்று பல்வேறு பொருள்களையும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வரு கின்றனர். இவர்களின் நடை, உடை, பாவனை ஆகியவற்றை வைத்து இவர்கள் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதைக் கணிக்க முடிந்தது.

இவர்கள் எமது உறவுகள் என்பதைப் பெரு மையுடன் கூற முடிகின்றது.

நீண்ட கொடிய போர் ஈழத்தமிழர்களை உலகின் நாலாபுறமும் பரந்து வாழச் செய்து விட்டது. இனத்தால், மொழியால், நிறத் தால் வேறுபட்ட மக்களுடன் கலந்து வாழுவ தென்பது இலகுவான காரியமன்று. வாழ்க்கை முறைகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளையும் சமாளித்தாக வேண் டும். ஆனால் எம்மவர் இவற்றையெல்லாம் கடந்து தாம் புகலிடம் அடைந்த நாடுகளில் ஐக்கிய மடைந்துள்ளதை ஒரு மிகப் பெரிய சாதனையாகவே கருத வேண்டும்.

ஆனால் இவர்களின் இளைய தலைமுறை யினர் தொடர்பாகக் கவலைகள் எழாம லில்லை. இவர்கள் புலம்பெயர் நாடுகளி லேயே பிறந்து வாழ்கின்றனர். அந்தந்த நாடுகளின் மொழி, கலாசாரம் ஆகிய வற்றோடு ஒன்றிப் போயுள்ளனர். இவர்கள் தமது தாயக மண் தொடர்பாக அதிகமாக அறிந்திராதவர்கள். இந்த மண்ணின் பழக்க வழக்கங்களும் இவர்களுக்குத் தெரியாத விடயங்கள். இவர்கள் தாம் வாழ்கின்ற நாடுகளிலேயே தொடர்ந்து வாழ விரும்பு வார்கள். காலப் போக்கில் தமது தாயக மண்ணுடனான உறவையும் இவர்கள் துண் டித்துக் கொண்டாலும் அதில் ஆச்சரியப்ப டுவதற்கு ஒன்றுமில்லை. இவற்றையெல் லாம் சிந்தித்துப் பார்க்கும் போது மனதில் வேதனை எழத்தான் செய்கின்றது.

இன்றும் கூடப் பணம் காய்க்கின்ற மரங்க ளாகவே புலம் பெயர்ந்து வாழ்கின்ற உற வுகள் பார்க்கப்படுகின்றனர். அந்த அள வுக்கு அவர்கள் தமது தாயக மண்ணில் வாழ்கின்ற உறவுகளுக்குப் பணத்தை அனுப்பி வைத்திருக்கின்றனர். கடும் குளி ரிலும், இரவிலும் இவர்கள் தமது உடலை வருத்தி வேலை செய்து அனுப்பி வைத்த பணத்தை இங்குள்ள சிலர் தவறாகச் செலவு செய்வதும் உண்டு.

என்னதான் இருந்தாலும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகள் ஈழத்தமிழர்களின் அடையாளமாகக் காணப்படுகின்றனர். ஈழத் தமிழன் இல்லாத நாடு இல்லை என்ற பெருமையும் இவர்களால் தான் ஏற்பட்டது. புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவு களே! எமது தாய்மொழியையும், பண்பாட் டையும் என்றுமே மறந்து விடாதீர்கள்.

# சூர்யாவுடன் எந்த நேரத்திலும் நடிக்கத் தயார்

## சொல்கிறார் பல்லவி



தமிழ் திரையுலக முன்னணி நடிகர்களில் ஒருவரான சூர்யாவுடன் எந்த நேரத்திலும் நடிக்கத் தயார் என்று நடிகை சாய் பல்லவி தெரிவித்துள்ளார்.

மலையாளத்தில் தயாரான 'பிரேமம்' படத்தில் நடித்து இந்திய திரைப்பட உலகில் பிரபலமானவர் சாய்பல்லவி. முதல் படத்திலேயே 'மலர் டீச்சர்' என்று அவரை ரசிகர்களும் கொண்டாடினார்கள். இது போல தெலுங்கிலும் அவர் அறிமுகமான முதல் படத்திலேயே 'பானுமதி' என்ற அவரது பாத்திரம் பேசப்பட்டது. அங்கும் ரசிகர்களுக்கு பிடித்த நடிகையாக அவர் உருவெடுத்தார்.

தமிழில் பிரபல நடிகர்களுடனும், பிரபல இயக்குநர்களின் படங்களிலும் நடிக்க சாய் பல்லவிக்கு வாய்ப்பு வந்தது. ஆனால் "மருத்துவருக்குப் படிக்கவுள்ளேன்" என்று தெரிவித்து வாய்ப்புக்களை அவர் தவிர்த்து விட்டார். எனினும் முன்னணி நடிகர் சூர்யாவுடன் வாய்ப்பு வந்தால் உடனடியாக நடிப்பேன் என்று பல்லவி குறிப்பிட்டுள்ளார்.

"நான் கல்லூரி நாட்களில் இருந்தே சூர்யாவின் மிகப்பெரிய ரசிகை. அவருடைய படங்களை தவறாமல் பார்ப்பேன். எந்த நேரத்திலும் சூர்யாவுடன் நடிக்கத் தயாராக இருக்கிறேன்" என பல்லவி மேலும் தெரிவித்தார்.




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** சமயோசித புத்தியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும். ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலை சீராகும். இலாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** பேச்சு, செயலில் அன்பு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடா முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனை நன்மை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானது.

**கன்னி:** பெற்றோரின் சொல்லுக்கு மரியாதை கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். நன்றி மறந்தவரைக் கூட பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் செயல் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**தனுசு:** உறவினர்களின் அதிருப்திப் பேச்சுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** திட்டமிட்ட செயலை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கும்பம்:** சிறு முயற்சி கூட பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். உடல்நலம் சீராக இருக்கும்.



**கணவன்:** ரிவில வெறும் சீரியலா பாத்துக்கிட்டிருந்த நீ இப்பெல்லாம் நியூஸ் பார்க்குறியே.. பரவாயில்லையே
**மனைவி:** செய்தி வாசிக்கிற அந்த பொண்ணு கட்டிக்கிட்டு இருக்கிற புடவையைப் பாருங்க.. அது எங்க கிடைக்கும்னு தான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 6 | 8 | 1 | 9 | 5 | 7 | 3 |
| 7 | 9 | 1 | 4 | 5 | 3 | 6 | 8 | 2 |
| 3 | 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 4 | 9 |
| 2 | 1 | 5 | 6 | 8 | 4 | 9 | 3 | 7 |
| 9 | 3 | 7 | 1 | 2 | 5 | 4 | 6 | 8 |
| 6 | 8 | 4 | 9 | 3 | 7 | 2 | 1 | 5 |
| 8 | 4 | 3 | 5 | 9 | 6 | 7 | 2 | 1 |
| 1 | 7 | 9 | 2 | 4 | 8 | 3 | 5 | 6 |
| 5 | 6 | 2 | 3 | 7 | 1 | 8 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



கும்பகர்ணன் மாதக் கணக்கில் தூங்கினான்.
இது என்ன காலம்?
கொசுவே இல்லாத காலம் சார்..!



நீ எதுவரைக்கும் படிக்க ஆசைப்படுற?
ஸ்கூல் பெல் அடிக்கற வரைக்கும் சார்..!

"ஹோட்டல்ல ஒரு பொண்ணு வந்து சிங்கிளானு" கேட்டா, சந்தோசமா ஆமாம்னு சொன்னேன். அப்புறம் எதுக்கு இரண்டு கதிரை எண்டுட்டு ஒண்ட எடுத்திட்டுப் போயிட்டா...!






# தங்க இறகு

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அவனது வயலில் விளைச்சல் பெருகவேயில்லை. பல ஆண்டுகளாக தன் நிலத்தோடு பாடுபட்டும் கூட அவன் வறுமையிலேயே வாடிக் கொண்டிருந்தான். ஒரு நாள் வயலில் ஏர்பிடித்து உழுது விட்டு வரும்போது பளபளவென ஒளி வீசும் பறவை ஒன்று அங்கிருந்த மரத்தில் இருப்பதைக் கண்டான். அதனைப் பார்த்த விவசாயி, "இந்தப் பறவை என் வயலைக் காக்க வந்த தேவதையோ! இத்தனை நாள் இதை நாம் காணாமற் போனோமே! இன்று முதல் இதை நாம் வணங்குவோம்" என்று தீர்மா னித்தான்.

மறுநாள் பறவையிடம் வந்தவன் " எனது வயலைக் காத்து வரும் தேவதையே! இவ்வளவு நாள்களும் நான் உன்னைக் கவனிக்கவில்லை. என்னை மன்னித்து விடு. உனக்கு என் வீட்டில் இருந்து பழங்கள் எடுத்து வந்துள்ளேன். இவற்றைச் சாப்பிட்டு என்னை ஆசீர் வதிப்பாயாக" என்று கூறி பழத் தட்டை மரத்தின் கீழ் வைத்து தனது வீட்டை அடைந்தான். மறுநாள் வந்து பார்த்தபோது பாத்திரத்தினுள் ஒரு தங்க இறகு இருந்தது. மகிழ்ச்சியுடன் அதனை எடுத்துச் சென்றான். இதே போன்று தினமும் நடைபெற்று வந்தது. விவசாயியும் தினமும் தங்க இறகை எடுத்துச் சென்று விற்று மகிழ்ச்சியாக காலத்தை ஓட்டி வந்தான். விவசாயி ஒரு நாள் வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால் தன் மகனை அழைத்து பறவைக்கு பழம் வைத்து வருமாறு கூறிச் சென்றான். மகனும் தந்தை கூறிய படி பழங்களை வைத்து விட்டுச் சென்றான். மறு நாள் காலையில் வந்து பார்த்த பொழுது தட்டில் தங்க இறகு இருப்பதைக் கண்டான். அவனோ "இந்தப் பறவையைப் பிடித்து வேண்டியளவும் இறகுகளைப் பிய்த்துக் கொள்வோம். மீண்டும் அதற்கு இறகுகள் முளைத்துக் கொள்ளும் தானே" என நினைத்து மறுநாள் ஒளிந்திருந்து பறவை பழம் சாப்பிடும் பொழுது அதனைப் பிடித்து இறகைப் பிய்க்க முயன்றான். அப்போது அந்தப் பறவையோ அவன் கண்களைக் குத்தி குருடாக்கி விட்டுச் சென்றது. விவசாயியின் மகன் பேராசையால் பார்வையற்றவனானான். கிடைத்ததைக் கொண்டு அவனால் திருப்தியடைய முடியவில்லை

**பேராசை பெரும் நஷ்டம்.**

நிழல்களாக உள்ள உருவங்கள் பெரிய படத்தில் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து வட்டம் இடுவோம்



## நகைச்சுவைத் துணுக்கு



ஆசிரியர் :- சந்திரனில் முதலில் காலடி வைத்தவர் யார்?
மாணவன் :- நீல் ஆம்ஸ்ரோங் சார்
ஆசிரியர் :- சரியான பதில். இரண்டவதாக காலடி வைத்தவர் யார்?
மாணவன் :- அதுவும் ஆம்ஸ்ரோங் தான்.
ஆசிரியர் :- எப்படி உறுதியாகச் சொல்கிறாய்?
மாணவன் :- ஆம்ஸ்ரோங் முதலில் வலது காலை வைத்திருப்பார். பின்னர் இடது காலை வைத்திருப்பார்.



## காலநிலை எதிர்வு கூறல்

- புவியிலும் வானிலும் தினம் தினம் பல மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.
- புவியிலும் வானிலும் ஏற்படக் கூடிய மாற்றங்களை முன்னதாகவே தெரிவிப்பதைக் காலநிலை எதிர்வு கூறல் என்பர்.
- பூமியில் சில வேளைகளில் கடும் வெப்பம் நிலவுகிறது. சில நேரங்களில் பெருமழை பொழிகிறது. திடீரெனப் புயற்காற்று வீசுகிறது. இவை எல்லாம் கால நிலை மாற்றங்களாகும்.
- இவற்றைவிட கடற்பெருக்கு, பூகம்பம், ஆழிப் பேரலை (சுனாமி) போன்றனவும் ஏற்படுகின்றன.
- இவற்றையெல்லாம் முன்னதாகவே தெரிந்து கொள்ளப் பல கருவிகள் உள்ளன.
- செய்மதிகள், இராடர்கள், றேடியோ சோண்ட் போன்றவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை முன்னதாகவே தெரிந்து கொள்ளலாம்.
- செய்மதிகள் வானிலை மாற்றங்களைப் படம் பிடித்து பூமிக்கு அனுப்புகின்றன.
- இவற்றை அடிப்படையாகக் கொண்டே தொலைக் காட்சி, வானொலி என்பன காலநிலை எதிர்வு கூறல்களைத் தெரிவிக்கின்றன.
- இவற்றைவிட ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் காலநிலை அவதான நிலையங்கள் உள்ளன.
- அவையும் வெப்ப தட்ப மழை நிலைகளைக் கணித்துக் கூறுகின்றன.
- காலநிலை எதிர்வுகூறல்கள் மக்களின் நலன்கருதியே தெரிவிக்கப்படுகின்றன.
- அவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்படுதல் மக்களின் கடமையாகும்.

# இரட்டைமொழி
## (இரட்டைக்கிளவி)

ஒரு சொல் இரட்டித்துவரின் இரட்டைச் சொற்கள் எனப்படும். இந்தச் சொல் பிரிந்து தனித்து ஒலிப்பதில்லை. இரட்டைச் சொற்கள் பெரும்பாலும் ஒலிக் குறிப்பாகவே இருக்கும். இந்த இரட்டை சொற்றொடரை இரட்டைக் கிளவி என்றும் கூறுவர். 'கிளவி' என்பது சொல் என பொருள்படும். இரட்டைச் சொல்லில் ஒன்று தனித்து நின்றும் பொருள் தராது. இவை கூற வந்த கருத்தைத் தெளிவாகப் புரிய வைக்கும். வாக்கியத்தை அழகு படுத்தும்.

1. கம கம - பூ கம கம என மணம் வீசியது.
2. குடு குடு - சிறுவன் குடு குடு என நடந்தான்.
3. சல சல - ஆற்று நீர் சல சல என ஓடியது.
4. கல கல - அவள் கல கல எனச் சிரித்தாள்
5. கிடு கிடு - வயோதிபர் குளிரினால் கிடு கிடு என நடுங்கினார்.
6. குபு குபு - புகை குபு குபு எனப் பரவியது.
7. நற நற - கோபத்தில் பற்களை நற நற எனக் கடித்தான்.
8. வழ வழ - அவள் வழ வழ என பேசிக் கொண்டிருந்தாள்.
9. திரு திரு - திருடன் பிடிப்பட்டதும் திரு திரு என விழித்தான்.
10. மட மட - தம்பி மருந்தை மட மட எனக் குடித்தான்
11. விறு விறு - சந்தைக்கு அம்மா விறுவிறு என்று நடந்து சென்றார்.
12. குறு குறு - புறா குறு குறுத்தது
13. பட பட - இதயம் பட பட என அடித்தது
14. கட கட- மாட்டு வண்டி கட கட என ஓடியது.
15. தக தக - தங்கள் தகதக என மின்னியது.

# இணை மொழி

ஒத்த ஓசை அமைப்பினாலான இரு சொற்கள் இணைந்து பொருட் செறிவுடையனவாக வழங்கும் போது அவை இணைமொழி எனப்படும். பல சொற்களால் விளக்க வேண்டிய கருத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்த இணைமொழிகள் உதவுகின்றன.

1. அகமும் புறமும்
2. அடியும் நுனியும்
3. அருமை பெருமை
4. ஆடல் பாடல்
5. அல்லும் பகலும்
6. ஆட்டம் பாட்டம்
7. ஆய்ந்து ஓய்ந்து
8. புகழ் இகழ்
9. சீரும் சிறப்பும்
10. பயிர் பச்சை
11. ஆதி அந்தம்
12. உயர்வு தாழ்வு
13. ஓய்வு ஒழிவு
14. சீறிச் சினந்து
15. ஏறக்குறைய



## பொன் மொழிகள்

1. சிரித்தால் சேர்ந்து சிரிக்கப் பலர் வருவர் அழுதால் சேர்ந்து அழ எவரும் வரமாட்டார்கள்.
2. நீ எதை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறாயோ அதை நீ மற்றவர்களுக்கும் கொடு.
3. அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்கலாம்.
4. பணம் பசியைப் போக்கும்; துன்பம் உணர்ச்சியைப் போக்காது. உணவு பசியை நீக்கும்; ஆனால் உயிருக்கு அமைதி தராது.
5. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப் போனாலன்றி சமுதாயத்தில் வாழ்க்கை நடத்த முடியாது.
6. வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது.

# தீயில் வெந்த வானியல் அறிஞர்

மனித குலம் நல்லறிவு பெறவும் நல் வாழ்வு வாழவும் பயன்படும் பல்வேறு அறிவியல் உண்மைகளைக் கண்டு பிடித்த காரணத்துக்காகவே பல விஞ்ஞானிகளும், அறிஞர்களும் பண்டைக்கால மத வாதிகளாலும் மன்னர்களாலும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு மடிந்திருக்கிறார்கள். அவ்வாறு மதகுருமாராலும், ஆட்சியாளர்களாலும் மத விரோதி என்று குற்றம் சாட்டப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு இரும்புக் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு தீக்கிரையான வானியல் அறிஞர்களில் ஒருவர் ஜியார்ட்டானோ புரூனோ! நட்சத்திரங்கள் அனைத்தும் சூரியனைப் போன்ற கோள்கள் தான் என்றும், நட்சத்திரங்களுக்கு துணைக்கோள்கள் உண்டு என்றும் கூறியது தான் அவர் செய்த ஒரே ஒரு தவறு. தாம் சொன்னது தவறு என்று ஒப்புக் கொண்டால் அவருக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும், இதற்கு அவருக்கு 8 நாள் அவகாசம் அளிக்கப்படுகிறது என்றும் மன்னனும் மதகுருமார்களும் கூறினார்கள். ஆனால் புரூனோ இறுதிவரை தாம் சொன்னதை மாற்றிச் சொல்லவே யில்லை. இறுதியில் எட்டாவது நாளன்று கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் புரூனோவின் பொன்னுடலைத் தீயிட்டுக் பொசுக்கினார்கள்.



## அரசியல்...

வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு 19 மாதங்கள் கடந்துள்ள நிலையில், நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்படி கருத்தை வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் மக்கள் இயக்கமாக பரிணாமம் பெற்றபின் மக்களை அரசியல் ரீதியாக ஆற்றுப்படுத்த இதுவரை எடுத்த நடவடிக்கைகள் போதுமானதா?, அரசியல் கருத்துக்கள், அரசியல் எதிர்பார்ப்புக்கள் ஆகியன எம் மக்களிடையே பழக்கப்பட்டுவிட்டனவா?, எம்முள் இருக்கும் பல்விதமான கட்சி, மதம், தொழில் சார்ந்த நடைமுறை வேற்றுமைகள் எம் மக்களின் ஒருமித்த அரசியல்ப் பயணம் என்ற ஒரு பொது நிகழ்வின் அடிப்படையில் தேவையான அளவுக்குத் தணியவிடப்பட்டுள்ளனவா? இவ்வாறான பல கேள்விகள் எம்மிடையே எழுவது இயல்பே.

### இயக்கப் பயணம் எம்முடையது

கட்சி ரீதியாக நாம் செல்லக் கூடிய பயணம் வேறு, இயக்கமாக இயங்கிச் செல்வது வேறு, என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். எமது மக்கள் தமது வருங்காலத்தைப் பற்றிச் சிந்தித்து சிறந்த அரசியல் முடிவுகளுக்கு வர வேண்டும் என்றால் அவர்கள் இடையே அரசியல் ரீதியான புரிந்துணர்வை நாம் முதலில் ஏற்படுத்த வேண்டும்.

தற்போது எமது மக்களுக்கிருக்கும் ஒரே அரசியல் ரீதியான புரிந்துணர்வு கட்சி சார்பானதே அல்லது தனித் தலைவர்கள் சார்பானதே. எமது இயக்க ரீதியான பயணமானது தமிழ் மக்களை அரசியல் புரிந்துணர்வின் மூலம் ஐக்கியப்படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கு அரசியல் அறிவு பரந்துபட்டுப் பரவ வேண்டும்.

அடுத்தகட்ட நடவடிக்கையாக இதற்கிசைவாக எங்கள் இயக்கம் இயங்கினால் என்ன? என்ற எண்ணமே இன்று எம்மை இங்கு கூடி வரவைத்துள்ளது. சந்துபொந்துகளுள் வாழும் எம் மக்கள் மத்தியில் அரசியல் அறிவை எடுத்துச் சென்று அவர்களை அரசியல் ரீதியாக ஆற்றுப்படுத்த ஆவனசெய்ய வேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றோம்.

எமது அரசியல் வேணவாக்களை அடையாமல் போனோமானால் காலக்கிரமத்தில் நாம் அனுபவிக்கப் போகும் எமது அவலங்கள் பற்றிமக்களுக்கு அறிவிக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

### 7 மாகாணங்களில் பௌத்தத்துக்கு முன்னுரிமை

எதற்காக வடக்கு கிழக்கை இணைக்கக் கோருகின்றோம்?, இணைக்காவிட்டால் நடப்பது என்ன?, எதற்காகக் கூட்டாட்சி அடிப்படையிலான ஒரு அரசமைப்பை வலியுறுத்துகின்றோம்?, அவ்வாறான கூட்டாட்சி கிடைக்காவிட்டால் ஆவது என்ன?, எதற்காக உள்நாட்டு சுயாட்சியை வலியுறுத்துகின்றோம்?, அது கிடைக்காவிட்டால் நாம் அனுபவிக்கப் போவது என்ன?, எமது பாரம்பரிய பிரதேசங்கள் என்றால் என்ன?, அவற்றை ஏன் வலியுறுத்துகின்றோம்?, அவற்றை அடையாளப்படுத்தி அடைய முனையாவிட்டால் ஆவது என்ன?, எமது அரசியல் எதிர்பார்ப்புக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்குமா?, அப்படியானால் அவற்றைக் கைவிட்டு அரசு தருவதைப் பெற்றுத் திருப்தி அடையலாமா?, பெரும்பான்மை இனத்தோரும் சில சிறுபான்மை மதத்தோரும் எமது


(24ஆம் பக்கம் பார்க்க)


# உடனடி வேலை வாய்ப்பு

1. MARKETING MANAGER
2. MARKETING CO- ORDINATOR
3. MARKETING ASSISTANT
4. GRAPHIC DESIGNER
5. WEB DESIGNER
6. LECTURER /விரிவுரையாளர்
   (தகைமை :-MCA ,M.Sc in Comp. Sc)
7. சுத்திகரிப்பாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
அனுபவம் விரும்பத்தக்கது.
திங்கட்கிழமை (31.07.2017) CV உடன்
நேரில் சமூகமளிக்கவும்.
NORTH LANKA IIT
TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING,
STANLEY ROAD, JAFFNA.


## மரண அறிவித்தல்



### வேலாயுதம் குமாரசாமி

(ஓய்வு பெற்ற தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

140 (50), சிவன் பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் குமாரசாமி நேற்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற சிவஞானமணியின் அன்புக்கணவரும் சிவகுமார் (பெல்ஜியம்), ஜெயக்குமார் (கனடா), இந்திரகுமார் (நிலைய பொறுப்பு நன்னடத்தை உத்தியோ கத்தர் பருத்தித்துறை நீதி நிர்வாகப்பிரிவு), தேவ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி (பெல்ஜியம்), குணரஞ்சினி (கனடா), ரஞ்சினி (சிரேஷ்ட பதவி நிலை உத்தியோ கத்தர் மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மாலினி (நோர்வே) ஆகி யோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, பராசக்தி மற்றும் கந்தசாமி, கதிர்காமநாதன் (ஜேர்மனி), ராணி, லோகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாசகோதரரும் காலஞ் சென்றவர்களான மகேந்திரன், குணரத்தினம் மற்றும் இராமநாதன் (நாதன் உணவகம் நல்லூர்), சரோஜினி, மகாதேவன், யோகம், தவமணி (குப்பிழான்) ஆகியோரின் அன்புமைத்துனரும் காலஞ்சென்ற க. சொக்கலிங்கம் (ஆசிரியர், குப்பிழான்) அவர்களின் அன்புச்சகலனும் சிந்துஜா, திவ்யா, சஞ்ஜீவகன், சிவரூபி, அஞ்சுகா, வினு, அரன், வைஷ்ணவி, சுவாதிஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் கைலாஷ், கார்த்திகா, கிருத்திஷ், ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கு. இந்திரகுமார் (மகன்)
021 222 6158, 077 612 0364

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் உபஅதிபர்
**திருமதி தமயந்தி நடேசன்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**புவனேஸ்வரி செல்வநாயகம்**


அவர்கள் 29.07.2017 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.**

## மரண அறிவித்தல்

*நூற்றாண்டு கண்ட மூத்த பிரஜை*

### கலாபூஷணம் சந்திரசேகரம் இராசதுரை



தோற்றம் 12.04.1916 மறைவு 30.07.2017

பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திசேகரம் இராசதுரை நேற்று (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை தனது 102 ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்லத்துரையின் சகோதனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும்நடராசா, தில்லைராஜன், தில்லை ராணி (பிரான்ஸ்), சிவராசா (பிரான்ஸ்), குணராசா (ஜேர்மனி), கணேசராசா, காலஞ்சென்ற ஜெயராணி, நேசராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கமலர், சுசீலனாதேவி, சண்முகநாதன், பத்மினி, கமலலோஜினி, ஜெனிற்றா, குமுதனி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2017) திங்கட் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 02.30 மணியளவில் பருத்தித்துறை கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாதனை, பருத்தித்துறை.** தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தவநாயகி இராசரத்தினம்



பிறப்பு . 17.07.1941
இறப்பு . 30.07.2017

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவநாயகி இராசரத்தினம் நேற்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் தர்ஷனி,தனுஷா,தர்ஷன்(ஆசிரியர் இரத்தினபுரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரூபன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), சிவரூபன் (சிறிராம் ஒயில் மாட்,மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷா,சஞ்சயன்,கபினாஷ்,ஜஸ்வினி, கௌஷிகா, அபிரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் லைலா, ராதா, பேபி , ஜெயம், சூட்டி, ஆச்சி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2017)திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள்.அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 236 0188

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 29 |
| 12 | 07 |
| 1943 | 2017 |



### திருமதி இராஜலட்சுமி சந்தாணகிருஷ்ணன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சட்டநாதர் கோயிலடி,நல்லூர் ராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி சந்தாணகிருஷ்ணன் கடந்த (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா நம்புலக்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கண்ணுச்சாமி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் பிரபல நாதஸ்வர வித்துவான் காலஞ்சென்ற சந்தாணகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும் கண்ணதாசன்(லண்டன்), சத்தியசீலன்(பிரான்ஸ்), ஜெயந்தி, ஜெயசீலன் **(அல்லா)**, பிறேமதாசன், தயானந்தி, துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமலர், சிறிதரன், வளர்செல்வம்,தவராசா,ஜனனி ஆகியோரின் அன்பு மாமியாரும் தீபிகன், தீபிகா(பிரான்ஸ்), திவ்வியா, மீரா (கனடா) அபிசன், அச்சயா, ஆச்கன், அட்சயன், அனஞ்சயன், அட்சனா, ஆகாசன், அபிசேக்,அரனிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.மணியளவில் இலக்கம் 1,ராச வீதி நல்லூரிலுள்ள இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராசவீதி,நல்லூர். தகவல்: குடும்பத்தினர்
077 923 5952

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்புக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அவை பற்றி நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன?, எமது எதிர்பார்ப்புக்களை எம் மக்கள் மனதில் படிகப் படவைக்க நாம் ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டுமா? அது மும் மொழிகளிலும் வெளிவரவேண்டுமா?, எமது இயக்கம் பற்றியும் அதன் நோக்குகள் பற்றியும் முழுமையான அறிவை அம்பலப்படுத்த அந்தச் சஞ்சிகை அதிவிரைவில் வர வேண்டுமா?

இவற்றைவிட ஒரு கருத்து, மருத்துவ வல்லுனர் லக்ஸ்மனால் முன் வைக்கப்பட்டது. அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவது பற்றியது. எம்மைப் பொறுத்தவரையில் எந்த மதத்துக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய அவசியமேதுமில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏழு மாகாணங்களில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதென்பது அவர்களின் விருப்பம். ஆனால் தயாரிக்கப்படும் எந்த அரசமைப்பிலும் வடக்குக் கிழக்கில் சகல மதங்களும் சம உரிமை பெறவேண்டும் என்பதே எமது கோரிக்கை. பௌத்தத்தை வடக்கு கிழக்கில் திணிக்க எந்த அரசுக்கும் தார்மீக உரித்துக் கிடையாது.

**வன்மத்தை களைவோம்**

இன்னோரன்ன கேள்விகள் பல எம்மால் விடைகாணப்பட வேண்டும். ஆற அமர சிந்தித்தே அடுத்த கட்டநடவடிக்கையில் இறங்க வேண்டும். ஆனால் உடனேயே எம் மக்களிடையே அரசியல் அறிவைப் பரப்ப மாவட்டந் தோறும் எமது தொடர்பாடல் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களை வழி நடத்த எமது இயக்கம் ஒரு சிறப்பு அரசியல்க் குழுவை நியமிக்க வேண்டும்.

எம்மைத் தடம் பெயரவைக்க நடவடிக்கைகள் பல இன்று எடுக்கப்பட்டு வருகின்றன. நடவாத நிகழ்வுகளை நடந்ததாகக் கூறி நஞ்சை எம் மக்கள் மனதில் நடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே எம்மிடையே ஒற்றுமை இருத்தல் அவசியம். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு. ஒற்றுமை இன்றேல் எல்லோர்க்குந் தாழ்வு. இதை நாம் மறத்தல் ஆகாது. கொள்கைகளில் நாங்கள் இறுக்கமாக இருப்போம். எமது நடவடிக்கைகளில் எமது நம்பகத் தன்மையை வலியுறுத்துவோம். ஆனால் எமது மனங்களில் இருக்கும் வன்மத்தைக் களைவோம் - என்றார். (வ-5,101)

## *30 கிலோ...*

மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அவை விற்பனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப் பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ)

## *60 கிலோ...*

ருந்த மாவா எனப்படும்போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றினர். பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து அங்கு விரைந்தவர்கள் இந்தப் போதைப் பொருளைக் கைப்பற்றினர். சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் தான் தாங்கியிருந்த வீட்டிலேயே இவற்றை மறைத்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட போதைபொருள் 60 கிலோ கிராம் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ)

## *3 மட்டங்களில்...*

மட்டக்களப்பு, ஜூலை 31

"புதிய அரசமைப்பில் நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் மூன்று மட்டத்தில் பகிரப்படும். அந்த அதிகார எல்லைக்குள் உட்பட்ட விடயங்களை மக்கள் தங்களுடைய இறைமையின் அடிப்படையில் பயன்படுத்துவார்கள்"

இவ்வாறு எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கை அடுத்த மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்துக்கு வரும். புதிய அரசமைப்பில் ஆட்சி அதிகாரம் மூன்று மட்டங்களில் இருக்கும். தேசிய மட்டம், மாகாண அல்லது பிராந்திய மட்டம், உள்ளூராட்சி மட்டம் என்று அமையும்.

**ஒவ்வொரு மட்டத்திடமும் என்ன அதிகாரம்?**

நாட்டின் ஒருமைப்பாட்டுடன் கூடிய சகல கருமங்களும் தேசிய மட்டத்தில் இருக்கும். அதற்குத் தனியான பட்டியல் இருக்கும். தேசிய பாதுகாப்பு, தேசிய பொலிஸ் படை, அயலுறவுத் துறை, குடிவரவு குடியகல்வு, நிதி சம்பந்தமான சில விடயங்கள், பன்னாட்டு உடன்படிக்கைகள் உள்ளிட்டவை தேசியப் பட்டியலில் இருக்கும்.

மாகாண சபைக்கு, காணி, சட்டம் ஒழுங்கு, பிராந்தியப் பொலிஸ், கல்வி, உயர் கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், கடற்தொழில், கால்நடை வளர்ப்பு, போக்குவரத்து, மீள்குடியமர்வு, தொழில் வாய்ப்பு, மறுவாழ்வு, கலாசாரம் போன்ற மக்களின் அன்றாட பொருளாதார சமூக விடயங்களை நிறைவு செய்யும் விடயங்கள் மாகாணப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும். உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தனியாக அதிகாரப் பட்டியல் இருக்கும்.

ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள அதிகாரங்களை, அந்த மட்டத்தில் உள்ள அதிகாரத்துக்குப் பொறுப்பானவர்கள் பயன்படுத்துவார்கள். தேசிய மட்டத்தில், அரச தலைவர், தலைமை அமைச்சர், நாடாளுமன்றம் மற்றும் மாகாண மட்டத்தில், முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சி மட்டத்தில் மன்றத் தலைவர், உறுப்பினர்கள் என்று இருக்கும்.

**உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும்**

ஒவ்வொரு அதிகார எல்லைக்கும் உட்பட்ட விடயங்களை மக்கள் தங்களுடைய இறைமையின் அடிப்படையில் பயன்படுத்துவார்கள். தேசிய மட்டத்தைப் பொறுத்தவரை, அரச தலைவரை மக்கள் தெரிவு செய்வார்கள். தலைமை அமைச்சரை மக்கள் தெரிவு செய்வார்கள். மாகாணங்களைப் பொறுத்தவரையில் மக்கள் தங்கள் இறைமையின் அடிப்படையில் முதலமைச்சர், உறுப்பினர்களைத் தெரிவு செய்வார்கள்.

இந்த அதிகாரங்களை மீளப் பெறமுடியாது. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அதிகாரங்களை மீளப் பெற முடியாது. நடுவண் அரசுக்கு மீளப் பெறவேண்டிய தேவை ஏற்பட்டால், அதற்குச் சிறப்பு ஒழுங்குகள் இருக்கின்றன.

இவ்வாறான அதிகாரப் பகிர்வு நிலமை உருவாகுமாக இருந்தால் அது மக்களுடைய உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற விடயமாக முழுமை பெறும். அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அந்த அதிகாரங்களை நடுவண் அரசு பயன்படுத்த முடியாத நிலமை ஏற்படுமாக இருந்தால் பகிர்ந்தளிக்கப்படுகின்ற மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அதன்மூலம் அங்கீகரிக்கப்படும். அதுதான் நிலைப்பாடு. அதுதான் உலகில் பல நாடுகளில் உள்ள அரசமைப்பின் அடிப்படை.

செனட் உருவாக்கம்.

தற்பொழுது ஒரு சிந்தனை இருக்கின்றது. செனட் சபை அமைக்கப்பட வேண்டும். அதில் 55 பேர் இருப்பார்கள். 9 மாகாணசபைகளிலிருந்தும் தலா 5 உறுப்பினர்கள் வீதம் தெரிவு செய்யப்படுவார்கள். ஏனைய 10 பேர் நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படு வார்கள்.

புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சி என்ற சொல் இருக்கக் கூடாது. கூட்டாட்சி (சமஷ்டி) என்ற சொல் வருவதற்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது. கூட்டாட்சி என்ற சொல் வந்தால் அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று அவர்கள் சொல்கின்றார்கள். ஏக்கிய ராஜ்ஜிய என்ற சிங்களச் சொல் வரவேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது. ஆனால் அதற்கு விளக்கம் கொடுக்கப்படும். பிரிபடாத பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாடு என்று விளக்கம் இருக்கும். நாட்டில் ஒற்றையாட்சி முறை இருக்காது. ஒற்றையாட்சி முறை இருந்தால் ஆட்சி அதிகாரம் முழுவதும் மையத்தில் நடுவண் அரசிடம் குவிந்திருக்க வேண்டும். ஒற்றையாட்சி கூட்டாட்சி யுனிர்ரரி என்ற சொல் வராமல், ஏக்கிய ராஜ்ஜிய மாத்திரம்தான் வரும். அத்துடன் விளக்கமும் சேர்ந்து வரும்.

**மக்களிடம் நாம் வருவோம்**

அரசமைப்பு தயாரிக்கப்பட்ட பின்னர் மக்களிடம் நாங்கள் வருவோம். அதன் விளக்கங்களை மக்களுக்குச் சொல்லுவோம். மக்கள் கருத்துக்களைக் கேட்போம். உரிய விளக்கங்களைக் கொடுப்போம்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. எங்களுடைய ஆதரவுடன் அந்தப் பெரும்பான்மையைப் பெறலாம். மக்கள் விடுதலை முன்னணி ஏனைய முஸ்லிம், தமிழ் உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஆதரித்தாலும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறலாம். அதைத் தொடர்ந்து பொதுவாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியினர், ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் பங்களிப்புச் செய்தால், இதில் வெல்லலாம்.

நாம் இந்தச் சந்தர்ப்பத்தை உதாசீனம் செய்ய முடியாது. ஐ.நா. தீர்மானத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தில் இலங்கையும் பங்காளி. இதனை நிறைவேற்ற இலங்கை கால அவகாசமும் கோரியுள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நாங்கள் பக்குவமாக நடந்து வருகின்றோம். எம்மைச் சந்திக்கும் பிரதிநிதிகளிடமும் அதைச் சொல்லி வருகின்றோம்.

**மகிந்த அணி விரும்பவில்லை**

தற்செயலாக புதிய அரசமைப்பு நிறைவேற் றப்படாமல் போகுமாக இருந்தால், அந்தத் தவறுக்கு நாங்கள் பொறுப்பாளியாக முடியாத நிலை உருவாக வேண்டும். மகிந்த அணி புதிய அரசமைப்பை ஒருபோதும் விரும்பாது. அதைக் குழப்ப கடும் முயற்சி எடுப்பார்கள். ஆனால் அதற்கு இடமளிக்காமல் நாங்கள் இயன்றளவு இந்தக் கருமத்தை முன்னெடுக்க வேண்டும். அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டிய தேவை, அரச தலைவர் மைத்திரிக்கும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் உண்டு. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து இருக்கின்றது. நாடு தாங்க முடியாத கடன் சுமையில் மூழ்கி இருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமாக இருந்தால், இந்தப் பிரச்சினை தீர வேண்டும். அதை அவர்களும் உணர்ந்து கொண்டுள்ளார்கள் - என்றார். (வ-5)

கோடிபதி ශනිදා
சீட்டிழுப்பு வாரம்: 169
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 30.07.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 96,172,992/-
J 23 27 43 80
07 26 39 57

Galaxy Star
வெற்றி வாரம் 181
திகதி 2017.07.30
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
12 19 25 39 54
34 46 51 58
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 463, 788/-
2017.08.02 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
திகதி 30.07.2017
வெற்றி வாரம் 2165
வர்ணம் ஊதா
விருட்சிகம்
வெற்றி இலக்கங்கள்
12 20 21 52
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 000, 000/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
05 18 36 47
2017.08.01 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

## மரண அறிவித்தல்



### திருமதி ரதிதேவி சத்தியலிங்கம்

V.T.செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரதிதேவி சத்தியலிங்கம் நேற்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாள முத்தையா - சுந்தரம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சற்குரு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சற்குரு சத்தியலிங்கம் அவர்களின் அன்புமனைவியும் லதீனன் (மேற்பார்வையாளர் Sierra Telecom ) அவர்களின் பாசமிகு தாயாரும் லிங்கேஸ்வரி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அவர்களின் அன்புமாமியும் தபிரா வின் அன்பு அப்பம்மாவும் காலஞ்சென்ற பரஞ்சோதியின் (பண்டா) அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், நாகலக்ஷ்மி (மண்டைதீவு) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.T செல்லத்துரை வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
021 223 0718

தகவல்:
மகன் (லதீனன்)
மருமகள் (லிங்கேஸ்வரி)

**தென்னங்காணி தேவை**

எழுதுமட்டுவாள், பளையை அண்மித்த பிரதேசத்தில் 10 ஏக்கர் தென்னங்காணி தேவை.

தொடர்பு - 077 978 9223
021 205 2200



# ஜேர்மனி இரவு விடுதியில் சூடு அப்பாவிகள் இருவர் சாவு

ஜெர்மனியின் இரவு விடு தியில் மர்ம நபர் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூட் டில் அப்பாவி மக்கள் இருவர் உயிரிழந்தனர்.

தெற்குஜேர்மனியில் உள்ளகான்ஸ்டன்ஸ்நகரி லேயேஇந்தத்தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது. இருவர் உயிரிழந்தனர். நால்வர் காயங் களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். இது ஓர் தீவிரவாதத் தாக்குதலாக இருக்கலாம் என்றகோணத்தில்விசாரணை கள்நடைபெற்று வருகின்றன. (ம)

## கொக்குவிலில்...

மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

கடந்த 5 நாள்களுக்குள் பொலிஸார் மீது இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டமை யாழ். குடாநாட்டு மக்களிடையே பயத்தை யும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதியை இலக்கு வைத்தான துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து பொலிஸார் மீதான இந்தத் தொடர் தாக்குதல்கள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கியுள்ளது.



இந்தச் சம்பவத்தில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மன்னாரைச் சேர்ந்த சுரேந்திரன் (வயது26), அநுராதபுரத் தைச் சேர்ந்த தம்மிக்க ரத்நாயக்க (வயது30)



என்ற இருவருமே படுகாயமடைந்த நிலை யில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட கும்பல் ஆவாக் கும்பலாக இருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

'கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இருவரும், கொக்குவிலைச் சேர்ந்தவருக்கு அழைப்புக் கட்டளை வழங் குவதற்காகச் சென்றுள்ளனர். இளைஞர்கள் சிலர் நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் வாள்களுடன் நிற்பதாகப் பொலிஸாருக்கு இதன்போது கூறப்பட்டுள்ளது. இளைஞர்கள் நின்ற இடத்தை நோக்கிப் பொலிஸார் சென் றுள்ளனர். அவர்கள் கும்பலாக நிற்பதைக் கண்டு, பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுப்பதற்காக அந்த இடத்தை விட்டு பொலி ஸார் இருவரும் நகர முற்பட்டுள்ளனர். பொலி ஸாரை வாள்வெட்டுக் கும்பல் கண்டுவிட்டது.

மோட்டார் சைக்கிளில் பொலிஸார் அங்கி ருந்து வேகமாகப் புறப்பட்டுள்ளனர். வாள் வெட்டுக் கும்பலும் அவர்களைக் கலைத்துக் கொண்டு சென்றுள்ளனர். சாலை முடக்கில் திரும்புவதற்காகப் பொலிஸார் மோட்டார் சைக்கிள் வேகத்தைக் குறைத்த கணத்தில், வாள்வெட்டுக் கும்பல் பொலிஸாரை முந்திச் சென்று கலைத்துக் கலைத்து அவர்கள் மீது சரமாரியாக வாளாலும், கைக்கோடரியாலும் வெட்டியுள்ளனர். தாக்குதலில் நிலைகுலைந்த பொலிஸார் கீழே விழுந்துள்ளனர். பொலிஸா ரைக் கடுமையாகக் காயப்படுத்திவிட்டு வாள் வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள் ளது.

படுகாயமடைந்த பொலிஸார் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் முச்சக் கர வண்டியில் கொண்டு வந்து சேர்க்கப்பட் டனர். சுரேந்திரன், அதிதீவிர சிகிச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார். இருவரது உடல் நிலையிலும் நேற்று மாலை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் நடைபெற்ற பின்னர் அந்தப் பகுதி யில் பெருமளவு பொலிஸார் களமிறக்கப்பட்டு விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டன. வாள்வெட்டுக்கும்பல் அடையாளம் காணப் பட்டுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்வ தற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டு நடத்திய கும்பல் இரண்டு பிரிவாகப் பிரிந்து 6 மோட்டார் சைக் கிள்களில் 18 பேர் சுன்னாகம் பகுதி நோக்கியும் 4 மோட்டார் சைக்கிள்களில் 12 பேர் இணுவில் ஊடாகவும் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் நேற்றி ரவு தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 26ஆம் திகதி நெல்லிய டிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் தமிழ் பொலிஸ் அதிகாரி வீடு திரும் பிக் கொண்டிருந்த போது இனந்தெரியாத கும்பல் அவரைத் தாக்கியிருந்தது.

(வ-5-4-8-26-101)

## தெற்கில்...

கள் முன்னரை விடத் தற்போது ஒரு படி அதி கரித்துள்ளன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பருத்தித்துறை திக்கம் கலாசார மண்டபத்தில் பிரதேச இளையோருடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதில் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சர வணபவன், மாகாண சபை உறுப்பினர்க ளான சிவயோகன், ச.சுகிர்தன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். அதில் சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலுந் தெரி வித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் இருந்ததை விட ஒரு படி அதிகரித்துள்ளன. பொலிஸார் மீது நேற்று வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடுகள் உயிரிழப்புக்கள் என்பன வன்முறைகள் அதிகரித்த தன்மையைக் காட் டுகின்றன. தென்பகுதியில் குழப்பத்தை ஏற்ப டுத்தவே யாழ்ப்பாணத்தில் இவ்வாறு வன்மு றைகள் கட்டவிழ்த்துவிடப்பட் டுள்ளன.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வின் அவசரப்பட்ட கருத்து வெளிப்பாடுகள் இதனுடன் தொடர்புபடுகின்றன. யாழ்ப்பா ணத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று மகிந்த கூறுகிறார். யாழ்ப்பாணத்து வன்முறைகள் தொடர்பில் அவர் தீவிரமான போக்கைக் கொண்டுள்ளார் என்பது அவரது கருத்துக்களின் ஊடாகப் புலப்படுகிறது - என் றார்.

இதுதவிர, பருத்தித்துறை துன்னாலை யில் மணல் கடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படும் இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டி ருந்தார். அந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குடும்பத்தவர்க ளுடன் கலந்துரையாடினார். அங்கு கூடிய இளைஞர்கள், "பொலிஸாரால் தமக்குப் பாதுகாப்பில்லை. வெளியே நடமாட முடியவில்லை. குற்றச்சாட்டுக்கள் சுமத்திக் கைது செய்கின்றனர்" என்று சுமந்திரனிடம் முறையிட்டனர்.

அது தொடர்பில் கலந்துரையாடியபின்னர், சட்டம் ஒழுங்கு அமைச்சருடன் பொலிஸார யும் இங்குள்ள பொது இடத்துக்கு அழைத்து இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி சுமுகமான நிலையை ஏற்ப டுத்துவது தொடர்பில் அடுத்த வாரம் நடவ டிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

(4-26)

## ராஜீவ்...

இலங்கை - இந்திய உடன்பாடு கைச்சாத்தி டப்பட்டு 30 ஆண்டுகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. இது தொடர்பில் இந்திய ஊடகமான 'தி இந்து' ஆங் கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டிருக்காவிடின், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக் கும்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசின் முயற்சியின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியும் என்ற நம் பிக்கை உள்ளது.

ஒரு காத்திரமான, கணிசமான அதிகாரப்பகிர் வானது, மக்களுக்கு சுயாட்சி உணர்வை யும், நாட்டுடன் இணைந்திருக்கும் உணர் வையும், நாடு தம்முடன் இணைந்திருக்கிறது என்ற உணர்வையும் கொடுக்கும்.

இலங்கை மீதான இந்தியாவின் அக்கறை தனியே பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. தனது அண்டை நாட்டில் இன்னமும் நீடிக்கும் தமிழர்களின் பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்கான பொறுப்பும் தமக்கு உள்ளது என்ற பலமான உணர்வும் அதற்கு உள்ளது - என்றார். (த-5)

## அரசின்...

கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அமைச்சர் சாகலவின் இந்தக் கருத்துத் தொடர்பில் செய் தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக் கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையின் ஜூலைக் கலவரத்தில் வெறு மனே 7 தமிழர்களே உயிரிழந்துள்ளனர் என்றால் சாதாரண பொதுமக்கள் கூடக் கேவ லமாகச் சிரிப்பார்கள். எனக்குத் தெரிந்த வரை யில் அந்தக் கலவரத்தில் பலர் கொல்லப்பட்ட னர். 7 தமிழர்கள்தான் கொல்லப்பட்டனர் என யார், எப்போது, எங்கு, என்ன நோக்கத் துக்காகக் கூறினார்கள் என எனக்குத் தெரி யாது.

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் நான் கொழும்பில் இருந்த போது கொள்ளுப் பிட்டியில் சின்னத்துரை என்பவரது மகனை காருடன் பெற்றோல் ஊற்றிக் கொளுத்திக் கொன்றனர். இவ்வாறு பல சம்பவங்கள் உள் ளன. எனவே ஜூலைக் கலவரத்தில் 7 பேர் தான் கொல்லப்பட்டனர் என்பது முற்றிலும் தவறான கருத்தாகும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-8)

## அதிரடிப்படை...

ருந்தது அதில் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்திருந்தார். கடந்த 26ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகு தியில் வைத்து தமிழ் பொலிஸ் அதிகாரி மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல் நடத்தியி ருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், கொக்குவில் பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த பொலிஸார் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மானிப்பாயில் இளைஞர் மீதும் வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது. இந்தத் தொடர் சம்பவங் கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு, வாள்வெட்டுக் குழுக்களைக் கைது செய்வதற்காக அதிரடிப்படையின் அதி சிறப்பு படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கொழும்பிலி ருந்து யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(வ-5-26)

## மாகாண...

ரங்களை நடுவண் அரசு மீளப் பெற முடி யாது. அதனை நடுவண் அரசு பயன்படுத்த முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால் அதற்கு சிறப்பு ஒழுங்கமைப்புக்கள் உண்டு. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். செனட்டிலும் மூன் றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மாகாணத்தில் நடைமு றைப்படுத்துவதற்கு முன்னதாக, அந்த மாகா ணத்தின் செனட் உறுப்பினர்களில் பெரும் பான்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் படிமுறைகள் ஊடாக, நடுவண் அரசு மாகாணத்தில் ஒரு சட்டத்தை செயற்படுத்த முடியும். இந்த ஒழுங்குகளே புதிய அரசமைப் பில் உள்ளடக்கப்பட்டுள்ளன- என்றார்.

(வ-5)

## வலிந்து...

வர் மகிந்த ராஜபக்சவுக்குத் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ச தனது கீச்சகத்தில், நாட்டின் நலனுக்காக யாருடனும் பேச்சு நடத்தத் தயார், என்று குறிப்பிட்டிருந் தார்.

இந்தக் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இல்லை உங்களது உதவிக்கு நன்றி. நிச்சய மாக இந்த நாட்டை எவ்வாறு ஆட்சி செய்வது என்பது குறித்து உங்களது ஆலோசனை தேவையில்லை. நீங்கள் ஏற்படுத்திச் சென் றுள்ள குழப்பங்களைப் பாருங்கள். அதனை நாமே தீர்த்து வருகின்றோம்' என்று சாட்டை யடி கொடுத்துள்ளார் மங்கள.

(வ-5)

## தனு ரொக்...

சென்ற கும்பல் நேற்று மதியம் வாளால் வெட் டினர். வாள்வெட்டில் தனு ரொக் குழுவைச் சேர்ந்த தனு என்ற இளைஞரே படுகாயம டைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

"தனு ரொக் குழுவைச் சேர்ந்த தனுவை நேற்று முற்பகல் 11 மணிக்கு மோட்டார் சைக் கிள் வாள்வெட்டுக் கும்பல் சென்று தேடியுள் ளது. இதன் பின்பு அந்தக் கும்பல் அங்கிருந்து சென்றுள்ளது. பிற்பகல் 2.30 மணியளவில் வாள்வெட்டுக் கும்பல் மீண்டும் மானிப் பாய்க்கு வந்துள்ளது. தனு ரொக் தனது வீட் டிலிருந்து சிறிது தொலைவில் உள்ள ஆலயத் தில் இன்னொரு இளைஞனுடன் கதைத்துக் கொண்டு நின்றுள்ளார். இதன்போது மோட் டார் சைக்கிள்களில் சென்ற வாள்வெட்டுக் கும்பல் தனுவைக் கலைத்துக் கலைத்து வெட்டியுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டார். இந்த வாள்வெட் டுக் குறித்து 2 முறைப்பாடுகள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்குக்கு கிடைத்துள்ளன. அவை மோதலில் ஈடுபட்ட இரு தரப்பைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்டன" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-5-4-8)

## பயங்கரவாத....

சாட்டில் இராசவலன் தவரூபன், புருசோத்த மன் அரவிந்தன் ஆகியோரும் 4 பொலிஸா ரின் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் கலிங்கன் விஜயகுமார், லக்ஸ்மன் மோகன் ஆகியோர் அநுராதபுரம் சிறைச் சா லையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம்சுபேந்திரராஜாஅல்லதுராஜா, மகேந்திரன்மதனி, முத்துசிவம்சிவானந்தன், பி.மனோகரன், யோகராஜா நிரோஜன், ஆகி யோர்கொழும்புமகசின்சிறைச்சாலையிலும் சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் தங்காலை சிறைச்சாலையிலும் கந்தையா இளங்கோ, வைரமுத்து சரோஜா ஆகியோர் காலி சிறைச் சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

ஏ.அருள்பிரகாஸ், ஐ.ஜெகன், என்.சிவலிங் கம், ஜி.தர்ஷன் ஆகியோர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும், எம்.சுலக்ஸன், எஸ். தில்லைராஜ், நந்தராசா சரவணபவன், ஆர். டி.தர்மதாஸ, அந்தோனிப்பிள்ளை மரியசீ லன், எஸ்.ஜெயச்சந்திரன் ஆகியோர்அநுராத புரம்சிறைச்சாலையிலும்தடுத்துவைக்கப்பட் டுள்ளனர். (வ)

# தெல்லிப்பழை யூனியன் மாவட்டச் சம்பியன்





யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாண வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட வலைப் பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதல் பாதியின் முடிவில் யூனியன் அணி 16:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது.
அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்க வைத்து முடிவில் 34:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
முதன்மை விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலளர் திருமதி சுபாசினி மதியழகனும், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் வேணுகா சண்முகரெத்தினமும், பவுண்டேசன் ஒவ்குட்நஸ் நிறுவனத்தின் வடக்கு மாகாணத்தின் இணைப்பாளர் எட்வேட் எடினும் கலந்துகொண்டனர். (ம-23)



# தேசிய கரம் தொடரில் வடக்குக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
தேசியமட்ட கரம் தொடரில், பெண்கள் பிரிவு குழுநிலை ஆட்டத்தில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளது.
கொழும்பு விளையாட்டு அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் இந்தத் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாணத்தைப் பிரநிதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய பெண்கள் அணி, ஊவா மாகாகணத்தைப் பிரநிதித்துவப்படுத்திபங்குபற்றிய அணியை 3:0 என்ற செற் கணக்கில் வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது. (ம-23)

## யாழ்ப்பாணப் பல்கலை மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி தனதாக்கியது.
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வலைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 32:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# விண்மீன் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜூலை 31
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி கிண்ணம் வென்றது.
நண்பர்கள் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் பல நிமிடங்கள்வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.
21ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் அணி வீரர் டேமியன் தனக்கு கிடைத்த வாய்ப்பைச் சரியாக பயன்படுத்தி கோலாக்க முதல் பாதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் பதிலடி கொடுப்பதற்கு யங்கம்பன்ஸ் அணி பலமுறை முயற்சித்தது. எதுவும் பயனளிக்கவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மகுடம் சூடியது விண்மீன் அணி. தொடராட்ட நாயகன் மற்றும் சிறந்த கோல் காப்பாளராக யங்கம்பன்ஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த வீரர்களான தர்சன் மற்றும் மகிந்தன் ஆகியோரும் சிறந்த பின்கள வீரராக பலாலி விண்மீன் அணியை பிரதிநிதித்துவம் செய்த ஜோன்கெனடியும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-422)



## பி.வி.சிந்து முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை
பன்னாட்டுப் பூப்பந்தாட்டத் தரப்படுத்தலில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து ஐந்தாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

**ரி-20 துடுப்பாட்டம்**
புதுக்குடியிருப்பு மத்திய சமூதாயக் கழகத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அழைக்கப்பட்ட கடினப் பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தோழர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வித்தியா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை டைமன்ட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்**
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மைக்கல் வி.க. கால்பந்தாட்டம்**
உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-108,23)

## டயமன்ஸ், நீக்கிலஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 31
உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், டயமன்ஸ், சென். நீக்கிலஸ் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.


இரண்டாவது காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-10-23)

## வசந்தசிறி இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 31
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் வசந்தசிறி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி 10:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## வெற்றிகள் குவியும் என்கிறார் நெய்மர்




நடப்புப் பருவ காலத்திலும் அதிக வெற்றிகளைக் குவிக்க முடியும் என்ற நம்பிக்கையை பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் வெளிப்படுத்தினார்.

ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான நடப்புப் பருவகாலத்துக்கான தொடர் (2017 - 2018) தற்போது ஆரம்பமாகியுள்ளது. ஸ்பானியக் கழகமான பார்சிலோனா தனது பயிற்சி முகாமை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது. இந்த நிலையில் இந்தப் பருவகாலம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த பருவகாலம் எமக்குச் சிறப்பாக அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் லா லிகா மற்றும் சம்பியன்ஸ் லீக் கிண்ணங்களைத் தவறவிட்டமை வருத்தத்துக்கு உரியதே. தோல்விகளில் இருந்து மீண்டு வந்துள்ளோம். இந்தப் பருவகாலத்தில் அதிகளவில் வெற்றிகளைக் குவிக்க முடியும்" என நெய்மர் மேலும் தெரிவித்தார். (ம)

### ரொனால்டோ இல்லாத மட்ரிட்டை

## பந்தாடியது பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களான பார்சிலோனாவுக்கும், ரியல் மட்ரிட்டுக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா வெற்றிபெற்றது.

அமெரிக்காவின் மியாமி நகரில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. ஆட்டம் ஆரம்பித்த மூன்றாவது நிமிடத்திலேயே பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் மெஸ்ஸி. ராகிடிக் 7ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். ஆட்டம் பதின்ம நிமிடங்களை அடைவதற்குள் பார்சிலோனா 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. 14ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்தார் மாற்ரோ கொவசிக். அசென்சியோ வில்லியம்சன் 36ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்த்ார். முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 50ஆவது நிமிடத்தில் பக்கியோ. பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். பதிலடி கொடுப்பதற்கு ரியல் மட்ரிட் பலமுறை முயன்றது. எதுவும் பயனளிக்கவில்லை. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி தோல்வியடைந்தமைக்கு அந்த அணியின் முன்னணி வீரரான ரொனால்டோ களமிறங்காதமையே முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. (ம)

## ஐக்கியம் வி.கழகம் இறுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31
பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கபடித் தொடரில் பருத்தித்துறை ஐக்கிய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் பாதியின் முடிவில் 25:20 என்று ஆதிக் கம் செலுத்தியது ஐக்கியம். அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்க வைத்து முடிவில் 57:46 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23,108)

## சின்சினாட்டி தொடரால் தரப்படுத்தல் மேம்படும்

### செரபோவா நம்பிக்கை

பன்னாட்டுத் தரப்படுத்தலில் தற்போது 173ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளவரான செரபோவா", "சின்சினாட்டித் தொடரால் தனது தரப்படுத்தல் மேம்படும்" என்று தெரிவித்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டின் ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியில் மெல்டோனியம் என்ற ஊக்கமருந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து இரண்டு வருடங்கள் செரபோவாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையால் செரபோவா தரப்படுத்தலில் மிகவும் பின்தள்ளப்பட்டார். முதல் 250 இடங்களுக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டார். தடைக்காலம் முடிந்து கடந்த ஏப்ரலில் மீண்டும் களமிறங்கினார். சில ஆட்டங்களில் விளையாடியதை அடுத்து 173ஆவது இடத்துக்கு முன்னேறினார். பின்னர் காயம் காரணமாக மீண்டும் விலகினார். தற்போது காயம் குணமடைந்ததை அடுத்து இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள சின்சினாட்டித் தொடரில் களமிறங்குவதை உறுதிசெய்துள்ளார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே செரபோவா இவ்வாறு குறிப்பிட்டார்.

"அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான ஓர் படிநிலையாகவே சின்சினாட்டி உள்ள போதிலும், தனிப்பட்ட முறையில் இந்தத் தொடர் எனக்கு முக்கியமானது. தரப்படுத்தலில் இழந்த எனது இடத்தை மீட்டெடுக்க ஒவ்வொரு தொடரும் எனக்கு முக்கியமானது. அந்த வகையில் சின்சினாட்டித் தொடரும் முக்கியம் வாய்ந்தது" என செரபோவா மேலும் தெரிவித்தார். (ம)



## மிகவும் சவாலானவர் பெவன் கில்கிறிஸ்ட்டின் கணிப்பு இது

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், இலக்குக் காப்பாளருமான கில்கிறிஸ்ட், தான் இலக்குக் காப்பில் ஈடுபடுவதற்கு மிகவும் சிரமப்பட்ட பந்துவீச்சாளர் என்றால் அது மைக்கல் பெவன்தான் என்று தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் 1995ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையிலான காலத்தை எடுத்துக் கொண்டால் மறக்க முடியாத வீரர்களில் ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், மைக்கல் பெவன் ஆகியோர் முக்கியமானவர்கள். மைக்கெல் பெவன் சேஸிங்கில் மன்னாதி மன்னனாக திகழ்ந்தார். இவர் களத்தில் இறங்கிவிட்டால் பந்து வீச்சாளர்கள்பாடு திண்டாட்டம்தான். அவரை ஆட்டமிழக்கச் செய்தால் மட்டுமே எதிரணி வெற்றிபெற முடியும் என்ற நிலையை உருவாக்கினார்.

மைக்கல் பெவனை எல்லோருக்கும் துடுப்பாட்ட வீரராகத்தான் தெரியும். ஆனால் இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர் சிறப்பாக பந்து வீசும் திறமையும் கொண்டவர். இவர் பந்து வீசும்போதுதான்' தான் இலக்குக் காப்பில் ஈடுபட மிகவும் சிரமத்தை எதிர்கொண்டார் என கில்கிறிஸ்ட் ஆஸ்திரேலிய ஊடகமொன்றிடம் அண்மையில் தெரிவித்தார்.



இதுகுறித்து கில்கிறிஸ்ட் மேலும் தெரிவிக்கையில்: "பெவன் பந்து வீச்சால் புகழ்பெற்றவர் அல்ல. துடுப்பாட்டத்தில் மிகச்சிறந்த வீரராக திகழ்ந்தார். சில நேரம் முக்கியமான இலக்குகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு உதவியுள்ளார். ஒரு இலக்குக் காப்பாளராக மைக்கல் பெவனின் பந்துவீச்சை எதிர்கொள்வது மிகக்கடினமாக இருந்தது". என கில்கிறிஸ்ட் மேலும் தெரிவித்தார். (ம)



# டினேஸ் சந்திமல் 'ரெடி'

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணியில், அந்த அணியின் தலைவர் சந்திமல் விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் காலியில் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. சந்திமல் விளையாடவில்லை. இந்தியா அபார வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம், கொழும்பில் எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணியில் சந்திமல் விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாவது நாளில் கேரத் காயமடைந்தார். இதனால் அடுத்த ஆட் டத்தில் அவர் களமிறங்குவது தொடர்பில் உறுதியற்றநிலைப்பாடுஉள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி பகுதியில் இயங்கிவரும் முதற்தர உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணி நிலைக்குரிய பணியாளர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்.

1) உணவு தயாரிப்பாளர் (குக்)
2) கொத்து, பிறைட்றைஸ் தயாரிப்பாளர்
3) றொட்டி வேலை, சிற்றுண்டிகள் தயாரிப்பாளர்
4) உணவு பரிமாறுபவர்
5) சமையல் உதவியாளர்

T.P : 077 6491 027, 077 9400 963

**வேலை வாய்ப்புக்கள்**

213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "லிங்கன் கிறீம் ஹவுஸ்" நிறுவனத்தில் காசாளர், சிட்டை எழுதுநர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற, ஓய்வுபெற்ற அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயதெல்லை 35 - 65
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிறுவுனர்: லிங்கன் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 221 6660

# பேர்ள்ஸ் போய்ஸ் அணி கிண்ணத்தை வென்றது




யாழ்ப்பாணம், ஜூலை 31
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய வடமராட்சி பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் பேர்ள்ஸ் போய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் பேர்ள்ஸ் போய்ஸ் அணியை எதிர்த்து வடஸ்ரகர் அணி மோதியது.
முதல் பாதியின் முடிவு வரை எந்த அணியாலும் கோலைதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது. ஆட்டம் நிறைவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது பேர்ள்ஸ் போய்ஸ் அணி வீரர் சஞ்சீவ் ஒரு கோலைப் பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது பேர்ள்ஸ் போய்ஸ் அணி.
ஆட்ட நாயகனாக பேர்ள்ஸ் போய்ஸ் அணி வீரர் சஞ்சீவ், தொடராட்ட நாயகனாக நோத் செவின் ஸ்ரார் அணி வீரர் தார்மிகன் சிறந்த பின்கள வீரராக வடஸ்ரகர் அணி வீரர் அனுசாந் , சிறந்த கோல் காப்பாளராக வடஸ்ரகர் அணி வீரர் இனியவன், சிறந்த கோலைப் பதிவு செய்த வீரராக புளுரொக்கற் அணி வீரர் ரஜீ, சிறந்த முன்கள வீரராக வடஸ்ரகர் அணி வீரர் துசிகரன் ஆகியோர் தெரிவாகினர்.
நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.
(ம-422)

**யாழ் மதர் கெயார் (Pvt) Ltd**

நவீன உபகரணங்களின் உதவியோடு விசேட வைத்திய நிபுணர்களினால்,
யாழ் நகரில் **பற்சிகிச்சை**

- பல்கிளிப் போடுதல்,
- நிரந்தர பல்கட்டுதல்,
- பல் வெண்மையாக்கல்,
- இடைவெளி சீராக்கல் உட்பட

சகல "பல், வாய்" சிகிச்சைகளும் ஓரிடத்தில்



Contact No.077 220 2769 / 077 375 4490

# கோக்லி சாதனை



இந்திய அணியின் தலைவர் கோக்லி, காலி டெஸ்ட் ஆட்டத்தில் சதம் விளாசியதன் மூலம் குறைந்த இன்னிங்ஸில் பத்து சதங்களை விளாசிய இந்திய அணித்தலைவர் என்ற அடைவை நிலைநாட்டினார்.
இந்த டெஸ்ட் சதம் ஒட்டுமொத்தமாக 17ஆவது டெஸ்ட் சதமாகவும், தலைவர் என்ற வகையில் 10ஆவது சதமாகவும் கோக்லிக்கு அமைந்தது. இந்த 10 சதங்களை கோக்லி தனது 44 இன்னிங்ஸில் பெற்றார். முன்னதாக அசாருதீன் 68 இன்னிங்ஸில் 10 சதங்களை அடித்திருந்தார். இந்த அடை வைக் கோக்லி முறியடித்தார். (ம)

**80 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

**முத்து விழா**




இன்று (31.07.2017) திங்கட்கிழமை
80 ஆவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடும்

**திருமதி ஐயாத்துரை அரியமணி**

முத்தான எம் அம்மாவே!
முத்து விழா காணும் இந்தவேளையில்
எம்சொத்தாக இன்னும் பல காலம்
சுகத்துடனும், மகிழ்வுடனும் வாழ்கவென
வாயார வாழ்த்தி இறைவனை மனதார
வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
077 773 2561



காலி டெஸ்ட் ஆட்டம் இந்திய அணியின் சகலதுறை வீரரான ரவிச்சந்திரன் அஸ்வினின் 50ஆவது டெஸ்ட் ஆட்டமாக அமைந்தது. ஆட்டம் முடிந்த பிற்பாடு இதற்கான நினைவுச் சின்னமொன்று அஸ்வினுக்கு வழங்கப்பட்டது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.